உ

ஸ்ரீராமஜெயம்.

ஏகாதசி மகத்துவம்

என்னும்

# உருக்குமாங்கதன்

## நாடகம்.

ஆசிரியர்:

அ. கந்தசாமிக் கவிராயர்,

விருதுநகர்.

பப்ளிஷர்:

பெ. வரத்தால்பெரியவ நாடார்,

விருதுநகர்.

உண்மைவிளக்கம் பிரஸ்,

விருதுநகர்.

1935.

[illegible]] யுவஹு ஐப்பசிமீ 23உ [அணா 4.

16 NOV 1935

O-,2MKK,R.
N35

18 NOV 1935

உ
ஸ்ரீராமஜெயம்.

# உருக்குமாங்கதன்
## நாடகம்.

இஃது
விருதுநகர், சங்கீத ஸாஹித்ய வித்வான்
மகா-ா-ா-ஸ்ரீ
அ. கந்தசாமிக் கவிராயரவர்களால்
இயற்றப்பெற்று,

விருதுநகர், நாடார்கள் பஜனாலயத் தலைவரும்,
தேவாலய ஓதுவாருமாகிய
மகா-ா-ா-ஸ்ரீ
பெ. வரத்தால்பெரியவ நாடார் அவர்களால்

விருதுநகர்,
உண்மைவிளக்கம் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றது.
1935.
கிரையம்.] யுவ ஹு ஐப்பசிமீ 23உ [அணா 4.



அ. கந்தசாமிக் கவிராயர், விருதுநகர்.

# முகவுரை.

உலகின்கண் வசித்துவரும் மனுமக்கள் சாக்ஷாத் சர்வேஸ்வரன் கருணையைப் பெறுவான் வேண்டிப் புரிபணிகளில் உபவாச விரதமும் ஒன்றும். விரதானுஷ்டான விதிகள் புராணங்களில் கூறப்பட்டிருக்கின்றன. திருமாலாகிய தெய்வபக்தி நியதி விரதமாய்த் திகழ்ந்துவருவது ஸ்ரீ வைகுந்த ஏகாதசியென்று சொல்லப்படும் புண்ணிய விரதமே. மாதமிருமுறையாய்ப் பூர்வ–அமர பக்கங்களில் நிகழ்வதாகிய ஏகாதசிகளில் மார்கழி மாதத்தில் வரும் பூர்வபக்க ஏகாதசியே மேற்சொல்லிய வைகுந்த ஏகாதசி. அமாவாசை–பௌரணை கடந்த பதினோராவது தினமே ஏகாதசி. ஏகம்–ஒன்று, தசம்–பத்து; தசமி தொடங்கி ஏகாதசி தினம் வரை உணவுறக்க மின்றியிருந்து, துவாதசி முடிவு பெறுகின்ற தவம்போன்ற விரதம் இதுவே. இவ்விரத தினத்தினையே வைகுந்த ஏகாதசியென்று விஷ்ணு மதத்தினரும், சமர்த்த மதத்தினரும் கொண்டாடுவர். இத்தகைய விரதபலன் கண்டதாகக் கூறப்படும் உருக்குமாங்கத ராஜனுடைய சரித புராணத்தை மேற்படி விரத தினத்தில் புராணீகர்கள் காலக்ஷேபஞ்செய்து ஜனங்களுள்ளத்தைப் பக்தியில் படியும்படி செய்வார்கள். இவ்வனுபவந் தெரிந்துள்ள விருதுநகர் சங்கீத சாகித்ய வித்வான் அ. கந்தசாமி நாடார் தம் நுண்ணிய அறிவைச் செலுத்தி முத்தமிழி லொன்றாகிய நாடகத் தமிழில் பாடி முடிவு செய்திருக்கின்றனர். பாடல்கள் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் எளிதில் பொருள் விளங்கி நவரசங்க ளொழுகப்பெற்ற செவிச்செல்வங்களாய் மிளிர்கின்றன. ஏகாதசி மகத்துவம், ஏகாதசிப் புராணமென்னும் முதனூல்களாகிய இவற்றில் சிறிது வேறுபாடு தோன்றும். அரசி, தாதி அல்லது வண்ணாப்பெண் இவர்களிடம் ஏகாதசி விரதப்பலன் அவர்களை அறியாது வந்துசேர்ந்து பூலோகம் வந்துள்ள வானமாதர்கள் சொர்க்கலோகம் போதும்படி செய்த சக்தியுடையதென்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அனுஷ்டிப்போர் நாகலோகம் புகுவதற்கின்றி புண்ணியலோகம் சேர்வார்கள் என்பதைக் குறிப்பிட்டிருக்கின்றது. பிடித்த விரதத்தை விடக்கூடாது என்ற முதுமொழிப்படி மோகனப்பெண்ணிடம் சிக்கிய ருக்குமாங்கதன் சாதித்த சாதனையையும், மனைவி மைந்தர் பொருள் யாவும் எம்பெருமானாகிய உனதடி

வணக்கத்திற்கு மேற்பட்டதில்லையெனும் பக்தன் மொழியையும் நிலை நாட்ட, மகன் தலையை மன்னன் வெட்டத் துணிந்ததாகவும் சொல்லியிருக்கின்றது. இத்தகைய பக்தி நூலையும், இதுபோன்ற நூல்களையும் மேற்படி உபவாச தினத்தில் பாடிப் படித்துவரும் வழக்கத்திற் கிழுக்கில்லை யென்பதே எமது துணிபு.

ஒருவர் ஒரு பொருளைத் தேடுவது பெரிது; அப்பொருளை உலகெங்கும் விளங்கப் பிரகாசப்படுத்துவது அதனினும் பெரிதென்ற முதியோர் வாக்கியத்திற் கிலக்காய் மேற்சொல்லிய கவியாளர் பாடிய பாடல்கள் உலகப்பிரசித்தியாகும்படி முன்வந்தவர் திறம் புகழ்தற்குரியதே. தமது குருவாய் விளங்கியவர் பாடிய நூற்களை அச்சிடும் பணியில் ஈடுபெற்றோர் வாத்தாற்பெரியவ நாடாராவர். இவர் சத் காலக்ஷேபத்திற்குரிய சங்கீத வனப்புடன் கதாப் பிரசங்கஞ் செய்பவர். அரவக்குறிச்சி ஸ்ரீலஸ்ரீ சங்கீதம் மாரியப்பசாமி, சிங்கம்புணரி ஸ்ரீமான். கவிராஜ முத்துவடுகசுவாமி அவர்கள் குமாரர் திரு. சேவகப்பெருமாள் கவிராயர் ஆகியவர்களிடங் கற்றுக்கொண்டவரும், விருதுநகர் நாடார் உறவின்முறை ஏற்றுக்கொண்டதான பஜனையாசிரியரும், தேவாலயங்களில் துதிபாடல்கள் பாடும் ஓதுவாரும், கல்லூருணி வாசியாய் அந்நகர் நாடார்கள் பொதுத் தர்ம விஷயங்களி லீடுபட்டு சீர்திருத்தஞ் செய்துவந்த கண்ணியரான ஸ்ரீமான் பெரியசாமி நாடார் என்பவர் திருமைந்தரு மாவர்.

இத்தகைய துணிவுடையாரையே இவ்வுலகம் விரும்புகின்றது.

வே. ஆ. குமரய்ய நாடார்,
பெருநாழி.

விருதுநகர்,
7—11—'35.

# சாத்துக் கவிகள்.

பெருநாழி, தமிழ் வித்வான், மகா-ள-ள-ஸ்ரீ

## வெ. ஆ. குமரய்ய நாடாரவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பாலாழி யமரர்கடை. தினமெனுமே காதசியின் பயனைத் தேர்செங்
கோலாழி யேந்துருக்கு மாங்கதனின் சரிதமதைக் குவளைக் கண்ணார்
காலாழிச் சிலம்பொலிக்கத் திகழ்வீதி யணிவிருதூர்க் கந்த சாமி
மாலாழிக் காதலத்தான் நாடகமாம் பாவகையில் வழுத்தி னானே.

வேறு.

சிரத்தா லுலகந் தொழுதேத்துந் தேவன் கருணை யருள்விரதம்
குரத்தாற் றாளி யெழுவெழுமாக் கோவா மொருவன் கொண்டசெயல்
தரத்தாற் பெரியன் விருதுகந்த சாமி யுரைக்கக் கல்வாவி
வரத்தாற் பெரியன் கதைவிரிக்கும் வல்லான் பரப்பும் வரம்பெற்றான்.

---

விருதுநகர், சச்சிதானந்த அச்சியந்திரசாலைத் தலைவரும்,
மதுரைத் தமிழ்ச்சங்கத்து மெம்பருமான

## ஸ்ரீமான். இராமலிங்கக் குருக்களவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

எத்தினமு முத்துவடி வேந்தரெலாம் வந்துதொழு மிறைவன் எழு
தத்துபரித் தேருடையான் குலத்துருக்கு மாங்கதனின் றவநோன் பாக
சித்தமுவந் தினிதுபுரி தசமொன்று திதிவிரதஞ் செய்த காதை
புத்தமுத மெனவிருதைக் கந்தசா மிக்கவிஞன் புகன்றிட் டானே.

---

விருதுநகர், உண்மைவிளக்கம் பிரஸ் புரோப்ரைட்டர்

## ஸ்ரீமான். பூ. மு. நாச்சியப்ப நாடாரவர்கள் இயற்றிய

வெண்பா.

மண்மீதோர் போற்றுருக்கு மாங்கதனின் றன்சரிதம்
பண்மீதாம் நாடகச்செம் பாவிசையாய்—எண்ணரிய
விற்பனவான் கந்த சுவாமி விருதுநகர்
அற்புதன் சொன்னா னமைத்து.

கூத்திபாறை என்னும் நல்லூர், மகாவித்வான், விஸ்வச்ஞ
ஸ்ரீமாந். மதுரகவி

## முத்துகிருஷ்ண ராமாநுஜ தமிழ்ப்பண்டித ரவர்க ளியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

அற்புதம் பிலிற்று மேகா தசிமகா விரதந் தன்னை
பொற்பினு னுருக்கு மாங்க தன்புரிந் ததைடந்த வாற்றைச்
சொற்பொருள் வனப்பு மான்ற தொடைநடை வனப்பு மேன்ற
கற்பனைத் துறைகள் மண்டிக் கனிரசங் கொழிப்ப மன்னோ.

செந்தமிழ்க் கலைமா வல்ல சீரியோர்க் கரியே றன்ன
கந்தசா மிப்பேர் நாமன் கம்பனோ விவனே யென்ன
இந்தமா நிலத்தோ ருய்ய வியம்பினு னிசையைக் கேட்டே
அந்தநா ரதனு நாண மடைந்தகங் குழைந்திட் டானே.

---

குட்டுலொட்டி என்னும் அழகியநல்லூர்,
மதுரகவி அழகர்சாமி ரெட்டியார் அவர்கள் குமாரர்
வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ

## தி. அ. வேங்கடசாமி ரெட்டியாரவர்க ளியற்றிய

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

இருவாரங் களுக்கோர்கால் வருதசம்ஏ காதசம்ஏ ராறும் பக்கத்(து)
ஒருவேளை முதல்நாளுண் டரிதினமாம் இடைநாளுண் ஒழிய நோற்று
திரிநாள்வை கறையொருகால்பாரணைசெய் திங்கனனுட் டிக்கும் நோன்பால்
மருவாவால் ஞானவூ னுடற்பிணிக ளெனமதியோர் வகுத்த வாற்றல்;

தன்னுயிர்போல்மன்னுயிர்காத் தளிக்கும்உருக்மாங்கதனும் தண்கோல்வேந்-
பின்னமறஅவ்விரதம் தனைஅட்டித் "தியான்பெறும்இப்பேரின்பத்தை [தன்
இந்நிலத்தோர் எலாம்பெற்றின் புறுக"எனும் சமநோக்கால் இவண்வளர்த்த
நன்னயவ காதசிமான் மியவரலா றியலிசைநா டகம தென்றே,

ஓதரிய முத்தமிழின் உயர்நடையால் உலகர்உணர்ந் துய்யச் செய்தான்
தாதவிழ்பூஞ் சோலைபழ னம்புரிசை யாறுசெழும் தடஞ்சூழ் பெங்கும்
மீதொளிர்பல் ஆதவர்போல் மின்விளக்கம் பகல்திசிவேற் றுமையின்றச்செய்
சோதிமணி மாடவிரு தைப்பதிக்க விராசகந்த சுவாமி மாலே!

அன்னதமிழ்க் கலைக்கடலின் ஆரமுதை அனைவோரும் அள்ளி யள்ளி
உண்ணுகெனக் கடல்பெருகிப் பொழிமுகில்போல் அவ்ஆசாற் குயர்மாணுக்க
நன்மணிசங் கீதமணி நம்வரத்தால் பெரியமணி நாச்சிங் காரன்
உண்மைவிளக் கம்பதிப்பிட் டுய்த்தனன்பத் தியும்புகழும் ஓங்கு மாறே!

கூத்திபாறை, விஸ்வக்ஞ ஸ்ரீமாந். மதுரகவி முத்துகிருஷ்ண ராமாநுஜ
தமிழ்ப்பண்டிதாவர்கள் மருகரும், மாணாக்கருமாகிய
சாத்தூர், மகா-௱-௱-ஸ்ரீ

## செ. சு. முத்துசாமி ஆச்சாரியாரவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

நற்புகழ்சேர் விருதுநகர்க் கந்தசா மிக்கவிஞ னவ லோன்செய்
யற்புதங்கூர் பக்திமிகு ருக்குமாங் கதன்சரித மளவ ளாவிச்
சொற்பெறுஞ்சீர் பொருளின்ப சுரக்ஞான சங்கீதந் தொனிக்கும் பாடல்
கற்பவர்தேர்ந் திடவரத்தாற் பெரியவனச் சேற்றிநலங் கைக்கொண் டானே.

---

சென்னை, பாத சாஸ்திர சங்கீத சாஹித்திய சந்த வண்ணச் சரபம்
நாடகாசிரியர் ஸ்ரீமான்

## ச. சு. சங்கரலிங்கக் கவிராயர் அவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கண்ணியஞ்சேர் மால்ருக்கு மாங்கதனே சாதித்துக் காட்ட லான
புண்ணியவே காதசியா விரதமகத் துவந்தன்னைப் புலவர் யாரும்
நண்ணியபே ரவையிலுளா ருளங்களிக்க நாடகமாய் நவின்றான் றேனும்
பண்ணியல்பா விருதுபுனை விருதுகந்த சாமியெனும் பாவ லோனே.

---

சாத்தூர்த் தாலூகா, ஒத்தையால் மேட்டுப்பட்டி, மகா-௱-௱-ஸ்ரீ

## ர. சுப்பையாச் சாரியாரவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கற்பகநா டொத்தபதி கனம்பெருகும் விருதுநகர் கனிந்து வாழ்வோன்
கற்பகநாட் டுரியவேலா யுதனென்னு ருக்குமாங் கதன்றன் காதை
கற்பகநா ளும்புகழ்கொள் கந்தசாமி சொல்லினனக் கவியை யாரும்
கற்பகநா டிடநல்வரத் தாற்பெரிய னச்சியற்றிக் கவின்பெற் றானே.

---

விருதுநகர், க்ஷத்திரிய வித்தியசாலைத் தமிழாசிரியர்
வண்டானம், மகா-௱-௱-ஸ்ரீ

## சூ. மரியசிங்க நாடாரவர்கள் இயற்றிய

கலிநிலைத் துறை.

திருக்கு லாவிய விருதையன் றிகழ்கந்த சாமி
உருக்கு மாங்கதன் சரிதமொண் ணிசையினு லுரைத்தான்
பெருக்கு மாவரத் தாற்பெரி யானெனும் பெயரான்
செருக்கி லாதச்சி லேற்றிநற் சீர்த்தி பெற்றனனே.

தஞ்சை, தமிழ் முனிவர் இலக்கணக் கோவிந்தசாமி பிள்ளையவர்கள் மாணாக்கரிலொருவரும், சிவகாசி இந்து நாடார் பெண்பாடசாலைத் தமிழாசிரியரும் ஆகிய ஸ்ரீமாந்.

## சர்க்கரைப் புலவர் அவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கலையனந்தங் கியவிருதைக் கந்தசா மிக்கவிஞன் கனகோதண்டச்
சிலையனந்தந் திகழ்திருநா யகன்பதப்போ தெப்போதுஞ் சிரமேற்கொள்நன்
னிலையனந்தம் பெருகுருக்கு மாங்கதன்றன் பெரும்புகழை நிலவச்செய்தான்
மலையனந்தங் குறுமுனியுங் குறுகிமலை வாயிருக்க மகியின் மீதே.

---

விருதுநகர், ஜோதிடசாஸ்திரியும், தமிழ்ப்புலமையுமுள்ள மகா-௱-௱-ஸ்ரீ

## ச. சுப்பையாபிள்ளை அவர்கள் இயற்றிய

அறுசீர் விருத்தம்.

கண்ணனுக் கினிய ருக்கு மாங்கதன் கதையைக் கீத
வண்ணமா யிசைத்தான் கந்த சாமிவேள் மறையில் வல்லோர்
மண்ணவர் வானோ ரியாரு மகிழ்ந்துளங் களிக்க வாய்மை
நண்ணிய புலமை மிக்க நலந்தரும் விருதை மீதே.

---

சிங்கம்புணரி, ஸ்ரீலஸ்ரீ முத்துவடுக சுவாமி அவர்கள் குமாரர்
மகாவித்வான் ஸ்ரீமாந்.

## சேவகப்பெருமாள் உபாத்தியாயரவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பூங்கமலத் தவனையுந்தி பூத்தவனன் பால்அவனூர் புகுந்த ருக்கு
மாங்கதன மலசரித மதைதிமிர்கா மாஞான வல்லார் முற்று
தாங்கதகா லத்தொழிந்த சீவகன்மீண் டமைந்துயர்கீர்த் தனது மைப்பின்
பாங்கதுறப் படித்தனனோ வெனப்படித்தான் யாவனெனிற் பகருவேனால்;

பொறைக் கயிற்றிற் புகழைநளி புட்கரவி புகாமுதிற் புகலு மின்சொல்
விறற்கயிற்றி லெதிர்விருந்தை மீட்சிபெற வருட்குரவன் விளக்கு மோங்சன்
மறைக்கயிற்றி லலைதருதீ மனத்தைவரி விலகறுசெம் மலைமேன் மாதை
அறக்கயிற்றி லசைத்திசைமேம் படநிலவும் விருதுநகரதன்மேல் வாழ்வோன்

சலவர்தரைக் கொருபொருந ரேனும்வணங் கரியகந்த ஸாமி நாமப்
புலவனென வறிமினன்ன தமிழையச்சு வாகனமேற் பொலிய வேற்றி
நிலவுலகத் தவர்சாத நிலைதெருளத் தெருட்டிநெடு நிலமே லென்றும்
உலவவிடுத் தான்வரத்தாற் பெரியவனா டானெனுமாண் புறுநலோ னே.

ஸ்ரீவில்லிபுத்தூர் வாசியும், திருநெல்வேலி ஜில்லா ஆப்காரி சூப்பிரெண்டெண்டுமாகிய மகா கல்விச்செல்வ கனவான் ஸ்ரீமான். அருணகிரி நாடார் அவர்கள் பௌத்திரரும், ஸ்ரீமான். சற்குண நாடார் அவர்கள் புத்திரருமாகிய, பரம்பரைப்புலமை, ஆசுகவி, யமகச்சீயம் ஸ்ரீமான்

## அப்பாத்துரை நாடார் அவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

மாவானத் தான்மகியின் வளமோங்க மனைதோறு மலர்மா தாவா
மாவானத் தான்மகிழும் விருதுநகர் மகிபனண்ணு மலைவேண் மைந்தன்
மாவானத் தான்மாநேர் கந்தசா மிக்கவிஞன் மயிலோன் மெச்ச
மாவனத் தான்மதிக்கு முருக்குமாங் கதன்சரிதம் வகுத்தான் மன்னோ.

---

விருதுநகர், தமிழ் வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ

## க. சுந்தரராஜ ஆச்சாரியாரவர்கள் இயற்றிய

வெண்பா.

அண்டர் புகழுருக்கு மாங்கத னின்றொல்சீர்
கொண்ட சரிதங்கோக் கொள்ளுதற்காய் — தண்டமிழால்
ஓதுகந்த சாமிசொல்ல உண்மையச்சி லிட்டதொரு
சாதுவாத் தாற் பெரியான் றான்.

---

விருதுநகர், பௌராணிகர் மகா-ா-ா-ஸ்ரீ

## ஆ. மாரிமுத்துப் பிள்ளை அவர்கள் இயற்றிய

கட்டளைக் கலித்துறை.

உரத்தா னறஞ்செய்யு ருக்குமாங் காத னுயர்கதையைக்
கரத்தா லெழுதி யிசைத்தமிழ் செய்தனன் கந்தசாமி
வரத்தாற் பெரியவ னச்சடித் தின்னூல் வழங்கலுற்றான்
தரத்தாற் படிப்பவர் கேட்பார் பிறப்பறுஞ் சத்தியமே.

---

இந்நூலாசிரியரின் மாணவருளொருவராகிய வையூர், மகா-ா-ா-ஸ்ரீ

## வி. க. விநாயகமூர்த்தி நாடாரவர்கள் இயற்றிய

விண்ணவரா லுபாசித்து விளங்குமேகா தசிவிரத மேன்மைப் பேற்றை
மண்ணுலகி லறிந்துசெய்த மகிபன்ருக்கு மாங்கதமன் சரிதந் தன்னை
பண்ணமிர்த நாடகமா யாவருக்குங் களிதுலங்கப் பகர்ந்தா னெந்தன்
கண்ணனைய கலைக்குருவாய் வருகந்த சுவாமியெனுங் கவிச்சிம் மேறே

சின்னக்காளம்பட்டி, தமிழ் வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ

**தங்கச்சாமிக் கவிராயரவர்கள் இயற்றிய**

நிரையசைக் கட்டளைக் கலித்துறை.

தாத்தாற் பெரியவு ருக்மாங் காதமன் சரித்திரத்தைத்
திரத்தால் விருது நகர்க்கந்த சாமி செழுந்தமிழ்ப்பா
சுரத்தானன் னாடகப் பந்தா வமுதெனச் சொல்லிவைத்தான்
வாத்தாற் பெரிய னீதச்சிற் பதித்து வழங்கினனே.

---

விருதுநகர், உண்மைவிளக்கம் பிரஸ் மானேஜர் மகா-ா-ா-ஸ்ரீ

**ப. வே. ப. சந்தனமாரியப்ப ஆச்சாரியாரவர்க ளியற்றிய**

விருத்தம்.

அற்புதக்கவி ராக தாளமோ டாதி பாவனைக் குரியதாய்ச்
சொற்பொருட் சுவை யாவு மல்கிடச் சுகுணநாடக மியற்றினன்
கற்பனைக்கடல் விருதை தந்தருள் கந்தசாமிநற் கவிவலோன்
விற்பனந்திகழ் ருக்கு மாங்கத வேந்தன் மாசரி தத்தையே.

சாத்துக்கவிகள் முற்றிற்று.

---

# கதா பாத்திரர்கள்.

| | | |
|---|---|---|
| உருக்குமாங்கதன் | — | விதர்ப்பதேசத் தரசன் |
| தருமாங்கதன் | — | உருக்குமாங்கதன் மகன் |
| சந்தியாவளி | — | அரசன் மனைவி-பட்டமகிஷி |
| மோகனாங்கி | — | தேவப்பெண், அரசன் காதற்கிழத்தி |
| அப்சர ஸ்திரீகள் எழுவர் | — | மலர்கொய்யவந்த தேவலோக நடனமங்கையர். |
| கல்யாணி | — | போனக மாது |
| துர்வாச ரிஷி | — | ஓர் மகான் |
| ஓர் பிராமணன் | — | தேர்க்காலில் நசுக்குண்ட உடம்பு. |
| வள்ளுவன் | — | பறையறைவிப்பவன் |

மற்றும் மந்திரிமார்கள், காவலாளர்கள், வேட்டை வீரர்கள், எமதர்மன், சித்திரபுத்திரன், கிங்கரர்கள் முதலானோர்.

நிகழிடம்:— விதர்ப்ப தேசம், விதிசிமாநகர்.

உ

ஸ்ரீராமஜெயம்.

ஏகாதசி மகத்துவம் என்னும்

# உருக்குமாங்கதன் நாடகம்.

## கணபதி துதி.

வெண்பா.

சித்திதரும் புத்திதருஞ் சிந்தை தனில்மிகுத்த
பத்திதரு மெஞ்ஞானம் பாலிக்கும்—முத்திதரும்
நல்லுருக்கு மாங்கதமன் நாடகத்தைப் பாடமனக்
கல்லுருக்குந் தந்திமுகன் கால்.

## கலைமகள் துதி.

பலகலையுந் தருவாளைப் பளிங்கினைப்போ லுருவாளைப் படைக்குந் தேவன்
உலகளவி யிருப்பாளை யுயர்மறையாம் வானரங்கி லுபயத் தாளால்
கலகலெனச் சிலம்பொலிப்பக் களிநடனம் புரிவாளைக் கமழ்வெண் கோட்டுச்
சலசமல ரிருப்பாளைச் சரஸ்வதியை நம்முளத்தில் தரித்து வாழ்வாம்.

## சிவபெருமான் துதி.

கலி விருத்தம்.

ஆதி நாரண னம்புயத் தாள்பணி
நீதி மான்கதை நீணிலத் தோதிட
பாதி மேனியைப் பார்வதிக் கீந்தருள்
சோதி யான்பதந் தோத்திரஞ் செய்குவாம்.

## திருமால் துதி.

தாடகையை வாலியையி ராவணனை நீண்ட
சமுத்திரத்தை யிரணியனை யாக்கூட் டத்தை
தேடுமுனிக் காய்ச்சுக்கி ரீவ னுக்காய்
சீதைக்காய்ச் செல்வதற்காய்ச் சேயா யர்க்காய்
நீடுசரத் தாற்கணையால் விரதந் தன்னால்
நெடியகுரங் காலுகிரால் நிலைத்த குன்றால்
ஊடுருவ எய்துகொன்றுஞ் சங்க ரித்தே
யுடனடைத்து வகிர்ந்து பிடித் தொளிரு மாலே.

### குரு வணக்கம்.

சொலச் சொலநா வினிக்குமுயர் மதுவாரி யுபகாரி தூய சான்றோர்
குலத் துதித்த திருவிளக்கு தவத்துடைய பிரபெடுக்கக் குறைவிலாத
இலக் கணமு மிலக்கியமு மெனக்கிதய மிருத்தியரு ளீந்த பொன்னம்
பலக்குருவி னடிக்கமல முடிக்கணிந்து துதித்து நின்று பாடுவோமே.

### அவையடக்கம்.

நிறையொளித் தெய்வ மாடம் நிகர்த்திட மணலைக் கூட்டி
பிறைநுதற் சிறுபெண் கட்டும் பிரிவறை வீடு போன்று
மறைபுக ழரிநாள் நோன்பை மண்மிசை நாட்டி வைத்த
இறையவன் சரிதந் தன்னை யேழையா னியம்ப லானேன்.

---

## நூல்.

### [1-வது சீன்.— உருக்குமாங்கதன் சபை.]

திரிலோகமும் புகழும்—என்ற மெட்டு.

இராகம்—மத்தியமாவதி.] [தாளம்—ரூபகம்.

பல்லவி.

நெடுமால் திரு வடிமலர்க் கன்பர்
நேச ராஜ போஜன் நானே (நெடு

அனுபல்லவி.

கொடுமா விடம் அனைய ராக்ஷதர்
குலத்தைத் தொலைத்து நலத்தைக் கொடுக்கும் (நெடு

சரணம்.

கொடியார்கள் குடி நீங்க அடியார்கள் குடி ஓங்க
படியாளு முடிவேந்தர் அடிதாழ எதிர் காண்க
குடைநிழல் செய அரியணை மிசை
திடமொடு புவி யாசது புரி
கோதில் லாத நீதி மானன் (நெடு

### [உருக்குமாங்கதன் சபைவணக்கம்.]

செல்வ விநாயகனே—என்ற மெட்டு.

இராகம்—பைரவி.] [தாளம்—ரூபகம்.

பல்லவி.

தந்தேன் வந்தனமே—செழுந்
தாமரை மேல்வளர் மாமகள் நாதர்க்குப் (த

ஹரி தாளைத் தின மேபற் றிசை
தாசர்க்கு மென் நேசர்க்கும் நான் (த
நல்ல தானந் தவம்பல நாடெங்கும் ஓங்கிட
ஞானந் திகழ்விவே கானந்த சுவாமிக்கும் (த
அதி சாந்த குணமிகு காந்தி மகானுக்கும் (த
தக்கவர்கள் மெச்சும் முக்கிய ஞானஸ்தர்
எக்கலையுங் கற்ற பக்கிரி சுவாமிக்கும் (த

சரணம்.

இந்தச் சபையி லமர்ந்த நல்லோருக்கும்
இன்னிசை பாடல்கள் தன்னில் வல்லோருக்கும்
சிந்தைக் களிப்புடன் வந்த எல்லோருக்கும்
செந்தமிழ் தேர்ந்திடுங் கந்த சுவாமிக்கும்

சிறியோரிவர் பெரியோரென அறியாதவன் முதுநூல் மொழி
தெரியாதவன் மனமானது தெளியாதவன் முறை யாகவே (த

வ-ப்:—சேவகா! எனது வரவை எதிர்பார்த்திருக்கக்கூடிய மந்திரி இன்னும் வாராத காரணம் யாது? அதிசீக்கிரமாகச் சென்று அழைத்துவா?

பிரபூ! இதோ அழைத்து வருகிறேன்.

## [மந்திரி பிராப்தம்.]

தோலிலோ—என்ற மெட்டு.

இராகம்—காப்பி.] [தாளம்—ஆதி.

பல்லவி.

வருவாய் துவ ரகையெனு மொருதிரு
வளர்நக ரதிபதியே இது தகியே (வ

அனுபல்லவி.

மருவார் குழல் திருமக ளெனுமணம்
மனமகி ழுறும் நிதியே இதுதகியே (வ

சரணம்.

ஆதாரமுன் திருவடி மலரிணை
அலதுள தோ கதியே
அரசே அடியேன் தொழுவேன் தினமே
அன்புடன் பல துதியே
சீதா பெனு மடமயில் தனையனு
தினமரு விடுபதியே இது தகியே (வ

மந்திரி. வ-ம்: பிரபூ! நமஸ்கரிக்கின்றேன்.

அரசன். கல்யாண்: மந்திரி! ஆசனத் தமருவீர்! எனது வரவை எதிர்பார்த்திருக்கக்கூடியவர் இன்று இதுகாறும் வராத காரணம் யாது?

மந்திரி:—பிரபூ! நிடத தேசாதிபதி கொண்டுவந்த கப்பப் பணத்தைக் கணக்கிட்டு நமது பொக்கிஷத்திற் சேர்த்ததால் சற்று காலதாமிச மாயிற்று.

அரசன்:—மந்திரி! சந்தோஷம், அதாவது: சிங்களம், சிந்து, குரு, காஸ்மீரம், ஆந்திரம், திராவிடம், அவந்தி, குடகம், தெங்கணம், விலாடம், கலிங்கம், யுகந்தம், சீனம், கருசம், புலிந்தம், வங்கம், வங்காளம், மச்சம், மராடம், சோம், சோழம், பாண்டியம் முதலிய ஐம்பத்தாறு தேசங்களுக்கும் திலகம் போன்ற இவ் விதர்ப்ப தேசத்தின்கண் இந்தச் சுவர்ண கசிதமான ரத்தின சிம்மாசனத்தி லிருந்து அரசு செய்யப்பெற்றது பூர்வ ஜென்மத்திற் செய்யப்பட்ட புண்ணிய மன்றோ! அஃதிருக்கட்டும்;

விருத்தம்.

உமைக்கு நாதர்க்கு மோங்கு புள்ளூர்திக்கும்
இமைப்பில் நாட்டமோ ரெட்டுடை யானுக்கும்
சமைத்த தோள்வலி தாங்கின ராயினும்
அமைச்சர் சொல்வழி யாற்றுத லாற்றலே.

என்றபடி உலகத்தையாள்கின்ற அரசர்களில் ஒருவர் மும்மூர்த்திகளினும் திடசாலியா யிருந்த போதிலும் தன் மந்திரிமார்கள் சொல்லும் இதங்களைக் கேட்டு அதன்படி நடக்க வேண்டியது அவசியமல்லவா? யான் இப்பொழுது தேசவளங்களைக் கேட்க ஆவலுற்றவனாகவிருக்கின்றேன். தமது சித்தம் யாது?

மந்திரி:— பிரபூ! தாங்கள் எந்த எந்த தேச அதிசயங்களைக் கேட்கின்றீர்களோ, அதைத் தெளிவாய்ச் சொல்லுஞ் சித்த முடையவனாகவே யிருக்கின்றேன்.

பியாரித் தோரி பியாரிச்சான்—என்ற மெட்டு.

இராகம்—காப்பி.] [தாளம்—ஏகம்.

கண்ணிகள்.

நேசமாதி மந்திரி தேசமதி லெங்குமே
நேராக மாத மும் மாரி பெய்யு கின்றதா
தேசமதி லெங்குமே

அரசர்:— மந்திரி! நமது தேசமெங்கணும் மாத மும்மாரி பெய்து நீர்வளம், நிலவளம் செழித்தோங்கி யிருக்கின்றதா?

மாட்சிமைசேர் வேந்தனே ராச்சியங்க ளெங்குமே
மாதங்கள் தோறுமும் மாரி குறை யில்லையே
ராச்சியங்க ளெங்குமே

மந்திரி:— அரசே! நமது ராஜ்யத்தில் மாதங்கள் தோறும் மும்மாரி குறைவில்லாமற் பெய்வதால் பஞ்ச மென்ற பதம் கொஞ்சமும் கிடையாது.

ஆலயங்கள் தோறுமே ஆறுகால பூஜைகள்
அன்றுட முங்குறை வின்றி நடக்கின்றதா
ஆறுகால பூஜைகள்

அரசர்:— மந்திரி! நமது தேசத்திலுள்ள சிவாலயம், விஷ்ணு வாலயம் பிர்மாலயம் முதலிய தேவாலயங்களில் அந்தணர்கள் ஆறுகால பூஜையை நடத்தி வருகிறார்களா?

மாலய னமர்திரு வாலயங்கள் தோறுமே
மாமறை யோர் பூஜை நேமமாய்ச் செய் கின்றனர்
ஆலயங்கள் தோறுமே

மந்திரி:— பிரபூ! நமது தேசங்களிலுள்ள ஆலயங்களில் அந்தணர்கள் கிரமப்படி பூசித்து வருகிறார்கள்.

வெம்புலிக ளும்பசு வினங்களுந் துறை யொன்றில்
மித்திரா வொத்துநீர் நித்தங்குடிக் கின்றதா
எவ்விலங்கி னங்களும்

அரசன்:— மந்திரி! நமது நாட்டில் புலியும் பசுவும் ஓர் துறையில் நீருந்திப் பட்சமுடன் வாழ்கின்றதா?

எம்மிருக மும்பகை யின்றி யென்று மொன்றியே
எய்யாநீர் வையமீ துய்யுகின்ற தையனே
எவ்விலங்கி னங்களும்

மந்திரி:—அரசே! புலியும் பசுவுமே யல்ல சகல மிருகங்களும் யாதொரு மனவேற்றுமை யின்றி சுகமாக வாழ்ந்துவருகின்றன.

கழுத்தில் விழுந்த மாலை கழற்ற முடிய வில்லை—என்ற மெட்டு.

இராகம்—கீர்வாணி.] [தாளம்—ஆதி

### கண்ணிகள்.

அர:— அந்தண ரனுதினம் வெந்தழ லருகுயர்
மந்திர மறைமொழி கின்றாரா?

மந்:— சிந்தையி லன்புகொண்டு எந்த நேரந் தனிலும்
தீதின்றி யோதுகின்றார் வேதியர்கள்.

அர:— உத்தம சத்திரியர் யுத்தம் வில் வித்தை யிவை
நித்தமுங் கற்று வரு கின்றாரா?

மந்:— மெத்த விரத்தையொடு வித்தைக ளத்தனையும்
வேந்தர்கள் தேர்ந்துவரு கின்றார்கள்.

அர:— செட்டியர் வாணிபத்தை யட்டியில் லாமல்வெகு
கெட்டியுட னடத்து கின்றாரா?

மந்:— எட்டிய திசையுள்ள பட்டினஞ் சென்று பொருள்
ஈட்டுகின் றனர்கள்நம் நாட்டி லுள்ளோர்

அர:— சாத்திர முறைப்படிச் சூத்திரர் மூவருணத்
தார்க்கு இன்புற நடக் கின்றாரா?

வந்:— கீர்த்தி மிகுந்த எங்கள் பார்த்திபனே யெவர்க்குங்
கீழ்ப்படிந் துய்கின்றனர் சூத்திரர்கள்.

அரசர். வ—ம்: மந்திரீ! நமது தேச வளங்களைக் கேட்டுச் சந்தோஷ மடைந்தேன்; எனது பத்தினி சந்தியாவளி முதலான நூறு மாதர்கட்கும் கூந்தலைச் சித்தரித்துக் கொள்வதற்கு வேண்டிய புஷ்பங்களுக்காக சிங்கார நந்தவன மொன்று உண்டாக்கும்படி முன்னமே உத்தர வளித்திருந்தே னல்லவா? அதன்படி செய்து முடிந்ததா?

மந்திரி வ—ம்: பிரபூ! தங்கள் சித்தம்போல் சிங்கார நந்தவனம் ஒன்று உண்டாக்கி அதில் மா, பலா, கொய்யா, வாழை, கமுகு, தெங்கு முதலிய விருக்ஷங்களும் மல்லிகை, முல்லை, இருவாட்சி ரோஜா முதலிய பூஞ்செடிகளும், பாதிரி, சரக்கொன்றை, குருக்கத்தி, ஆத்தி முதலியவைகளும் உண்டாக்கப்பெற்று நன்றி மறவாதார் செல்வம்போல் தளிர்த்து தழைத்துப் பூத்துக் காய்த்துப் பழுத்துச் செழித்திருக்கின்றன.

அரசர். ஆகா! மிக்கசந்தோஷம் யான் சென்று பார்த்து வருகின்றேன்.

மந்திரி:-- பிரபூ! தங்கள் சித்தம்போல் சென்று பார்த்து வாருங்கள்.

## [இரண்டாவது சீன்.—நந்தவனம்.]

பூங்கா விநோதமே—என்ற மெட்டு.

இராகம்—காகாப்பிரியா] [தாளம்—ஆதி

பல்லவி.

சொல்லவா பூறுதே
சோலேசிங் காரமதைச் (சொ

அனுபல்லவி

பல் விருக்ஷ மும்மடுத்துப்
பார்த்து நான் தொடுத் தெடுத்துச் (சொ

சரணம்

வல்லதொழி லாளரிங்கு வாய்த்ததுநற் காலமே
மத்தியிற் சமைத்த தெப்பம் மெத்தவுவி சாலமே
அல்லி செழுந் தாமரை யழகு வள்ளை நீலமே
அடர்ந்திருக்குங் காட்சிமண் மடைந்தைதிருக் கோலமே

மாமரத்திற் பாடிடுங் குயில் அதனைக்கண்டு
வந்துநட மாடிடு மயில் பசிய நிற
பூமரத்திற் கிள்ளைகள் பயில் ராஜமொழி
புதுமையை விளக்குஞ்சிந் தையில் பலவின்மிசை

மந்திகள் சென் றோடி
மால் குரங்கைத் தேடி
விந்தையுடன் கூடி
மேவுவதை நாடி நான் (சொ

நெல்லிமா மேற் படர்ந்த வல்லிவெகு நீட்சியே
நேரினிற்கண் டாற்புரிவன் மாரனா சாட்சியே
முல்லை வெடி மல்லிகை பொற் குல்லையிரு வாட்சியே
முத்தினைப் பழிக்கு மலர்க் கொத்துகளின் காட்சியே

நல்ல மணம் வீசிடும் பிச்சி மருக்கொழுந்து
நற்றுளசி பச்சிலே நொச்சி மருவு தும்பை
வில்வம் நாரத்தையெனு மிச்சி சரப்பூங்கொன்றை
விண்ணடர்ந்த ஆலா சிச்சி இவைகளின் மேல்

பட்சி கரு வண்டு
பழுங்கள் மது வுண்டு
மெச்சி மையல் கொண்டு
மேவுவதைக் கண்டு நான் (சொ

வ-ம்: காவலர்காள்! இதில் புஷ்பித்திருக்கும் புஷ்பங்களை வெகுபக்குவமாகப் பறித்து எனது பத்தினிமார்கள் வசிக்கும் அந்தப்புரத்திற்கு அன்றுடங் கொண்டுவந்து சேர்க்கவேண்டும். அன்றியும் அருந்தவம் புரியும் பெருந்தவ சிரேஷ்டர்கள் தவிர, வேறு யாராமொருவரையும் இதில் பிரவேசிக்கவிடக்கூடாது. அப்படிவிடுகிற விஷயத்தில் என் ஆக்கினைக்குள்ளாவீர்கள். சாக்கிரதையோடிருந்து காவல் செய்யவேண்டும்.

பிரபூ! தங்கள் உத்திரவின்படியே காவல் செய்கின்றோம்.

## [ரிஷி பிராப்தம்.]

வீடலால வாயிலா—என்ற மெட்டு.

இராகம்—நாதநாமக்கிரி.] [தாளம்—திரிபுடை

கண்ணிகள்.

மாமறை கவர்ந்து சென்று வார்கடல் புகுந்ததோர்
சோமுகா சுரனைவெல்லச் சொர்ணமீன மானவா

தாமரைச்செங்கண் ணனேபைந் தண்முகிலின் வண்ணனே
தேமலி துழாயணிந்த தேவ தேவ தேவனே

சங்கநேமி கட்க தண்டஞ் சாரங்க ங்கை யேந்தியே
அங்கண்மா நிலம் புரக்கும் ஆதி பரந் தாமனே

எங்கள்நாய காவுரத்த இரணியன்றனை நீ கொல்ல
செங்கணா சிங்கமான தேவ தேவ தேவனே (மா

வ-ம்:— ஆகா! இந்தச் சிங்கார நந்தவனத்தின் பெருமையை யாரால் வர்ணிக்கக்கூடும்? இந்திரனுடைய கற்பகச் சோலையும் இதற்கு அஞ்சித்தான் அந்தரத்தில் சென்றிருக்க வேண்டுமென்றே நினைக்கின்றேன். உலகத்தில் பிறவியென்னும் பெருங்கடலை நீந்தத் தவமென்னும் மரக்கலம் திகைப்புறுவண்ணம் கண்டுகொள்ளும் கலங்கரை விளக்கம்போல்விளங்கும் இந்தச் சிங்காரநந்தவனத்தில் யான்சென்று தவம்புரிய உத்தேசித்திருக்கின்றேன். ஏ! காவலர்காள்! இது யாருடைய சிங்கார நந்தவனம்?

சுவாமி! பொன்னகரம் போன்ற இந்நகரின் ருக்குமாங்கத மகாராஜாவுடைய நந்தவனம் இது.

ஆகா! அப்படியா? யான் இதிற் சென்று தவம்புரிய உத்தேசித்திருக்கின்றேன். ஏதாவது அட்டியுளதோ?

சுவாமி! எமதரசர் ஆக்ஷேபிக்கமாட்டார். தங்கள் சித்தம்போல் தவசு பண்ணுங்கள்.

பேச வாய் கோடி வேணுமே—என்ற மெட்டு.

இராகம்—மோகனம்] [தாளம்—ஆதி

பல்லவி.

சோலை யழகென்ன சொல்லப்போம் தழைத்
தோங்கு புக ழுருக்கு
மாங்கதன் செய்தமலர்ச் (சோ

அனுபல்லவி.

நீலமுகில்கள் அந்தி மாலைபோற் கூடும்
நெடிய மயில்கள் திருநடனம தாடும்
கோலக் குயிலினம்மீ லாம்புரி பாடும்
கொந்து மலரில் வண்டு வந்து மதுவருந்தும் (சோ

சரணம்.

குங்கும மாசகில் சந்தன மகிழ்குமிழ்
கொன்றை கமுகு கோங்கு கொய்யாகதலி
புங்குபுரசு புன்னை வன்னி ஆலத்தியிச்சி
பூவாசுயர் தேங்கு புளிகடம்பூ

மாமா முதலிய வான்வரை ஓங்கும்
மல்லிகை முல்லை மதுமலர் தாங்கும்
பூமரந் தோறும் புறவினந் தூங்கும்
புந்திமகிழ்ந்து கொம்பில் மந்தி குதிக்குமந்தச் (சோ

தங்களுக்கு வேண்டிய பர்ணசாலை முதலிய வசதிகளெல்லாம் நாங்களே ஏற்படுத்தித் தருகின்றோம். சுவாமி!

(பொது. வ-ம்.) காவலர்கள் அமைத்த பர்ணசாலையில் முனிவர் சென்று தவஞ் செய்யலாயினர். இப்படி யிருக்குங் காலத்தில் எம்பெருமானைப் பூஜிப்பதற்காகத் தேவர்கள் ஆக்ஞைப்படி நறுமலர் தேடிக் கொய்துகொண்டு கொடுக்கக்கடமைப்பட்டவர்களாகிய அப்சரஸ்திரீகள் எனும் சப்த கன்னியர்கள் தெய்வலோகத்தில் நல்ல வாசம் பொருந்திய மலர்கள் இல்லாதபடியால் பூலோகத்தை நாடிவருகின்றனர்.

## [அப்சர ஸ்திரீகள் பிராப்தம்.]

டான்ஸ் மெட்டு

மாங்குயில்நேர் பாங்கிகளே ஈங்குமலர் கொய்திடுவோம்
ஓங்கியே பூங்கொடி பாருங்கடி
ஓவியங்கா ளென்பின் வாருங்கடி
உயிரனையீர் அனைவர்களும் ஒழுகுட னின்றே
உசிததிரு அரியின்மிசை பஜனைபுகன்றே
செண்பகப்பூ செழும் பிச்சிப்பூ
திகழ்துழவம் உயர் தளவம் நறுவெட்சிப்பூ (மா

வ-ம்:— சேடிகாள்! நமது வைகுந்தவாசனுடைய பாதாம்புயத்தைத் தேவர்கள் அர்ச்சிக்கும் பொருட்டு சுவர்க்க மத்திய பாதாள மென்ற முப்புவனங்களிலுஞ் சென்று ஆங்காங்குள்ள புண்ணிய நந்தவனங்களில் அதிகாலையில் புஷ்பங்கள் கொய்துகொண்டு செல்வது வழக்கம். இந்த சிங்கார நந்தவனத்தில் ஸ்ரீ பரந்தாமன் அர்ச்சிப்பதற்கு யோக்கியமான புஷ்பங்கள் போதுமான மட்டும் இருக்கின்றபடியால் கொய்துகொண்டு செல்லுவோம்.

மற்றவர்கள்: அம்மணீ! அப்படியே செய்வோம்.

ஆவோ ஹனியா—என்ற மெட்டு.

### கண்ணிகள்.

சேடிமாரே கூடிநாமே செய்யதிரு மாமலரைக்கொய்திடுவோமே
தெய்வ சிகாமணி பாதம் கைதொழுது உய்வோமே (சே

பையரவி லேதுயிலும் துய்யவனைப் பாடியே
பாக்கிய லட்சுமிபாதம் வாக்கினிற் கொண் டாடியே (சே

ஐயனிரு சேவடிக் கலர்ந்த மலர் தேடியே
அன்னங்காள்நீர் வந்திடுவீர் என்னிடத்தி லோடியே (சே

நேரில்மகிழ் செண்பகம் பன் னீர் மலரைப் பாருங்கள்
நேரிழைகளே பறித்து நீள்குடலைச் சேருங்கள் (சே

மல்லிகை சிவந்தி வெடி முல்லைமலர் நாற்றமே
வானுலகப் பூக்களுக்கோ ரேழுமடங் கேற்றமே (சே

வ-ம்:— சேடிகாள்! எம்பெருமானடியைப் பூஜிப்பதற்குப் போதுமான மலர் கொய்து கொண்டோம். சீக்கிரம் தெய்வலோகம் போவோம்.

## [3-வது சீன்.]

வ-ம்:— நாதா நமஸ்கரிக்கின்றோம்.

உ-ன்: கண்மணிகாள்! உங்களது முகாரவிந்தத்தை நோக்குமிடத்து "அடுத்ததுகாட்டும் பளிங்குபோல் நெஞ்சங் கடுத்ததுகாட்டு முகம்" என்றபடி, ஏதோ ஓர் காரியம் என்னிடத்தில் சொல்ல யத்தனித்ததுபோல் தெரிய வருகிறதே அக்காரியம் யாது?

அம்பாள் மதுரை மீனாட்சி—என்ற மெட்டு.

கண்ணிகள்.

நாதா—எங்கள் அருமை மண வாளா மலை
யென்னத்திரண்ட தோளா நாங்கள்
இயம்புஞ் செய்தி கேளா
இங்குசில நாளா யிங்குசில நாளா யிங்குசில நாளா

மன்னா—அங்கே நமது பூங் கொல்லை வெடி
அரிய பிச்சி முல்லை நல்ரோஜா
அந்தி மல்லிகை குல்லை
அணுவும் வரவில்லை அணுவும் வரவில்லை அணுவும் வரவில்லை

அங்கே—யார்தான் செய்கின்றனரோ மாயம் இதை
அறியச் சம்பிர தாயம் இனிமேல்
ஆகவேண்டிய ஞாயம்
அறியுங்க ளுபாயம் அறியுங்க ளுபாயம் அறியுங்க ளுபாயம்

நம்— செங்கோல் வரம்பு கொஞ்சங் கடக்கும் ஒன்னார்
திரத்தின் கூரை மடக்கும் நமக்குமிந்த
தீமை யெவ்வாறு நடக்கும்
திருடர்தமையடக்கும் திருடர்தமையடக்கும் திருடர்தமையடக்கும்

வ-ம்:— நாதா! இப்படியாக சிற்சில நாளாய் எங்களுக்குப் புஷ்பங்கள் வந்து சேரவில்லை. இதனைக் கவனித்து முன்போல் புஷ்பங்கள் வரும்படி செய்ய வேண்டும்.

விருத்தம்.

பொன்போலும் அழகுடையீர் புவிபோலும் பொறையுடையீர் புகழ்வெண்-
மின்போலுங் கலையுடையீர் மந்திரிபோ லறிவுடையீர் விளங்குமாற்றாய்[கஞ்ச
தன்போலுந் தயையுடையீர் மலர்கவருந் திருடர்தமைத் தணியாவிட்டால்
என்போலும் பேயரிந்த வலைகடல்சூ ழுலகி லுண்டோ வியம் புவீரே.

ஆருக்குப் பொன்னம்பலம் கிருபை—என்ற மெட்டு.

இராகம்—தங்யாசி] [தாளம்—ஆதி

பல்லவி.

ஆகட்டு மினியங்கு பூகவர்பவரை
அறிவேன் அறிவேனே (ஆக

அநுபல்லவி.

போகட்டும் பலநாட் கள்ளன் வந்தொரு நாள்
புலப்படுவது திண்ணம் குலப்பசுங் கிளிகாள் (ஆக

சரணம்.

இத்தனைநாள் வரை சோரம தென்று
என்னிரு செவிகளிற் கேட்டது மன்றி
சித்திர விழிமான் மடந்தைகா ளின்று
தெரிந்தன னாசுநான் புரிந்ததும் நன்று (ஆக

மடந்தைய ரனைவர்க்கும் இடந்தரும் பேச்சே
மந்திரி களுமிடு வார் பெரு மூச்சே
நடந்ததை வெளிவிடில் நமக்குத்தான் ஏச்சே
ராச்சியத் துரைத்தனந் தாட்சியாய்ப் போச்சே (ஆக

வ-ம்:— கண்மணிகாள்! நமது நந்தவனத்தில் புஷ்பங்களைத் திருடிக் கொண்டு செல்லுந் திருடரைத் தண்டித்து வழக்கம்போல் புஷ்பம் வரும்படி செய்கின்றேன்.

நாதா! சீக்கிரமாக வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுகிறோம்.

காவலர்கள் வசனம்:— தம்பி! நமது மகாராஜா அவர்களின் உத்திரவின்படியே புதிய சிங்கார நந்தவனத்தை வெகு ஜாக்கிரதையாகக் காவல் செய்து வந்தும் சிற்சில நாளாய் மாலையில் அளவில்லாத அரும்புகளிருக்கின்றன. காலையில்பார்த்தால் புஷ்பங்களில்லாமற் போய்விடுகின்றதே, இது என்னடா மாயம்?

அண்ணா! நானும் ஜாக்கிரதையாகத்தான் காவல் செய்துகொண்டு வருகின்றேன். புஷ்பங்களும் குறைந்துகொண்டேதான் வருகின்றது. காரணந் தெரியவில்லை. இனி இவ்விதஞ் சும்மாயிருப்போமேயானல் மகாராஜாவின் கோபத்திற்கு ஆளாவோம். ஆதலால் அரசரிடம் தெரிவிப்போம் வா.

பிரபூ! நந்தவனக்காவலர்கள், நமஸ்கரிக்கின்றோம்.

அரசன். காவலர்காள்! நமது சிங்கார நந்தவனத்திலிருந்து சிற்சில நாளாய் அந்தப் புரத்திற்கு புஷ்பம் வரவில்லை யென்று எனது பத்தினிமார்கள் தெரிவித்தார்களே காரணம் யாது?

பிரபூ! அடியேங்களை காவல் செய்யக் கட்டளையிட்ட நாள் முதலாய்க் கண்ணைக் கண்ணிமை காப்பதுபோல் காவல் செய்கின்றோம். சிற்சில நாளாய் மாலையில் எவ்வளவு அரும்புகளைக் காண்கின்றோமோ அவ்வளவு மலர்களும் மறுநாளுதயத்தில்சொற்பனத்திற் கண்டபொருள்போல் போய்விடுகின்றது. இது விஷயத்தை தங்களுக்குத் தெரிவிப்பதற்காகத்தான் இங்கு வந்திருக்கின்றோம்.

காவலர்காள்! "அள்ளாத பண்டங் குறையாது சொல்லாத சொல்லும் பிறவாது" ஆனதால், யாராமொருவர் அப்புஷ்பங்களைக் களவு செய்துகொண்டு போய்த் தானிருக்கவேண்டும்: இனி சாக்கிரதையாகக் கவனித்துத் திருடுந் திருடனை ஒரு வாரத்திற்குள் என்னிடங் கொண்டுவந்து ஒப்புவிக்கவேண்டும். இல்லையேல் எனது ஆக்கினைக்குள்ளாவீர்கள்! ஜாக்கிரதை.

பிரபூ! அவ்விதமே செய்கின்றோம்.

## [4-வது சீன்.—நந்தவனம்—அப்சரஸ்திரீகள்.]

சோமசேகரனருளும் பாலா வேலா—என்ற மெட்டு.

### கண்ணிகள்

நீலமுகில் போலிலங்கு மெய்யா மெய்யா அண்டர்
நீள்திகிரி சங்குடைய கையா கையா தளிர்
ஆலிலையின் மேற்று யின்ற ஐயா ஐயா எமை
ஆண்டருள வேண்டுகின்றேன் துய்யா துய்யா துதி
ஆரணனேபரி பூரணனே அரி
நாரணனேவிரி கார்கடல் நீருண்ணும் (நீ

முந்தி அயன் தன்னை யுந்தி பூத்தவனே ஆதி
மூல மென்ற யானையுயிர் காத்தவனே என்றும்
சிந்தை செய்யுந் தேவர் துயர் தீர்த்தவனே இளஞ்
செந்திருவை மார்பகத்தில் சேர்த்தவனே உயர்
சீதரனேயெனை யாதரியாவிடில்
மீதலம் பூதலம் பாதலம் மீதெவர் (நீ

எப்பொழுதும் புஷ்பமிகக் கொய்ய வருள் அதை
இன்பமுட னின்பதத்திற் பெய்ய வருள் ஒரு
தப்பிதமின்றிப் பஜனை செய்ய வருள் இரு
தாட்கமல நிழலமர்ந்து உய்ய வருள் நின்மேற்

சந்ததமுமுயர் செந்தமிழ் மாலைசெய்
கந்தசுவாமியின் சிந்தையி லேவளர் (நீ

சேடிகாள்! இதில் புஷ்பித்திருக்கின்ற கோட்டுப்பூ கொடிப்பூ நீர்ப்பூ நிலப்பூ இந்நான்கு வகைப் புஷ்பங்களில் நீலோற்பலம் மகா லட்சுமியுடைய கண்களைப்போலவும், தாமரை யரும்பு தனத்தைப் போலவும், செண்பகப்பூ நாசியைப் போலவும், குமுதமலர் இதழைப்போலவும், தாமரை மலர்கள் திருமுகம் திருக்கரம் திருப் பாதங்களைப்போலவும் இருக்கின்றபடியால், நம் பெருமானுக்குப் பிரீதியாகத் தானிருக்கும். ஆதலால், சீக்கிரம் கொய்து கொண்டு செல்வோம்.

அம்பிகா உன்மகன் குகன்—என்ற மெட்டு.

ஆதிநா ராயணு வுன்னை
ஓதினேன் ஆதரி யென்னை
சோதிமலர்ப் பூம்பதனே
கோகை யசோ தைசுதனே
மோதிடும் பஞ்சா யுதனே
முத்தர் சுத்தர் பத்தர் நத்திடும் (ஆ

நீர் பொழியுங் கார்வண்ணனே
நீள்கமலச் செங்கண்ணனே
பார்வதியாட் கோரண்ணனே
பண்டு அண்டு தொண்டர்க் கருளும் (ஆ

சேடிகாள்! நம் பெருமானடியைப் பூசிப்பதற்குப் போதுமான மலர் கொய்து கொண்டோம். சீக்கிரம் தேவலோகம் செல்வோம் வாருங்கள்.

நற்கருணை வாரிதியே நான்மறைக்குள் ளார்கிதியே
பொற்கமலத் தாள்கதியே பூவில்மேவுந் தேவிக் காவியே (ஆ

காவலர் வ-ம்:— அடா தம்பி! சாக்கிரதையாகக் காவல்செய்கின்றனையா?

ஆம். அண்ணு! வெகு சாக்கிரதையாகத்தா னிருக்கிறேன்.

தம்பி! மாலையில் புஷ்பங்களெல்லாம் அரும்பா யிருந்தனவே, இப்பொழுது எப்படி யிருக்கிறதென்று பார்த்து வருவோம் வா.

ஆகா! நாம் மோசம் போனேமே? எவ்வளவோ சாக்கிரதையாகக் காவல் செய்தும் கள்ளனுக்குள் குள்ளன் பாய்ந்தது போல், நம்மையறியாமலே திருடிக்கொண்டு போய்விட்டார்களே! இனி என்னடா செய்வது?

அண்ணா! கள்ளன் பெரிதா? காப்பான் பெரிதா? என்பது உனக்குத் தெரியாதா? நாமும் மகாராஜாவின் உத்தரவின்படியே எவ்வளவு சாக்கிரதையாகக் காவல் செய்தும் பயனற்றுப் போய்விட்டது. இனிமேல் இவ்விதம் சும்மாயிருப்போமேயானல், நம் தலைக்கு நாமே உலைதேடிக்கொண்டது போலாகும். ஆனல் என் மனதில் ஓர் யோசனைதோன்றுகிறது. அதாவது தவம்பண்ணும் யோகிகள் பசிவந்தபோது கந்த மூல பலாதிகள் சாப்பிடுவது வழக்கமென்று கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆகையால் இங்கே தவம் பண்ணுகின்ற முனிவர்தான் நம்மையறியாமல் இராக்காலங்களில் பட்சித்திருக்க வேண்டுமென்றே நினைக்கின்றேன்.

தம்பி! யானையைபார்க்க வெள்ளெழுத்தா? பகலில் சாப்பிடாதவன் பருத்திருப்பானேயானல், இராத்திரிக் காணுமல் சாப்பிடுவானென்பது நிச்சயம். மேலும் அரசர் ஆக்ஞையிட்ட நாள் எட்டும் இன்ருேடே சரியாய்ப் போய்விட்டது. இன்று தினம் கள்ளனைப் பிடித்து அரசரிடஞ் சேர்க்கா விட்டாலோ நம்முடைய தலை போய்விடும். ஆனதால் இந்தமுனிவரைத் தந்திரமாக அழைத்துச் செல்லுவதே உசிதம்.

சுவாமி! எமதரசர் தங்களை அழைத்துவரும்படி உத்தரவு செய்திருக்கிருர். தயவு செய்து எழுந்தருள வேண்டும்.

முனிவர்:- பிள்ளைகாள்! அவ்விதமே வருகின்றேன் வாருங்கள்.

மற்றுப் பற்றெனக் கின்றி னேன்திரு—என்ற மெட்டு.

இராகம்—தோடி] [தாளம்—ரூபகம்.

### கண்ணிகள்.

மேதினி யுயிர் யாவுந் தந்தருள் வேதனை யுந்தி பூத்தவா
ஆதிமூலமென் ரோதிவாய்விடு யானையை யன்று காத்தவா
சோதியேநர சிம்ம ரூபமாய்த் தூணிலே வந்து தோன்றியே
நாதனே யெனை வந்துகாத் தருள் ராம ராமஸ்ரீ ராமனே

(பொது. வசனம்) இவ்விதம் பகவானைத் தோத்திரஞ் செய்து கொண்டு முனிவரானவர் காவற்காரர் பின் வர, ராஜசபைவந்தனர். முனிவர் வரவு கண்ட அரசன் எழுந்து எதிர்சென்று,

## [தர்பார். — முனிவர் விஜயம்.]

கையில் பணமில்லாமல்—என்ற மெட்டு.

இராகம்—சகாணு] [தாளம்—ரூபகம்.

### கண்ணிகள்.

ஐயனே உனதிரு செய்ய மலரடிக்கே
அடியேன் சரணம் சரணம் சரணம்
வையக மனிதர் போல் மெய்யது பெற்று வந்த
தெய்வமெனத் துதிப்போர்க் குய்யும் வகையருளும் (ஐ

வேத முழுதுணர்ந்த மாதவமுனி நாதா
விண்ணவர் கண்ணின் மணியே மணியே மணியே
பாதமெனுங் கமலஞ் சீதமலர்க்கண் தோயும்
பாக்கியத் தாலென்மனே யோக்கியமுற்ற தென்றன் (ஐ

பொன்னுடையவ ரேனும் மண்ணுடையவ ரேனும்
புகழுடையவ ரேனுமே எனுமே எனுமே
என்னுடையவ ராவர் நின்னுடைய நற்சேவை
இல்லாத பேர்களெனில் செல்லாத பணமாவர் (ஐ

வ-ம்:— சுவாமி! என்னை ஆளவந்த அருள் தெய்வமே! அடியேன் தங்களைத் தெரிசிக்கப் பெற்றது யான்செய்த தவப்பயனே! என் முன்னோர் செய்த பூஜாபலனே தெரிகிலேன்! இவ்வாசனத்தில் அமரவேண்டும்.

முனிவர்:- கல்யாண்! பூரண ஆசீர்வாதம். என்னை யிங்கு வரவழைத்த காரணம் யாது?

(பொதுவ-ம்.) முனிவர்: இவ்வாறு கேட்க, அரசன் திகிலடைந்து கோபமுண்டாகி காவலர்களைப் பார்க்க, அவர்கள்:

மகாராஜ்! நமது சிங்கார நந்தவனத்தை தங்க ளுத்தரவின்படி மிக சாக்கிரதையோடு காவல் செய்துகொண்டு வருகின்றோம். மற்றொருவர் பிரவேசிக்க நாங்கள் கண்டதுமில்லை பார்த்ததுமில்லை இந்த மகாரிஷி ஒருவர் மாத்திரம் இரண்டொரு மாதமாக அவ் விடத்தில் வசிக்கின்றார். ஆதலால், இன்னவர் பேரில் சந்தேகந் தோன்றியபடியால் இங்கு அழைத்துக்கொண்டு வந்திருக்கிறோம்.

சொல்லுவாய் கிளியே—என்ற மெட்டு.

இராகம்—பிலஹரி] [தாளம்—ரூபகம்.

பல்லவி.

என்ன மூடமதி
யேழை மாந்தர் காள் தகா துமக் (கென்

அநுபல்லவி

அன்ன மீதுற்ற நன்ன யப்பிரமன்
அன்னார் இன்னவர் (என்

சரணம்.

இன்னவரைப் பழி சொன்னவர் வாயிரு
கன்னம் வரை வெந்து சின்ன பின்னமாமே
இந்தி ராதியர் சொந்த வாழ்வையும் சிந்தியா ரிவர் (என்

பூமி மகிழ் கந்த சாமிபு கழிந்த
மாமுனிவ ரந்தத் தீமை செய்வாரோ காண்
போவீ ரப்புறம் நீவிர் துர்க்குணப் பாவிகா ளுமக் (கென்

அரசன். வ-ம். ஏ! பாவிகாள் நீங்கள் என்ன யோசனை செய்தீர்கள்? உங்களுடைய புத்தியைப் பார்க்கும்பொழுது உலக்கைக்குக் கொழுந்து விட்டதுபோலிருக்கின்றதே. இம்மகானுடைய திருவுருவத்தைப் பார்த்தால் எம்மை யாட்கொள்ளுங் கண்ணபிரானுடைய திருவுந்தியிலுதித்த சாக்ஷாத் பிரமதேவன் போலிருக்கின்றார். இன்னவரை மலர் திருடினாரென்று கொண்டுவந்திருக்கும் உங்களுடைய யோசனையைப் பார்க்கும்பொழுது கண்ணுங் கருத்துமில்லாதவன் எழுதிய சித்திரம்போலிருக்கின்றதே! பாவிகாள், "துறவிக்கு வேந்தன் துரும்பு" என்பதை அறிந்தீலீர் போலும். இனி யென்ன தீங்கு நேரிடுமோ.

சுவாமி! என்பொருட்டால் இந்த மூடசிகாமணிகள் செய்த குற்றத்தை மன்னிக்கத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

[துருவாச ரிஷி.]

விருத்தம்.

நின்னுடைய நந்தவன மலர்குறையுங் காரணத்தை நிகழ்த்தக் கேளாய்
பொன்னுடைய மணிமார்பன் பூவடியைப் பூசைசெயப் பொன்னாட்டுள்ள
மின்னுடையமெல்லிடையார் இரவில்வந்துகொய்துகொய்து விரைவிற்போக
என்னுடையவிழிகளினாற்கண்டதுண்டு விறல்வேற்கை யெழிலார் வேந்தே.

வ-ம். அரசே! "ஆடுகளவு கொடுத்தவனுக்குச் செடியல்லாங் கண்" என்பது போல் அவர்கள் அறியாமல் என்னைக் கொண்டுவந்து சேர்த்துவிட்டார்கள். எய்தவனிருக்க அம்பை நோவதிற் பயனில்லை. உன்னுடைய நந்தவன மலர்களை கண்ணபிரான் திருவடியை தேவர்கள் அர்ச்சிக்கும் பொருட்டு அப்சர ஸ்திரீகள் அதிகாலையில் ஒருவர்கண்ணுக்கும் புலப்படாமல் கொய்து கொண்டுசெல்லுவது வழக்கம். ஆதலால் மலர்குறைவுபடுகின்றது.

சுவாமி! இந்த விஷயங்களை விபரமாகச் சொல்லக்கேட்டு மிகுந்த பேரானந்தமடைந்தேன். அன்னவர்கள் மலர் கொய்வதைக் காட்சிப் பிரமாணமாய்ப் பார்க்க அடியேனுக்கு அனுக்கிரகித் தருளவேண்டும்.

அரசே! அதற்கோ ருபாயமுண்டு. அதாவது சிங்கார நந்தவனத்தில் புஷ்பச்செடிகளுக்கு இடையிடையாகவே கொம்மட்டி செடிகளை உண்டுபண்ணச் செய்தால் அந்த அப்ஸர ஸ்திரீகள் புஷ்பங் கொய்யும் போது அவர்கள் மீது பரிசமாகும். அப்பொழுது அசுத்தையாகி விடுவார்கள். ககனமார்க்கஞ் செல்ல இயலாது. அது சமயம் யான் தெரிவிக்கின்றேன். நீ கண்டுகொள்ளலாம் யான் சென்று வருகிறேன்.

அரசன்:— சுவாமி! சென்று வாருங்கள்.

காவலர்காள்! நமது சிங்கார நந்தவனத்திலுள்ள புஷ்பச்செடிகளுக்கு இடையிடையாகவே கொம்மட்டிச் செடிகளைப் பயிர்செய்யுங்கள்.

காவலர்கள்:— பிரபூ! அவ்விதமே செய்கின்றோம்.

(பொது வ-ம்) காவலர்கள் அரசரிட்ட கட்டளைப்படி கொம்மட்டிச் செடிகளை புஷ்பச் செடிகளின் இடைக்கிடையே பயிர் செய்து அது செடியாய் முளைத்துக் கொடியாய்ப் படர்ந்த சமயம் தூக்கிச் செடிகள்மேல் வைத்துப் போயினர். அப்சர ஸ்திரீகள் வழக்கம்போல் வருவதாயினர்.

## [5-வது சீன் அப்சர ஸ்திரீகள்.]

ஈராறு கைவடி வேலா—என்ற மெட்டு

இராகம்—பியாகு] [தாளம்—ஆதி.

கண்ணிகள்.

ஆதி மூலமே நீ யாளாய் ஆர மாரு மணித் தோளாய்
ஓதினனே நெடு நாளாய் உம்பர்கள் போற்றும் பொற் றாளாய்
பங்கய மீதுறை மாது பக்த ரெளியவர் மீது
வன்கண்மை செய்வது ஏது வாயைத் திறந்து நீ ஓது (ஆ

இந்துஸ்தான் (டான்ஸ்) மெட்டு.

கண்ணிகள்.

நந்தா பிர மன்றனை யீன்றமு குந்தா உயர்
நான்மறை போற்றும் வை குந்தா அருள்
தந்திடும் நற்றவனே
நான்மல சாள்பணி
செந்தா மலர் போலடி யுற்றவனே பட
நாகமீது சய ஞவினோத அரி
நாராயண னேகலை கற்றவனே சுரர்
நரரொடு உலகுயர்
பரவிட மழைபொழி
காரா முகில் நேரெழில் பெற்றவனே

கொந்தார் குழல் கோகில நேர்மொழி எந்தாய் திரு
மாதொடு மேவுகோ விந்தா அருள்
தங்கிடும் நாரணனே
வைகுந்த மதில்
சிந்தாமணியே கிருபா கானே பல
கோடி தேவர் களும் ஆடியே புகழும்
கோனே உயர் ஞான வசீகரனே உன்றன்
குணமுடை யவர்திரு
உளமிசை வளர்பெரு
மானே அழ கானபீ தாம்பரனே

பொது (வ-ம்.) இவ்விதம் பாடி பூமலர்கள் கொய்கிற அப்சர ஸ்திரீகள் எழுவர்களில் ஒரு பெண் கொம்மட்டிக் கொடியைத் தொட்டு விட அதனால் அவள் அசுத்தையாகி ககனமார்க்கம் போகிற சக்தியை இழந்து தரையில் நின்று ககனமார்க்கத்தில் நிற்கிற ஆறு மாதர்களைப் பார்த்துச் சொல்லுகிறாள்.

நடனமாடிய பாதா—என்ற மெட்டு.

இராகம்—நாதநாமக்கிரி] [தாளம்—ஆதி

பல்லவி.

நீங்களே போய் வருவீர் நல்ல
நிறைமலர் கொய்திடும் அரிவையர்களே அங்கு (நீ

அனுபல்லவி.

பூங்கொடி லக்ஷிமி பாங்கெழுந் தருளிய
புண்ணியர்க் கருச்சனை பண்ணுதற்காக
ஆங்கிமை யோர்கள் காத்திருப்பார்கள்
அடிமை அசுத்தமுள்ள கொடிதட வியதால் (நீ

(வ-ம்.) சகிகாள்! இன்று நான் ஸ்ரீமந் நாராயணன் மீது அரிநாம சங்கீர்த்தனம் சரியாய்ச் செய்யாமல் புஷ்பங்கள் கொய்தமையால் அசுத்தமான கொம்மட்டிக் கொடி என்மீது பரிசமாகி நான் அசுத்தையாகி விட்டேன். நீங்கள் அனைவரும் அரிபூஜை வேளை தவராமல் செல்லுங்கள்.

மற்றவர்கள்:— அவ்விதமே செல்லுகின்றோம்.

ரிஷி:— பிள்ளைகாள்! உமது அரசனைச் சீக்கிரம் அழைத்து வாருங்கள்

[காவலர்கள் அரசனிடம் செல்லுகின்றனர்.

காவலர்கள்:— மகாராஜ்! தங்களை முனிவர் அழைத்துவரும்படிசொல்லுகிறார். [அரசன் அப்படியே நந்தவனம் வருகின்றனர்.

அரசன்:— சுவாமி! அடியேனை அழைத்த காரணம் யாது?

ரிஷி:— அரசே! இந்த நந்தவனத்தில் புஷ்பங்களைத் திருடிக்கொண்டு செல்லும் அப்சர ஸ்திரீகளில் ஒருபெண் அதோ நிற்கின்றாள். போய்ப் பார்த்துக்கொள்வீராக.

ஆதரி நீ—என்ற மெட்டு.

இராகம்—மோகனம்] [தாளம்—ரூபகம்

பல்லவி.

தேவர் நங்காய்
சிறியவன் யான் செழுமலர் நேர்
செம்பொற் பதந்தனை யன்புடன் போற்றி னேன் (தே

அனுபல்லவி

பூவுலகத்தி லுன் சேவையைக் கண்டது
யார்செய்த பாக்கியமோ இப் பார்செய் சிலாக்கியமோ மலர்க்
காவினில் வந்தொரு ஓவியம்போல் நிற்கும் (தே

(வ—ம்.) அம்மணீ! தாங்கள் யார்? இவ்விடம் வந்து நிற்க வேண்டிய காரணம் யாது?

அப்சர ஸ்திரீ:— பாலகா! யான் அப்ஸர ஸ்திரீகளில் ஒரு பெண். பரந்தாமனுடைய பாதங்களைத் தேவர்கள் அர்ச்சிக்கும் பொருட்டு இந்தச் சிங்கார நந்தவனத்தில் என் சேடிகளுடன் வந்து புஷ்பங்கள் கொய்துகொண்டு செல்வது வழக்கம். நான் இன்று ஹரி-நாம சங்கீர்த்தனம் சரியாய்ச் செய்யாமல் புஷ்பங்கள் கொய்தமையால், அசுத்தமான கொம்மட்டிக் கொடி என்மீது பரிஸமாகி நான் அசுத்தையாகி விட்டேன். என்னுடன் வந்த சேடிகளெல்லாம் சென்று விட்டார்கள். நாங்கள் பூலோகத்திலுள்ள பரமரிஷிகளுடைய கண்களுக்கல்லாமல் மற்றவர்கள் கண்களுக்கு புலப்பட மாட்டோம். நின் பூர்வீக புண்ணியத்தினாலும் நின் நந்தவனப் புஷ்பங்கள் ஹரி பூஜைக்கு உபயோகமாகின்ற புண்-ணியத்தினாலும் நின் கண்ணுக்குத் தோன்றலானேன். இவ்விடத்தில் யாராமொருவர் எனக்கு ஏகாதசி விரதபலனைத் தெத்தஞ் செய்வார்களாகில் இவ்விடம் நீங்கிக் ககனமார்க்கஞ் செல்லக்கூடும். அக்காரியம் உன்னாலே ஆகவேண்டும் அரசே.

அரசன்:— அம்மணீ! ஏகாதசிவிரதமே இப்படிப்பட்டதென்று ஒரு நாளுங் கேட்டறியாத நான் அவ்விரத பலனை எங்கிருந்து கொடுக்கப் போகின்றேன்?

அப்சர ஸ்திரீ:- அப்படியல்ல அரசே! இதோ சொல்லுகின்றேன் கேள்

## அகவல்.

மருக்கமழ் துளவோன் மலரடி பரவும்
உருக்குமாங் கதனே யுரைத்திடக் கேளாய்
நித்தில நகையார் நின்மனை யாருள்
சத்திய வசனி சந்தியா வளிக்கு
இமையவர் புகழ இனிய காய் கறிகள்
சமையல்செய் தளிக்குந் தாதியி லொருத்தி
செய்தபா கத்தினிற் கைதவ றேற்பட
மைதிகழ் வேற்கண் மாதுசந் தியாவளி
தெண்டனை செய்து சிறையினி லடைக்க
தொண்டையங் கனிவாய்த் தோகையா ளன்று
ஒருதட வைச்சோ றுண்டதோ டிருந்து
வருமறு தினத்தில் மனவருத் தத்தால்

உண்டி யுடனே யுறக்க மற்றிருக்கக்
கண்டுநின் றேவி கருணைவுண் டாகி
மூன்றும் நாளில் முழுகி நீராடி
ஊணு திகளை யுண்டிட வுரைக்க
உத்தரப் படியே யுரியவெள் ளாட்டி
அத்தரு ணத்தில் அரிய நீராடி
அன்ன மருந்தி அடைபட் டிருந்து
நன்னய மாய்வரும் நாலாந் தினத்தில்
ஒப்பது கொண்டாள் உரியநற் றொழிலை
செப்பிடு மிந்தத் தினமொரு மூன்றில்
அன்னமோர் வேளை யயின்றதோ டிருந்த
முன்னதா கியநாள் முக்கிய தசமியாம்
அருந்துய ரதனால் அன்னநித் திரையற்
றிருந்த மறுதினம் ஏகாதசி யாம்
பொய்கைநீர் மூழ்கிப் போசனஞ் செய்ததோர்
துய்யமூன் றுந்தினந் துவாதசி யாகி
பூர்வி கத்தினிற் புரிந்தபுண் ணியத்தால்
பார்மீ தவட்குப் பலித்தத னாலே
அன்னவ ளைக்கொண் டரிதின பலனை
என்னிரு காமதில் ஈந்திடச் செய்தால்
இவ்விடம் நீங்கி யிமையவர் வசிக்கும்
அவ்விடஞ் செல்வேன் அரசருக் கரசே!

(வ-ம்) அரசே! அன்னவளைக் கொண்டுவந்து ஹரிதின பலனைத் தெத்தஞ் செய்தால் இவ்விடம்விட்டு அவ்விடஞ் செல்லக்கூடும். அக் காரியம் உம்மாலேயே ஆகவேண்டும்.

அரசன்:— அம்மணி! அவ்விதமே செய்கின்றேன். சேவகா! எனது சந்தியாவளியிடம் போனகத் தொழிற்செய்து வரும் கல்யாணியை அதிசீக்கிரம் சென்று அழைத்துவருவாய்.

சேவகன்:— பிரபூ! அவ்விதமே சென்று அழைத்துவருகிறேன்.

[சேவகன் சென்று அழைக்க கல்யாணி வருகிறாள்.]

கைசே நாசுவ தாசேத்து—என்ற மெட்டு.

இராகம்—இந்துஸ்தான் பியாகு] [தாளம்—ஆதி

கண்ணிகள்.

சுயம்—பாகம் புரிவதிற் றுனே இந்தப்
பாரினில் வல்லவி நானே உண்ட
தேக முழுதுந் தித்திக்கும் என்றுஞ்
செப்புவதுண்டு மெத்திக்கும் தண்ணீர்த்
தாகமிடையிற் கொள் ளாது என்கைச்
சாதங் கறியுண்ணும் போது

காட்டுக்—காஞ்சிரங் காயோடு வேம்பு எந்தன்
கைபட்டாற் கட்டிக் கரும்பு மிக்க
தீஞ்சுவையான பாயாசம் உண்டால்
தீர்ந்து விடுமே யாயாசம் நல்ல
வாஞ்சை மிகு மகாராசி தன்னால்
வாய்த்தது பட்டஞ் சபாசி

எங்குஞ்—செப்புஞ் சுவைகளோ ராறு என்கைச்
சித்திரத்தாலே வெவ் வேறு படத்
தப்பிதமின்றி யமைப்பேன் நல்ல
சாம்பாரைத் தாறேழ் சமைப்பேன் காலே
உப்புமா அப்பம் நெய் தோசை இவைகள்
ஒப்பின்றிச் செய்யமிக் காசை

(வ-ம்.) மகாராஜ்! என்னை இங்கு வரவழைத்த காரணம் யாது?

விருத்தம்.

தேனவிழ் மலர்ப்பூங் கோதை தேவிசந் தியாவளிக்குப்
போனக வேலை யார்க்கும் பூவைநின் புண்ணியத்தை
வானக நாட்டு மங்கை வளருநன் னகரஞ் சோத்
தானக மகிழ்ச்சியோடு தாரை வார்த் திருவாயே.

போகின்ற மான் எந்த மானோ—என்ற மெட்டு

இராகம்—மோகனம்] [தாளம்—சாப்பு

கண்ணிகள்.

தாரை வார்த்துக் கொடுத் தாலே நல்ல
தர்மமுண்டா மினி மேலே
காரைநிகர்த்த குழலணங்கே யொரு
கண்டியில் நீர்மொண்டு கொண்டுட னேவந்து (தா

அண்டமுழுது மதிக்கும் இந்த
அவனிமுழுதுந் துதிக்கும்
பண்டு உனக்குப் பலித்த ஏகாதசிப்
பலன்றனை யேயின்றே நலந்திகழ் பாவைக்கு (தா

விருத்தம்.

திண்ணிய தடந்தோள் வேந்தே சிறியவன் தெரியா வண்ணம்
பண்ணிய குற்றத் தாலே பலித்தநற் பலனை யிந்தக்
கண்ணிய வதியாந் தெய்வ கன்னியின் கரத்திலீயும்
புண்ணியந் தனக்கு மேலோர் புண்ணியமெனக்குண் டாமோ.

கல்யாணி:— அம்மணீ! வாருங்கள்.

விருத்தம்.

சங்கையில் லாதவேத சாஸ்திர முணர்ந்தோர் வாழுங்
கங்கைசூழ் விதர்ப்ப நாடு காவலன் கருத்துக் கேற்பச்
செங்கையிற் றீர்த்தம் வார்த்துச் சீக்கிரந் தருவேன் றெய்வ
மங்கையே புண்ணியத்தை வாங்கிட வருகு வாயே.

திருமால் மருமகனே—என்ற மெட்டு.

கண்ணிகள்.

தந்தேன் கொள்ளு வீரே நல்ல
தாயே இன்று நீரே முன்செய்
தவத்திற் பலித்த ஏகா தசித் தினத்தின் பலனை (த

செந்தேன் மொழி மயிலே நறுங்
கொந்தார் குழற் குயிலே இங்கு
செய்யமன வாக்கெனது மெய்யிவைகள் சுத்தியோடு (த

(வ-ம்) அம்மணீ! இதோ ஏகாதசி விரதபலனைத் தத்தஞ் செய்தேன்.

(பொது வ--ம்) என்று சொல்லி கெண்டி ஜலத்தால் தாரைவார்த்துக் கொடுக்க ஏற்றுக்கொண்ட தெய்வமங்கை அந்தரத்தில் நின்று, ஏ புண்ணியவதி! நீ கைமாறு கருதாமற் செய்த நன்றியை நான் என்றும் மறவேன். நீ நல்ல மங்களமாகயிருந்து வாழக்கடவாய் என்று வாழ்த்தினாள். [அப்போது]

அரசன்:— (தனக்குள்) ஆகா! இப்போனகத்திக்கு தன்னையறியாமற் கிடைத்த இவ்வேகாதசிப் பலனானது இப்படி அருமையான அற்புதத்தை விளைவிக்குமேயானால், ஒருவன் திரிகாண சுத்தியோடுஅனுஷ்டிப்பானாகில் எவ்வளவு அருமையான அற்புதத்தை அடைவானோ அறிகிலேன்?

அம்மணீ! அந்த ஏகாதசி மான்மியத்தை அடியேனுக்குச் சவிஸ்தாரமாய்ச் சொல்ல வேண்டும். நானும் அதன்படி நடந்து கொள்கிறேன்.

அப்சரஸ்திரீ:— அரசே! நீ செய்த உபகாரத்திற்குப் பிரதியாக நீயும் இவ்விரதத்தை அனுஷ்டித்து வரும்படிசெய்ய வேண்டுமென்பதே எனது கருத்து. இவ்விரதபலனை நீயே கேட்டபடியால் அதன் மகிமையையும், பெருமையையும் சொல்லுகின்றேன்.

பூர்வகாலத்தில் ஸ்ரீமகாலட்சுமிக்கு தேவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மாலை ஒன்றை அந்த லட்சுமி தன்னைப் பாடும்படியான வித்தியாதர கன்னிகைக்குக் கொடுத்தாள். பின்பு அக்கன்னிகை தன்னைப் பாடிய தூர்வாச முனிவருக்குக் கொடுத்தாள். முனிவர் அம்மாலையைப் பெற்றுக்கொண்டு தெய்வலோகம் வந்தார். அது சமயம் இந்திரன் வெள்ளை யானையின்மேல் பவனிவந்து கொண்டிருந்தான். அப்போது அந்த மாலையைக் கொடுக்க இந்திரன் துறட்டியினால் வாங்கி ஐராவதம் என்ற யானையின் கழுத்தில் வைத்துவிட்டான். அந்த யானை தனது துதிக்கையால் பூமாலையை யெடுத்து கீழேபோட்டு காலினால் மிதித்து விட்டது. அதுகண்ட முனிவருக்கு அடங்காத கோபமுண்டாகி அடா! இந்திரா! உன்னுடைய செல்வச் செருக்கினாலல்லவா நான் கொடுத்த மாலையின் மகிமையை அறியாதுஇப்படிச்செய்து விட்டாய். ஆதலால், உன்னுடைய செல்வமெல்லாம் நீங்கக் கடவதென்று சாபமிட, தேவலோகமெல்லாம் பாழடைந்து விட்டது. தேவர்களெல்லாம் சென்று விஷ்ணுவிடம் முறையிட விஷ்ணுவானவர் பாற்கடலைக் கடைய உத்தரவளித்து, தான் ஆமைவடிவாகி மத்தாக நாட்டிய மந்திரகிரியைத் தாங்கி நிற்க,

ஆதிசேஷனைக் கயிறாகக் கொண்டு பாற்கடலைக் கடைய பாற்கடலில் ஒழிந்தவைக ளெல்லாம் வெளிவந்தன. அவைகளை எல்லோரும் பெற்று மகிழ்ந்தார்கள். கடைசியில் லட்சுமியும் உதயமானுள். ஆகையால், தேவர்கள் விஷ்ணுவைத் தெரிசித்த நாள் தசமியாகவும், பாற்கடலைக் கடைந்த நாள் ஏகாதசியாக வும், லட்சுமி உதயமான நாள் துவாதசியாகவும் ஏற்பட்டது. இதை தேவர்கள் ஓர் விரதமாகவே அனுஷ்டித்து வருகின்ருர்கள். இப்படிப்பட்ட விரதத்தை யாராமொருவர் தசமியில் தீர்த்தமாடி ஒருவேளை அன்னம் புசித்து, விரதத்தைத் தொடக்கஞ் செய்து, ஏகாதசியன்று நீராடி திருமண் தரித்து திருத்துழாயுண்டு ஆகாரம் நித்திராதிகளை யொழித்து அரி பஜனை செய்து துவாதசியன்று சூரியோதயத்திற்குமுன் நீராடி திருமண் தரித்து, திருத்துழா யுண்டு பரந்தாமனை யர்ச்சித்து போஜன முண்டு, பகல் முழுவதும் நித்திரை யொழித்து, இரவு அன்னமின்றி ஏகாதசி விரதத்தை முறையாய் அனுஷ்டிப்பார்களாயின், அப்படிப்பட்டவர்கள் எப்படிப்பட்ட சண்டாளர்களாயினும் தவருமல் வைகுந்தம் சேர்வார்கள். நீயும் இந்த விரதத்தைத் தவருமல் அனுஷ்டித்து வருவாயாக. யான் சென்று வருகின்றேன்.

அரசன்:— அம்மணி! அவ்விதமே சென்று வாருங்கள்.

காவலர்காள்! இந்த சிங்கார நந்தவனத்திலுள்ள கொம்மட்டிச்செடிகளை யெல்லாம் அப்புறப்படுத்தி விடுங்கள். இதில் புஷ்பிக்கும் புஷ்பங்கள் பரந்தாமனுடைய பாதங்களைத் தேவர்கள் அர்ச்சிப்பதற்கே உபயோகமாகட்டும். எனது பத்தினிமார்கள் கூந்தல் சித்தரித்துக்கொள்வதற்கு வேண்டிய புஷ்பங்களுக்காக வேறு நந்தவனம் உண்டாக்கிக் கொள்ளலாம்.

காவலர்கள்:— பிரபு! அவ்விதமே செய்கின்ருேம்.

## [6-வது சீன்:— தர்பார்.]

அரசன்:— மந்திரீ! ஓர் தெய்வப் பெண்ணால் ஏகாதசி மகத்துவத்தையும், அதன் பலனையும் அறிந்தேன். இந்த விரதத்தை நமது

குடைக்கீழிருக்கும் ஐம்பத்தைந்து தேசத்தாசர்களுக்கும் லிகிதம் எழுதி அந்தந்த தேசங்களிலுள்ள எட்டுவயதுக்கு மேற்பட்ட ஆண்பெண் இருதாரத்தார்களேயும் இந்த விரதத்தை அனுஷ்டிக்கும்படி செய்வதோடு நமது தேசங்களிலுள்ள எட்டுவயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இருதாரத்தார்களேயும் இந்த விரதத்தை அனுஷ்டிக்கும்படி பறைசாற்றச் செய்வீராக.

மந்திரி:— பிரபு! அவ்விதமே செய்கின்றேன்.

,, சேவகா! இந்த லிகிதத்தை நமது காணிக்கார வள்ளுவனிடங் கொடுத்து இதன்படி பறைசாற்றச் சொல்வாய்.

சேவகன்:— பிரபு! அவ்விதமே சென்று சொல்லுகிறேன்.

அள்ளி அள்ளிக் குடிக்கும்—என்ற மெட்டு.

கண்ணிகள்.

வள்ளுவன் வள்ளுவன் யான்
உள்ளூரு வள்ளுவன்
வார்த்தை பொய்யாமல் விள்ளுவன்—குறி சொல்லுவன்
வார்த்தை பொய்யாமல் விள்ளுவன் இங்கு
மனத்தில் யாருமே நினைத்த காரியம்
அனைத்தையும் அனு தினப்படி சொல்லும் (வ

உண்டான காரியத்தைத்
தண்டோராச் செய்பவன்
ஓலை கொண் டோடி யுய்பவன்—தினம் உய்பவன்
ஓலை கொண் டோடி யுய்பவன் நல்ல
ஒட்டிக்கி ரட்டியாய் வட்டிகள் வாங்கிடும்
மட்டிச் சவங்களேத் தட்டி யடக்கிடும் (வ

நல்லோருரைத்த மொழி
தள்ளாத புத்திமான்
நாரணன் மீது பத்திமான்—நற்பத்திமான்
நாரணன் மீது பத்திமான் இந்த
நான்கு திசைமுற்று மோங்கு புகழ்ருக்கு
மாங்கதனுத்தாம் வாங்கிப் பறைகொட்டும் (வ

நொண்டிச் சிந்து.

பட்டணம்வா ழாண்டை மார்களே—யானிங்கு
பறைசாற்ற வந்தவிதம் அறியச் சொல்வேன்

எட்டுவய துக்குமேற்பட்ட—ஆண்பெண்
எளியோர்கள் வலியோர்க ளனைவர்களும்

ஒவ்வொரு பக்ஷந்தனிலே—வருகிற
உயர்ந்த தசமியினற் சலம்படிந்து

செவ்வையாய்ப் பன்னிரண்டு—இடங்களில்
திருமட் குறியதனைத் தரித்துக் கொண்டு

விரதத்தைத் தொடக்கஞ் செய்து—தேவர்கள்
மிகப்புக ழேகா தசிதனிலே

அரிபதம் பூசை செய்து—துழவுண்டு
ஆகாரம் நித்திரையில் லாமலிருந்து

வருநற்று வாதசியில்—நீராடி
மட்குறி தரித்து அத்தப் புட்பங்களினல்

திருமகள் நேசனடியைப்—பூசை செய்து
திவ்விய கனிகளில் நிவேதனம் செய்து

தீர்த்தம் துழாயருந்தி—கடவுளர்
திருவடி யார்கள்தமை யருகில் வைத்து

பூர்த்தியா யன்னம் படைத்துத்—தாங்களும்
புசித்துப் பரிமளிக்கும் மலர்முடித்து

அன்றுபகற் கால முழுதும்—நித்திரை
யகற்றி யரிவிரத முடித்திடுவீர்

என்றுருக்கு மாங்கத மன்னர்—கட்டளை
யிட்டன ராதலினல் திட்டமாய்ச் செய்தேன். (பட்ட

வ-ம்:— ஆண்டைமார்களே! இன்று தசமி, நாளை ஏகாதசி, அப்பால் துவாதசியாக இருக்கின்றபடியால், நமது மகாராஜா உத்தரவின் படி ஆண்பெண் சர்வ ஜனங்களும் ஏகாதசி விரதத்தை அனுஷ்டித்து வருவீர்களாக

(பொது) இவ்விதம் பறைசாற்ற நகரவாசிகளும், தேச ஜனங்களும் அரச வுத்தரவை மறுக்கப் போகாதென்று ஏகாதசி விரதத்தை அனுஷ்டித்து வரலாயினர்.

இவ்விதம் ஏகாதசி விரதத்தை நாடு தேசங்களில் வசித்துவரும் சர்வ ஜனங்களும் அனுஷ்டித்து வருவதினால் அவர்கள் கால முடிவில் தாம்தாம் செய்துள்ள பாப கர்மங்களெல்லாம் நீங்கி வைகுந்த லோகத்தையே அடைவதாயினர்.

[7-வது சீன்:— எமலோகம்.]

இசைந்த சூலம் கரியுரி போர்வையும்---என்ற மெட்டு.

கண்ணிகள்.

மணந்த மாதின் வயிறது கொதியெழ அயலாரை மன
மகிழ்ந்துகூடி யனுதின முலவிடு கொடியோரை
பணங்கள்தேடி யுயர்திரு வறமது புரியாமல் மிகப்
படர்ந்த பாவ வழிசெல விடுகிற சிறியோரை
வணங்கு மீசன் அடியரை முநியரை மதியாமல் மனம்
வருந்த ஏசி மதுவுணு மிடியர்க ளுடனுகை
இணங்கி வாழும் அறிவில ரொடுபல கடையோரை மிக்க
இடைஞ்சலான கொடுநர கிடையிடும் எமன் நானே.

எமதர்மன்:— செங்கண்ணா! நமது சித்திரபுத்திரனை அதிசீக்கிரம் சென்று அழைத்துவா.

செங்கண்ணன்:— அரசே! இதோ அழைத்து வருகிறேன்.

[சித்திரபுத்திரனுர் வருகிறார்]

சித்தி:— எமபுரத்தரசே! நமஸ்கரிக்கிறேன்.

எமதர்மன்:— கல்யாண்; சித்திரபுத்திரா!

சேனைக் கதிபதி யானசேங் கமலம்—என்ற சாயல்.

இராகம்—இந்துஸ்தான் பியாகு] [தாளம்—ஏகம்

கண்ணிகள்.

செல்வச் செருக்கில் கல்விப் பெருக்கில் தெய்வமிகழ்ந்த பாதகன்
தேவியிருக்க அயல் மின்னாரை சேர நினைத்த தோதகன்

அன்னைபசியிற் சின்னமுற்றிட அன்னமதனை யுண்டவன்
அரிபதத்தினை நிதந்துதித்திடும் அறிஞர் மேற் பழி விண்டவன்

குண்டுணிபல விண்டுயர்ந்தநற் குடித்தனங்களைக் கெடுத்தவன்
குருத்துரோகம தகற்றியே பொன்று கொடுத்தவர் தமைத் தடுத்தவன்

அந்தணர் மனம் நொந்திடும்படி யக்ரமத்தொடு வைதவன்
அரிய சிசுவை யழித்தவ னின்னும் பெரிய பாதகஞ் செய்தவன் (செ

வ-ம்:— இப்படிப்பட்ட சண்டாளர்களின் உயிரை யாதனு சரீரத்தில் அடைத்துக்கொண்டு வந்து இதோ தாங்கியிருக்கின்ற கன தண்டினால் மண்டை மூளை வாய்க்குள் விழும்படி தாக்கி சூலத்தினால் குத்தி, அவரவர் செய்த பாவத்திற்குத் தக்கபடி நரகத்திற் போட்டு இம்சிப்பது வழக்கம். அப்படிப்பட்ட சண்டாளர்கள் ஒருவரும் இங்கே வாராததால் நம்முடைய நரகமெல்லாம் பாழடைந்து கிடக்கிறது. இதற்குக் காரணம் யாது? நன்றாய்ப் பார்த்துச் சொல்.

சித்திரபுத்திரன்:— எமபுரத்தரசே! பூலோகத்தில் உருக்குமாங்கத சக்கரேச னென்னும் ஓரரசன் அரிதின விரதமென்னும் ஏகாதசி விரதத்தை தான் அனுஷ்டிப்பதோடு, தரணி மாந்தர்கள் அனைவரையும் திட்டமாய் அனுஷ்டிக்கும்படி கட்டளையிட்டான். அதே பிரகாரம் சமஸ்தரும் அனுஷ்டிப்பதால்தான் நமது உலகம் பாழடைந்து விட்டதேயல்லது வேறல்ல.

எமதர்மன்:— ஆஹா! அப்படியா! பூலோகத்திலுள்ள ஓர் நரபதி நமது எமலோகத்தைப் பாழடையச் செய்ய வல்லவனாகவா இருக்கின்றான்; பார்க்கிறேன்.

## [கிங்கரர் பிராப்தம்]

கிங்கரன்:— எமபுரத்தரசே! கருவிற் சிசுவை யழித்தவர்கள், கட்டுக் கதைபோல் பொய்யுரைத்தோர், குருபத்தினியை இச்சித்தோர், கோளைச் சொல்லிக் குடிகெடுத்தோர், தருமச் சொத்தை அபகரித்தோன், தாரந்தனைவிட்டு அயல்மாதரை மருவிச் சுகத்தை யடைந்தோன், மன்றில் ஓரஞ்சொன்னோன் இப்படிப்பட்ட சண்டாளர்களை அட்டை, தேள், நட்டுவாக்காலி, அரணை, பூரான், மலைநாகம், கட்டுவிரியன், செவ்விரியன், கரிய பாம்பு, செம்பாம்பு, ஒட்டை, செய்யான், கட்டெறும்பு, ஓணான், உடும்பு, கொட்டுங்குளவி, பொறிவண்டு, கொடிய முதலை முதலிய ஜெந்துக்க ளடங்கிய நரகத்திற்போட்டு இம்சிக்கும்படி என்னை நியமுகம் செய்தீர்கள். இப்படிப்பட்ட பாவிகள் இங்கே வாராததினால் எனது நரகமெல்லாம் பெண்டுகள் சொற் கேட்போன் பெருஞ்செல்வம் போனதுபோல் நாஸ்தியாய் விட்டது. ஆகையால் எனக்கு இந்த உத்தியோகம் வேண்டாம்.

இரண்டாவது கிங்கரன்:— அரசே! நொண்டி, கூன், குருடு, ஊமைகளை நோக்கி கேலிசெய்தோன், அண்டினோர் தம் குடிகெடுத்தோன், அன்னங்கறியிற் பின்னமிட்டோன், பெண்டீருடைய சொற்கேட்டு பெற்ற தாயைத் திட்டினோன், பண்டிப்பொதி போல் பருக்க வுண்டு பசிப்போர்க்கு என்றும் அன்னமிடான் இப்படிப்பட்ட கொடிய பாவிகளை சிங்கம், புலி, கரடி, செந்நாய், கழுகு முதலியஜெந்துக்களடங்கிய நரகத்திற்போட்டு இம்சிக்கும்படி என்னை நியமுகஞ் செய்தீர்கள். அப்படிப்பட்ட பாவிகள் இங்கே ஒருவரும் வாராததால் என்னுடைய நரகமெல்லாம் நன்றி மறந்தார் செல்வம் போல் நாசமாய்ப் போய்விட்டது. ஆதலால், எனக்கும் இந்த உத்தியோகமே வேண்டாம்.

எமதர்மன்:— ஏ! கிங்கரர்காள்! நீங்கள் ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம். இப்பொழுதே பிரம தேவரிடஞ் சென்று நமது உலகம் செழிப்படைவதற்கு வேண்டிய வரங்களை வாங்கிக்கொண்டு வருகிறேன்.

[என்று சொல்லி எமதர்மராஜன் பிரமலோகஞ் செல்லுகிற விதமாவது:]

அருக்கு மங்கையர் மலரடி வருடியும்—என்ற திருப்புகழ் மெட்டு.

கண்ணிகள்.

வடக்கு தென்றிசை குடதிசை குணதிசை
சுவர்க்கமுங் கிடு கிடுகிடு கிடுவென
மனத்தில் மிஞ்சிய பயமுறும் யமபுர மெனவோதில்
விடுக்கு மிங்குள கொடுசுடு நரகது
கொதிப்படங்கிய தொருசிறு நரபதி
விதித்த நின்திரு விரதம தருபுரி பவாலே

திடத்த கிங்கர ரெனும்வெகு கிளையொடு
குடத் தடங்கிய வரவென வுலகுயிர்
சிரிக்க விந்தநல் அரசினி லுறுவது சரியாமோ

அடக்க மின்றிவிண் மிசைகுமி றிடியென
அதட்டி நின்றதி விசைவொடு குறுகிய
அரக்கர் வங்கிச முழுவதும் வதைசெய்த திருமாலே

## [8-வது சீன்:— பிரமலோகம்.]

வங்கார மார்பி லணி—என்ற காவடிச் சிந்து மெட்டு.

கண்ணிகள்.

மங்காத மேலுலகு பூவுலகு கீழுலகு
வந்தேவ லேபுரியும் வாழ்வுடைய ராயிடினும்
வண்டாடு தார்துளப வாடைகமழ் நாதர்புகழ்—மொழியாமேல்

வெங்கோப யானைநிகர் காலன்வள ரூர்புகுவர்
செங்கோனு மாவலொடு மேவலர்க ளேகொளுவர்
வெந்தேமண் ணாகிடுவ ராதலினி னோர்கள் தமை—மதியோமே

பங்கேரு காசனமின் வாசமுறு மார்புடையர்
சிங்கார மாகநிறை கார்முகலின் மேனியினர்
பண்பாக வீர்புறமும் மேவிவளர் பால்வெண்மதி—ரவிபோலே

சங்கோடு நீள்திகிரி யார்பதும நேரிருகை
யெந்தாதை யாருடைய பாதமதில் நேசாதி
சண்டாள ராகிடினு மாசையொடு பூசையது —புரிவோமே.

ஆதிமூல மானவிக்கி னேஸ்வரா நமோ—என்ற மெட்டு.

கண்ணிகள்.

தென்புல மென்ப தினி வேண்டேன் வேண்டேன் வேண்டேன்
செங்கமலந் தங்கு மெங்கள் தேவ தேவனே

வெந்தழல் நரகமுற்றுஞ் சந்திரனைப் போல்
வெப்பம் நீக்கி மிக்கவுங் குளிர்ச்சி யானதால் (தெ

எமதர்மன்:— சத்தியலோகேஸ்வரா! நமஸ்கரிக்கின்றேன்.

பிரமன்:— எமபுரத்தரசே! இங்குவந்த காரணம் யாது?

எமதர்மன்:— சுவாமி! எமபுரத்தரசே என்ற நாமம் எனக்கிட்டு அழைக்க வேண்டாம். ஏனென்றால், ஒரு பொட்டளவு பொட்டல் நிலமில்லாத ஒருவனைப் பூபாலனென்று அழைப்பது போலல்லாமல் வேறில்லை.

பிரமன்:— தருமா! சகல ஜீவராசிகளையும் தாட்சண்யமின்றி அவரவர்கள் செய்த பாவத்திற்குத் தக்கபடி அடக்குஞ் சக்தியுடைய நீ இவ்வளவு இழிவாய் இயம்புங் காரணம் யாது?

எமதர்மன்:— சுவாமி! இதோ தெரிவிக்கின்றேன். கேளுங்கள்.

திருவுற் றிலகுகங்கை வரையிற் புகழ்மிகுந்த—என்ற சிந்துமெட்டு.

கண்ணிகள்.

அரிபக்தரை வெகுண்ட அதிதுஷ்டர்களி னெஞ்சை
யரிதற் குரிய ரம்பந் தேய்ந்ததே கட்டி
வரிதற் குரிய கம்பஞ் சாய்ந்ததே பசிக்
கன்ன மிட்டவ ரில்லம் நாடியே கன்னமிட்டவர் தம்மை மோதிய
அடிகற் றடிகள் தண்ட மானதே பேய்கள்
குடியற் றுயிர் துறந்து போனதே

எரியக்கினி யடர்ந்த நரகக்குழி யனந்தம்
இடிபட்ட ருகடர்ந்து போனதே கழு
வடிவொட் டவுமழுங்க லானதே மிக்க
ஏழை மைந்தரை யேயதம்புரி யீனவம்பினர் நீளுடம்பினை
யிடுசெக்குக ளுடைந்து பேர்ந்ததே தள்ளி
விடுநெட்டக ழிடிந்து தூர்ந்ததே

எமதர்மன்:— சுவாமி! இப்படிச் சீர்கேடடைந்த அரசினில் மேலே மயிரில் மலைகட்டித் தூங்கவும், கீழே அக்கினியாறு சடசட வென்று தேங்கி ஓங்கிப் பரவவும், மத்தியில் பிடிகொப்பும் மிதி கொப்பும் அற்றவர்போல் அந்தரமாய் நிற்கும் ஆசனத்தில் அமர்ந் திருந்து என்ன பிரயோசனம்? ஆதலால் எனக்கு இவ்வுத்தி யோகம் வேண்டாம்.

பிரமன்:— எமபுரத்தரசே! அவசரப்பட வேண்டாம். இப்படி யாவ தற்குக் காரணம் யாது?

எமதர்மன்:— சுவாமி! இதோ காரணத்தைத் தெரிவிக்கின்றேன். யாரோ ஒருவன் பூலோக மன்னனும் அவன் பேர் ருக்மாங்கத-னும். அவன் புண்ணிய அரிதின விரதமென்னும் ஏகாதசி விர-தத்தைத் தான் அனுஷ்டிப்பதோடு தாரணி மாந்தர் அனைவர்களை யும் அனுஷ்டிக்கும்படி கட்டளை செய்திருக்கின்றான். அதே பிரகாரம் அனுஷ்டிப்பவர்கள் இம்மையில் இஷ்ட போகங்களை அனுபவித்து இறுதியில் பரமபதமாகிய வைகுந்த வாழ்வை

அடைகின்றார்கள். ஆனதால் எனதுலகம் பாழடைந்துவிட்டது. இவ்வளவு இடையூறு புரியும் நாரதிபதியை இடையூறு புரிவதில் தோஷமில்லை. தாங்கள் உத்தரவு அளிக்கில் இதோ சென்று அதோகதம் செய்து வருகிறேன்.

பிரமன்:— தர்மா! என்ன காரியம் சொல்லவந்தாய்!

### விருத்தம்.

*தீபமதின் ஒளியினைக்கா ரிருட் கூட்டம் அவிக்காது திரண்டொன்றாகப்*
*பாவமது சேரிடினும் புண்ணியத்தை வெல்லாது பகையாற் பேசும்*
*சாபமது பதிவிரதா தனத்தினிடம் நெருங்காது தருமா வுந்தன்*
*கோபமதவ் வரசனிடந் தலைகீழாய் நின்றாலுங் குறைபண்ணாதே.*

(வசனம்.) *தர்மா! நீ அவ்வரசனை லேசா யெண்ணாதே. சந்திரன் சூரியன் அக்கினி யென்ற மூன்று சோதிகளில் முதற் சோதியான சாந்தகுண சந்திரகுல திலகன்; கற்பரசிகளாகிய நூறு கன்னியர்களின் கருத்தை விட்டகலாத காதலன்; தருமசொரூபியான தருமாங்கதனைத் தனையனாகப் பெற்றவன்; கடையிற் கருணை வழிந்தொழுகுங் கண்களை யுடையவன் கொடையிற் கோடைமேகம் போன்ற குமுணனுக் கொப்பானவன்; நெற்றியில் நிறைந்த திருமட்குறித் தழும்பும், நெஞ்சில் பகவத் தியானத் தழும்பும், நாவில் ஹரிநாம சங்கீர்த்தனத் தழும்பும், கையில் கொடைத் தழும்பும் உடையவன்; ஸ்ரீதேவி, பூதேவி யென்னும் எமது திருத்தாயர்கள் வருடச் சிவப்பேறிய இரண்டுதிவ்விய சரணம்புயத்தையும் தினந்தோறும் பூஜிக்கும் ஸ்ரீமான்; எல்லா வுயிர்க்கும் இதமே செய்யும் இறையவன், நடுநிலைமையில் நின்னைப் போன்றவன். அவனது ஒப்புவமையில்லாத அரசாட்சியில் பூவே பறிபடுவது, புனலே சிறைபடுவது, மாவே வடுப்படுவது, வாழையே குலைபடுவது, வண்டே மதுவுண்பது இவையல்லாமல், பொருள் பறிக்கப்படுவோரும், சிறையடைக்கப் படுவோரும், வடுப்படுவோரும், கொலைபடுவோரும், மதுவுண்போரும், மருந்துக்குங் கிடையாது என்றும் கொடுப்பவர்களிடம் யாசிப்பதில்லாத குறை யொன்றே யொழிய வேறு குறை ஒன்றுமில்லை என்று சுவர்க்க மத்திய பாதாள மென்ற முப்புவனங்களிலும் முரசொலிபோல் முழங்கக் கேட்டிருக்கின்றோம். எம்மைத் திருவுந்தியில் உதிக்கச் செய்த சாக்ஷாத் கண்ணபிரானை யன்றி, நீ யல்ல; நின்னோடு எழு திக்குப் பாலர்களும் திரண்டுபோய் ஜெயிக்க முயன்றாலும் அக்காரியம் முடியாது. அதற்கொரு உபாயம் நான் செய்கின்றேன்; நீ சென்றுவா.*

பிரமன்:— சர்வலோக மோகனங்கி அதி சீக்கிரம் வா.

[மோகினி பிராப்தம்.]

மீனுக்ஷி ராமணுவே தாந்தசுகுணு—என்ற மெட்டு.

இராகம்—செஞ்சுருட்டி] [தாளம்—ஆதி

பல்லவி.

தாமரைச் செங்கண்ணு பூந்
தண்முகில் வண்ணு செழும் (தா

அனுபல்லவி.

மாமறை வேதா வணங்கும் பொற் பாதா
வஞ்ச மிகுத்துள கஞ்சனை வென்றிடு
குஞ்சர மேயெனக் குன்சர ணங்கதி (தா

நின்திரு வடியே யென்றலை முடியே
நித்தமும் வைத்துனை நத்தியே பத்திசெய்
புத்திரி தனக்குயர் புத்தி மிகுத்தருள் (தா

தேவர் சகாயா திருமகள் நேயா
செந்தமிழ் தேருயர் கந்தசு வாமியின்
சிந்தையிலே வளர் சுந்தரனே விரி (தா

மோகினி:— பிதா! என்னை அழைத்த காரணம் யாது?

பிரமன்:— கண்மணி! மோகனங்கி பூலோகத்தில் மந்தரகிரிக்குச் சமீபத்திலுள்ள சந்தனப் பூஞ்சோலையில் கமுகு மரத்திற் பூட்டியிருக்கும் பொன்னூஞ்சலிலே யிருந்து வீணகானஞ் செய்து கொண்டேயிரு. அங்கே பூலோக புரந்தரனுகிய உருக்மாங்கதன் வேட்டையாடிய களைதெளிவதற்காக அவ்விடம் வந்து உன்னைக் கண்டு ஆசைகொண்டு நீ யாரென வினவுவான். அவனை உன் ஆசை வலைக்குள்ளாக்கி அவனிடத்தில் ஹரி சாக்ஷியாக ஓர் வரம் வேண்டிய சமயம் பெற்றுக்கொள்வதாய்க் கேட்டுப் பெற்றுக் கொண்டு சரச சல்லாபமாகக் கூடியிருந்து, அவன் அனுஷ்டிக்கும் ஏகாதசி விரதத்தைப் பங்கஞ் செய்யவேண்டும். அதற்கு இணங்காவிடில், அவனது புத்திரனுகிய தர்மாங்கதனுடைய தலையை வெட்டித்தரச் சொல்லி நம்மிடம் வாங்கி வரவேண்டும்.

மோகனங்கி:— பிதா! அவ்விதமே செய்கின்றேன்.

[9-வது சீன்.— தர்பார்—குடிகள் முறையீடு.]

குடிகள்:— மகாராஜா! நாங்களிட்ட பயிர்களை யெல்லாம் மிருக ஜாதிகள் வந்து நாசப்படுத்துகின்றன. தாங்கள் வேட்டைக்கு எழுந்தருளி எங்களைக் காப்பாற்ற வேண்டும்.

ருக்மாங்கதன்:— குடிகாள்! நீங்கள் ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம். நான் இதோ சென்று அம்மிருக ஜாதிகளை அதோஹதஞ் செய்கின்றேன். சென்று வாருங்கள்.

அரசன்:— பிரதான்! யான் காட்டிற்குச் சென்று வேட்டையாடி ஆங்காங்குள்ள தவசிரேஷ்டர்களை தெரிசித்துவர வேண்டியதிருப்பதால், எனது புத்திரனாகிய தருமாங்கதன் சகல சாஸ்திரங்களிலும் ஆசிரியரைப்பார்க்கிலும் எண்மடங்கு வல்லமையுள்ளவனாகி சகல வித்தைகளையும், குறைவறக்கற்று ஆண் சிங்கம்போல் ஆண்மையும், ஆதிசேடனைப்போல் அறிவும், மதயானைபோல் நடையும், காமனைப்போல் கட்டழகும், மார்த்தாண்டனைப் போல் தேசும், கற்பக விருக்ஷம்போல் கொடையுமுடையவனாய், பொறுமை, அன்பு, ஆசாரம், ஒழுக்கம், ஊக்கம், சாந்தம் சர்ச்சன நேய முதலான நற்குணங்களுடன் உயிருக்கு முடிவு நேரிடுமாயினும் உண்மையே பேசுவதும், உறுதியே பூண்பதும் இன்சொல்லே கூறுவதும், இதமே செய்வதும், பயனுள்ள காரியங்களைப் பாராட்டுவதுமாகிய நற்செய்கை யுடையவனாய் மாதா பிதாக்கள் மனப்பாங்கறிந்து அவர்களி னிச்சையின் வழி நடந்து இளமைப்பருவத்தில் எல்லாமறிந்த வல்லவனென்று கண்டோர் கொண்டாடவும், கேட்போர் மனங்களிக்கவும், இளவரசுக்குத் தக்க பருவமடைந்திருக்கிறான். அன்னவனுக்கு முடிசூட்டிவிட்டு யான் வேட்டைக்குச் செல்ல வுத்தேசித்திருக்கின்றேன். உனது சித்தம் யாது?

மந்திரி:— பிரபு! அவ்விதமே செய்ய வேண்டியது அவசியந்தான்.

அரசன்:— சேவகா! எனது அருந்தவப் புதல்வன் தருமாங்கதனை அழைத்து வருவாய்.

சேவகன்:— பிரபு! அவ்விதமே செய்கின்றேன்.

## [தருமாங்கதன் விஜயம்.]

குமரனையே பாடிக் கொண்டாடு வோமே—என்ற மெட்டு.

இராகம்—செஞ்சுருட்டி] [தாளம்—ஆதி

பல்லவி.

திருவருள்தா எங்கள் செந்திரு மாலே (திரு

அனுபல்லவி.

இருதய கமலத்தில்
எப்பொழுதும் நினைக்கும்
ஒருதனிச் சிறுவன் யான்
உன் புகழ் பாடிடநல் (திரு

தொகையறு.

அரிஹரி கோவிந்தா நாராயணா வென்றே
அடிபரவுந் தொண்ட னுக்காய்
துரிதமாய் நரசிம்ம ரூபமது கொண்டொரு
தூணிலே வந்த தேவா

பாட்டு.

சுந்தரக் கும்பஸ்தனச் செந்திருமங்கை தினந்
தோய்ந்திடுந் தோளுடையாய்
வாய்ந்தகூர் வாளுடையாய் (தி

## [தருமாங்கதன் சபை வணக்கம்.]

அம்பிகா உன் மகன் குகன்—என்ற மெட்டு.

பல்லவி.

தந்தை தாய் என் குரு வென்றே
வந்தனந் தந்தேன் நா னின்றே (த

அனுபல்லவி.

முந்தித் தவம் புரிந்து
முந்நூறு நாட் சுமந்து
பிந்தி யுளங் கனிந்து
பெற்று முற்றும் கற்று வைத்தருள் (த

தக்கவரே நற்றவரே
சாதுசங்க முற்றவரே
எக்கலையுங் கற்றவரே
இங்கு வந்து தங்கு முங்களை (த

இன்னிசைநா லாய்ந்தவரே
ஏற்றசெல்வம் வாய்ந்தவரே
மன்னுபுவி தோய்ந்தவரே
வாதென் மீதில் லாது காத்திட (த

[தந்தையை வணங்குகிறான்.

தஞ்சமென்று கெஞ்சு கின்றேம்—என்ற மெட்டு.

கண்ணிகள்.

தந்தையேயுன் தாளிணைக்குச் சரணஞ் செய்தேனே
சரணஞ் செய்தேனே என் றணையருள் கோனே (த

சிந்தைதனில் வாழ்ந்திடும்நற் றெய்வம் நீதானே
நற்றெய்வம் நீதானே மிகத் திகழுஞ் சீமானே (த

அண்டலரை வென்றிடுநல் லரச சிங்கமே
நல் அரசிங்கமே பொன் னுறைய ரங்கமே (த

(வசனம்) பிதா! நமஸ்கரிக்கின்றேன். அடியேனை அழைத்த காரணம் யாது?

அரசன்:— பாலகா! குடிகளிட்ட பயிர்களை மிருக ஜாதிகள் வந்து நாசப்படுத்துவதாக முறையிட்டார்கள். யான் வேட்டைக்குச் செல்லவேண்டியதா யிருப்பதால், உனக்கு மகுடாபிஷேகஞ் செய்துவைத்துவிட்டு வேட்டைக்குச் செல்ல உத்தேசித்திருக்கின்றேன். உனது சித்தம் யாது?

தருமாங்கதன்:— பிதா! 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்றபடி தங்கள் சித்தம்போல் நடக்கத் தயாராகவே யிருக்கின்றேன்.

அரசன்:— பாலகா! இந்தச் சுவர்ண கசிதமான சிம்மாசனத்தில் வீற்றிருப்பாய்.

தருமாங்:— பிதா? அவ்விதமே வீற்றிருக்கின்றேன்.

## [முடி சூட்டல்.]

ஓயி சவுக்கா அரே பலுமே—என்ற மெட்டு.

இராகம்—இந்துஸ்தான் பியாகு] [தாளம்—ஆதி

### கண்ணிகள்.

மகுடம் புனைந்தனனன் இன்றே புவி
மன்னர் மன்னர் தொழ வென்றே எதிர்
பகைவ ரானவரை வென்றே வரும்
பாரமான சிங்கக் கன்றே
பாரதனை யாளச்
சீரமைச்சர் சூழ அதி
சூரர் தாளிணையிற் றாழச் செம்பொன் (ம

திங்கள் வெண் கவிகை பிடிக்க உயர்
செந்தமிழ்ப் புலவர் படிக்க இள
மங்கைமார்க ளிங்கு நடிக்க ஒலி
வட்டமான முரச சடிக்க
மாமறைகள் போற்ற அரி
பூமுழுது மேத்த
நாமந் தன்னையுரு வேற்றச் செம்பொன்(ம

இந்த உடலை நம்பி இருக்கலாமா—என்ற மெட்டு.

இராகம்—செஞ்சுருட்டி] [தாளம்—அடதாளம்

### கண்ணிகள்.

தங்க மகுட முடி தாங்கினனே யான்
எங்கும் புகழுஞ் செங்கோ லேந்தினனே (த

மந்திரி யோர் புறம் வந்து நிற்க தள
தந்திரி வந்தனந் தந்து நிற்க (த

தம்தம் தனவென மத் தள மடிக்க நறுங்
கொந்து குழல் மட வார் நடிக்க (த

குற்ற மில்லாத முத்துக் குடை பிடிக்க இங்கு
நற்றமிழ் வாணர்முன் னூற் படிக்க (த

அரசன்:— சேவகா! வேட்டைவீரர்களை வேட்டைக் கருவிகளுடன் அதி சீக்கிரம் அழைத்து வருவாய்.

சேவகன்:— மகராஜ்! அவ்விதமே அழைத்து வருகின்றேன்.

வேடுவர்கள்:— பிரபு! நமஸ்கரிக்கின்றோம்.

அரசன்:— வீரர்காள்! நமது குடிகளிட்ட பயிர்களை அழிக்கும் மிருக ஜாதிகளை வேட்டையாடச் செல்வோம் வாருங்கள்.

[உருக்குமாங்கதன் வேட்டைக்குப் புறப்படல்.

ஆசை உண்டாகத் தடையோ—என்ற சாயல்.

இராகம்—மோகனம்] [தாளம்—ஆதி

பல்லவி.

வேட்டைக் கெழுந் தருளு வோம் அதி
விரைவொடு நெடுவன (வே

அனுபல்லவி.

ஈட்டி முனையெதிர் காட்டி யதிபல
தாஷ்டி கரைவழி கூட்டியே
இடைவரு மிருகம துடலது கிழிபட (வே

ஓங்கு மதகரி வேங்கை புலியினம்
மாங்காடி உயிர் நீங்கவே
உருவிடு சுருகிகள் ஒளிபள பளவென (வே

சிங்க மலையார வங் கடமைகள்
தங்கு கிரிகள் நடுங் கவே
திடுதிடு திடுவென நெடுமுற சடிபட (வே

அரசன்:— அதிசீக்கிரம் என் பின்பற்றி வாருங்கள்.

வேடுவர்கள்:— பிரபு! அவ்விதமே வருகின்றோம்.

## [10-வது சீன்.— வனாந்தரம்—வேட்டையாடல்.]

ஆனந்த நடராஜ மூர்த்தியே உன்னை—என்ற மெட்டு.

இராகம்—மோகனம்] [தாளம்—சாப்பு

கண்ணிகள்.

வேட்டைக்குச் சென்றிடக் காட்டினை நாடியே
வீரர்களே என்பின் வாருங்க ளோடியே
தாஷ்டிக மான புலிகள் வருவதை
தாக்கி அதனுயிர் போக்கிட வேவன (வே

ஓடுதுகாண் புள்ளி மானினங் கோடியே
ஒன்றுபோ லேஅந்தக் குன்றினைத் தேடியே
ஆடு மயிலினம் அந்தாம் செல்குது
அச்ச மில்லாச் சிங்கம் கர்ச்சனை செய்குது (வே

பன்றி உறுமி வருவதைக் கொல்லுங்கள்
பாயுங் காடிமேல் நாயினை ஏவுங்கள்
வென்றி மதகரி கன்றுகள் யாவையும்
வெங்கணை ஒன்றினால் பங்கம தாக்கிட (வே

மலடி வயிற்று மகன் போலே—என்ற திருப்புகழ் மெட்டு.

நெடிய புலியின்வால் பிடித்து நீள்முது
கொடிய நிலமிசை யடித்து வாய்மிக
நெரிய வுதிரம் வேல் குடிக்கவே வெகு சமாடி
கொடிய காடிமேல் துடிக்கவே யதன்
அலகையொ ளிருவாள் கிழிக்க யாளிகள்
குடரை யொருபுற மிழுக்க வோரிகள் வரையாடு
மடிய வலையிலே குதிக்கு மான்மரை
கரிய வெருமைமா டடித்து வீழவல்
விரைவில் நெடியவில் வளைத்து விரர்கள் கணை தூப
கடுகி வருகுமா மதத்த யானைகள்
சிதைய அரியகா னகத்திலே கொலை
கருது மிரணதே வதைக்கு மாபலி யிடுவோமே.

முருகன்திரு மால்மருகன் பெருமை—என்ற மெட்டு.

இராகம்—அடாணா] [தாளம்—ரூபகம்.

பல்லவி.

மிருகம் வரும் வேகத்தைப் பார்த்திடுவீர் வேட்டை
விரர்களே அதி சூரர்களே வன (மி

அனுபல்லவி.

அருகே யொரு சிங்கம் பதுங்குது
அயிலால் வளர் தடியால்அல கதிலேபல அடிபோடு வீர் (மி

சரணம்.

வென்றி மதகரி யொன்று திரண்டதன்
கன்றினத்தைக் கூட்டி சப்த
மேகம்போல் நிற்குது நீர்சென்று எய்குவீர்
வில்லிற் கணை பூட்டி
பன்றியுருமி வருவதைக் கொல்லுங்கள்
பாய்ந்திடும் வேங்கையைச் சாய்ந்திட வெல்லுங்கள்
சென்றிடு மானை வழிகட்டி நில்லுங்கள்
திசையெங் கணு முயல் தாவுது
திரை பொங்கிய தெனவே வன் (மி

அரசன்:— வேட்டை வீரர்காள்! நாம் இவ்வனத்திலுள்ள மிருகங்களை யெல்லாம் அதோகதஞ் செய்துவிட்டோம். இனி வேட்டை யாடுவதற்கு மிருகங்களுமில்லை, எனக்கும் களை அதிகரித்து விட்டது. ஆதலால் அதோ தெரிகின்ற சந்தனப்பூஞ்சோலையிற் சென்று சற்று இளைப்பாறி வருகின்றேன். நீங்கள் சைனியத்தோடு இவ்விட மிருப்பீர்களாக.

[உருக்குமாங்கதன் சந்தனப் பூஞ்சோலை வருகிறுன்.

ஆகா! இதென்ன ஆச்சரியம்? இந்த நிர்மானுஷ்யமான கானகத்தில் தெய்வீகத் தன்மை பொருந்திய வீணுகானஞ் செய்கின்றது யாரோ? சென்று பார்க்கின்றேன்.

அவனியில் யாரேனும் அநீதம்செய் வாரேயானுல்—என்ற மெட்டு.

இராகம்—கானடா.] [தாளம்—ஆதி.

கண்ணிகள்.

இது என்ன ஆச்சரியம் இந்த வனந்தனிலே
புதுமை யாய்க் கேட்குதே பூங்குயி லோசைபோலே
மீட்டி நாரதர் பாடும் வீணையி னேசையைக்
காட்டிலுங் கீதவொலி காதிற் கூட்டு தாசையை
கல்லுருகும் வீணு கானஞ் செய்வாள் சசியோ
நல்ல ரதியோ தேவ ரம்பையோ வூர்வசியோ (இது

(வ-ம்.) ஆஹா! என்ன இனிமை? வீணை மீட்டுவதில் நாரதரினும் சிறந்த நங்கை யொருவளன்றோ வீணுகானஞ் செய்கின்றனள்! இம்மங்கை நல்லாள் தேவ ரம்பையோ? ஊர்வசியோ?

## கலித்துறை.

மாங்காய் கதலி பலவின் கனியை வயலிலிட்டுத்
தேங்காயி னீர்செழுந் தேன்பசும் பாலதிற் றேக்கிமின்னூர்
பாங்காய் நடவ வெயிற்படா தோங்கிப் பருத்துவெகு
சோங்காய் வளர்ந்த நடுக்கரும் பாமிவள் சொற்சுவையே.

(வ-ம்.) பால், தேன், கனிரசம் முதலானவைகளால் வளர்ந்து முற்றிய இடைக்கரும்பின் சுவையையும் பழிக்கச் செய்யும் இனிய கான அதிரூப சுந்தரியான, இந்நறுஞ் சோலையில் ஊஞ்சலாடும் அந்த

நந்தகோ விந்த முகுந்தா—என்ற மெட்டு.

இராகம்—தோடி] [தாளம்—ரூபகம்

பல்லவி.

மங்கைதன் அங்க மோ தங்கம்
மதி வதன (ம

அநுபல்லவி.

கொங்கை யோ சிவலிங்கம்
கோதை யிடையோ சிங்கம்
குதலை மொழியிள ரதியை நிக ரொயி லாள்
மயிலாள் குயிலாள் கொடிபோல் நிற்கும் (ம

வண்டோ குழலோ விண்டு
வார்த்தை சீனிக் கற்கண்டு
வனிதை யிவளுயர் மதன கலை தெளிவாய்த்
தெரிவாள் புரிவாள் மானையே நிகர் (ம

சின்ன நடையோ அன்னம்
சிறுபல் வயிரச் சன்னம்
தினமும் எனதுட மனதின் மிசைவளரும்
தெரிவை அரிவை திருமகள் நேர் (ம

காக்ஷி கண்காக்ஷியே திருவனந்த புரத்தின்—என்ற மெட்டு.

பல்லவி.

இந்த மா மங்கைபோல்
எங்கணு நான் கண்ட தில்லை (இ

அனுபல்லவி.

சந்த விருத்தம் பல்லவி
சாற்றுவதி லே வல்லவி (இ

சரணம்.

மண்டலத்தி லின்னவளைக் கண்டதுநல் யோகமே
வண்டமர் குழல்மிக விருண்டகரு மேகமே
கண்டுமொழி யாள்விழி டுவினினும் வேகமே
கந்தரத்துக் கஞ்சிடும் பசுந்த நிறப் பூகமே

செண்டிரண்டை வென்றிடுங் கொங்கை யிதழ் விரிந்த
செங்கமல மொப்பிடுஞ் செங்கை திரு மடந்தை
எண்டிசை துதித்திடுங் கங்கை சரசதி
யின்னவர்கள் பின்னிடும் நங்கை சிறுவிரலால்
ஆணிகளை முறுக்கி
வீணைசுதி பெருக்கி
வாணியெனச் செருக்கி
வாசித் துள்ள முருக்கும் (இ

கன்னிய ரழகெனுஞ் செம்பொன் னினுக்கோ ரணியே
காம மென்னும் வான்பயிர்க ளேவிளையுங் காணியே
மன்மதன் படைக் கலங்கள் வாரி வருந் தோணியே
வையக மின்னார்கள் துதி தெய்வ இந்தி ராணியே

சன்ன இழைச் சின்ன மெல்லிடை நடுக்கதலித்
தண்டுகளில் ரெண்டு பொற்றுடை வனசமலர்
அன்னமது பின்னிடும் நடை இவள் மொழிக்கு
அஞ்சு மந்தக் கிஞ்சுகப் பெடை நவமணிப்பூண்
தேக மெங்கும் பூட்டிச்
செழுமலர்கள் சூட்டி
தோகை ஒயில் காட்டித்
துலங்கிடுஞ்சீ மாட்டி (இ

அரசன்:— கருமேகத்தையும் உகாந்த விருளையும் வண்டுக் கூட்டங் களையும் பழித்து சாந்து சவ்வாது முதலிய வாசனைத் திரவியங் களையும் சம்பங்கி யெண்ணெயுந் தடவி மல்லிகை முல்லை முதலிய

மலர்கள் சூடி, சந்திரப்பிறை சூரியப்பிறை முதலிய அணிக ளணிந்து விளங்கும் கூந்தலையும், மூன்றாம் பிறையைப் பழித்த நெற்றியையும், இந்திர வில்லைப் பழித்த புருவத்தையும், வள்ளைக் கொடியையுங் கத்தரிக்கோலையும் பழித்த காதுகளையும், வேலையும் சேலையும் வாளையும் கடலையும் நீலோற்பல மலரையும் மா வடு வையும் பழித்த கண்களையும், குமிழம் பூவையும் சண்பகமலரை யும் பழித்த நாசியையும், சாணைக்கல்லையும் கண்ணாடியையும் பழித்த கன்னங்களையும், கொவ்வைக் கனியையும் பவளத்தை யும் பழித்த இதழையும், முத்துக்களைப் பழித்த பற்களையும், பூரணசந்திரனைப் பழித்த திருமுகத்தையும், பாலையுந் தேனையும் பழித்த சொற்களையும், வலம்புரிச் சங்கினைப் பழித்த கழுத்தை யும், மூங்கிலடியை நிகர்த்த தோள்களையும், பைங்குரும்பையோ! பம்பரமோ! பருவதச்சிகரமோ! சொக்கட்டாங் காயோ!வென்று சொல்லும்படியாக திரண்டுபூரித்து விம்மிப் புளகாங்கிதங்கொண்டு முத்துமாலை மோகனமாலை யணிந்து கச்சுவடம் பூட்டி விளங்கும் கனதனங்களையும், ஆலிலை நிகர்த்த வயிற்றையும், தாமரை மலர் போன்ற கரங்களையும், மகிழ மலர்போன்ற உந்தியையும், சிறு சங்கிலி போன்ற ரோம தாரையையும், சிற்றுடுக்கையையும், மின்னற் கொடியையும் பழித்த இடையையும், இளவாழைத் தண்டுபோன்ற துடையையும், நண்டைப்பழித்த முழங்காலையும், வராலினைப்பழித்த கணைக்கால்களையும், அனிச்சமலரினு மெல்லிய பாதங்களையும், தங்கத்தைப்பழித்த தேகமும் உடைய இச்சுந்தர வல்லியை யன்றோ அடைதல் வேண்டும்.

(பொது வ-ம்.) இவ்வாறு வருணித்துக்கொண்டு நின்ற உருக்கு மாங்கத மன்னனைக் கண்ட மோகனாங்கி, அரசனது வனப்பும் அழ கும் தன்னைக் கவர்ந்த தறிந்தவளாய்க் காதல் கொண்டு;

பரமானந்த மெய்ப்பரங் குன்றேன்—என்ற மெட்டு.

பல்லவி.

இவனே எனக் கிசைந்த நாதன்—தெய்வ
இந்திரன் தனிலுமதி சுந்தரம் நிறைந் திருக்கும் (இ

சரணம்.

சிவனே டெதிர்த்த மதன் சாத்திரம் தெரிந்த துரை
திரேக மதிக திட காத்திரம் எவர் தமையும்
தவராம லேமயக்கும் நேத்திரம் தழுவிக் கட்டிச்
சையோகஞ் செய்ய எனக் காத்திரம் சாச மூள்ள

67837
O-, 2M1KK,R

செஞ்சொல்மட வஞ்சியர்கள்
நெஞ்சுருக்கும் புன்சிரிப்புக் காரன்—வெகு சிங்காரன்
சித்தமுட னெங்கனத்தில்
முத்தமிட் டணைத்திடவொய் யாரன்—முகக்கெம் பீரன்
தஞ்ச மென்று வந்தவரை
அஞ்சலென ஆதரிக்குந் தீரன்—தனை யெதிர்த்த
சத்ருருக்கள் சென்னிகளை
தத்திவிழ எத்துமுனை வீரன்—செழும்பூந் தாரன்

வீரகண் டாமணி கால்களி லுடையான்
மீறிய திமில்சிமிழ் காளைபோல் நடையான்
பாரம தாகவே பூரித்த துடையான்
பஞ்சணை மீதுகொஞ்சக்கொஞ்சமுமே சடையான் (இ

(வ-ம்) ஆஹா! இவரைப் பார்க்கும்பொழுது முன் தன்னை யெரித்த ஈஸ்வரனை எய்வதற்காக மன்மதன் உருப்பெற்று கூர்மை மிகுந்த புஷ்பபாணங்களைத் தேட வந்தவர்போ லிருக்கிறது. இன்னவர் ஈஸ்வரனோ! ஈஸ்வரனென்றால் நெற்றிக்கண் விளங்கவேண்டுமே! திருமாலோ! திருமாலென்றால் மார்பி னிடத்தே லட்சுமியோடு விளங்க வேண்டுமே! இந்திரனோ! இந்திரனுயின் ஆயிரங் கண் கள் வேண்டுமே? சந்திரனோ! சந்திரனுயின் களங்கம் விளங்க வேண்டுமே? அவ்விதம் யாதொன்றும் இல்லாம லிருக்கின்ற படியால், யான் எண்ணிவந்த புண்ணிய புருடன் இன்னவராகத் தான் இருக்கவேண்டும்; இன்னவரும் நம்மேல் காதல்கொண் டவராகவே காணப்படுகின்றார். சரி, இருக்கட்டும்; நாம் அவ சரப்பட்டு இணங்குவோமே யானால், நாம் கருதிவந்த காரியம் தடைப்படும். ஆதலால், சிறிது ஊடல்செய்து வாத்தைப் பெற் றுக்கொண்டு அப்பால் இணங்கிக் கொள்ளுவோம்.

பூவருந் திருவே—என்ற மெட்டு.

இராகம்—தேசிகதோடி.] [தாளம்—ஏகம்.

**கண்ணிகள்.**

சுந்தர ரதியோ இவள் சந்திர மதியோ குளிர்ச்
சோலை தோறு முலாவி வாழ்கிற
தோகை மாயயி லோகுயி லோவிவள்

அந்தா தருவோ மண மிஞ்சிய மருவோ எங்கள்
ஆதி பெண்தெய்வ மோபசும் பொன்னி
னுல்வனைந்த அலங்கிர்த பாவையோ

கானக மானே தெளி வான செந்தேனே எந்தன்
காமமென் றிடு நோயகன் றிட
பூமி வந்திடு மாமருந்தோ விவள்

சீனி சர்க்கரையோ உயர் தேவர் நற்சிறையோ எந்தன்
சிவன் முத்திய தாக நற்பிர
மாபடைத்து விடுத்திடுங் கன்னியோ

வாய்மொழிகரும்போ தனந் தாமரையரும்போ செழு
மாதுளங் கனியோ குரும்பையோ
பால் தருங்குட மோ சிமிழோநற் (சு

(வ-ம்) ஆஹா! அழகெல்லாந் திரண்ட ஆரணங்கோ! இவ்வுலகை மயக்கவந்த மாயையோ! முற்றுந்துறந்த முனிவரையும் கவரும் மோகனாஸ்திரமோ! இனிமைதரும் கற்கண்டினைப் பழிக்கவந்த கனிரசமோ! பிரமன் அமைத்த விசித்திரமோ! விஸ்வகர்மன் இயற்றிய சுவர்ணப் பதுமையோ! தெய்வப்பெண்ணோ! இவள் யாரோ தெரியவில்லையே? (அருகிற் சென்று விசாரிப்போம்.) இந்தப் பூஞ்சோலையில் தன்னந் தனியே வீணகானம் செய்யும் பெண்ணரசே! நீ யாரோ? உனது வாசஸ்தலம் யாது? உனது சரிதம் கேளாத் தரித்திரனாயிருக்கிறேன்; வசந்தகால வண்டைப் போல் உனது வாய்மலரிற் சுரக்கும் தேனையுண்டு பிரம்மானந்தங் கொண்டு மேன்மைபெற விரும்புகின்றேன்.

காரண மாகுந்தெய்வம் பாரதமாதா தன்னை—என்ற மெட்டு.

இராகம்—செஞ்சுருட்டி] [தாளம்—ஆதி.

கண்ணிகள்.

பெண்ணே யெனதிரண்டு கண்ணே யுனைப் பிரிந்து
உன்னே னினிநல் லன்னமே—மனத்திலொன்றை
எண்ணேனி துண்மை சொன்னமே காமப்
பித்தமுந் தலை முற்று மண்டிட
சித்தமுந் தளர்ந் துற்று வாடினேன் (பெ

பிடித்த கரும்பு வில்லை யொடிப்பவன் போல் வளைத்து
வடிக்கணை யால்மலர்கொண் டடிக்கிறான் மாரன்வந்து (பெ

(வ-ம்) மாதர் திலகமே! கலிக்குந் திரைகடொலிக்குங் கொடிய அம்புலிக்குந் தென்றற் புலிக்கும் பெறு முருவிலிக்கும் நான் எவ்வாறு ஆற்றுவேன்? உனது அழகைக்கண்டு பொறாமைகொண்ட குளிர்ந்த சந்திரனும் கிரணங்களைத் தனலாய் வீசுகின்றான். மன்மதனோ! சிறிதும் இரக்கமின்றி கரும்புவிற்கொண்டு நீலோற்பல மலர்க்கணையை என்மீது எய்கின்றான்;

மோக:—

விண்ணுளு மிந்திரனுந் தண்ணாருஞ் சந்திரனும்
பெண்ணாசை யால்த்தம தங்கம்—உலகறியக்
கண்ணாத் தேய்வுறப் பங்கம்—இங்கு
மெய்மை யாகவே யெய்தினாதி
மையலால் மனம் நையுறாதே செல் விண்ணுளு

வெகுல்ட்சங் கோடி ஜனம் அவலக்ஷண மடைந்தார்
விகடத் தனத்தை விட்டு ஜெகரட் சகனைத் துதி (வி

(வ-ம்) இதென்ன விபரீதம்! யாரையா நீர்? என்னிடத்தில் தகாத வார்த்தையாடுகின்றீர்; தன்னை விரும்பாத பெண்கள்மீது ஆசைப்பட்டுக் கெட்டவர்கள் அநேகர். நீயும் வீணாய்க் கெடாதே!

உருக்:—

தேனே வரிநெடுங்கண் மானே மிகமெலிந்து
போனேன் சிவந்த திருவாய்—குவித்தெனக்குத்
தானே ஓர் முத்தந் தருவாய்—குளிர்
திங்கள் செங்கதிர் தங்கிடும் புவி
யெங்கு நன்மணம் பொங்கிடு மலர்த் தேனே

எந்தன் சித்தத் திருத்தியுனை நித்தப் படி துதிப்பேன்
புத்தமு தத்தினினு மெத்த வினிப்புறுஞ் செந் (தே

(வ-ம்) என் இதயங்கவர்ந்த மதன ரஞ்சியே! என்னை வெறுக்காதே! நித்தமும் உன்னைப்போற்றுவேன். எனக்கோர் முத்தந்தருவாய்.

மோக:—

தானந்தனை விடுத்துக் கானந்தனிலே வந்து
மானந் தனையிழக் கின்றாய்—அடா கெடுவாய்
ஈனந்தனை யளக் கின்றாய்—மிகு

சல்லியே யுனே வெல்ல வல்லவர்
இல்லை யில்லைநல் டில்லி யூர்வரை தானம்
சானகியா லுயர்ந்த ராவணன் சீரழிந்து
போன கெடுஞ் சரிதை தானுமுணர்ந் திலையோ (தா

(வ-ம்) அடா! என்னை விரும்பிச் சின்னமடையாதே! வீணாகக் கெட்டுப்போவாய்! கேடு நினையாதேயென்றால், கெடுவேன் பந்தயமென்னவென்று வினவினாற்போ லிருக்கிறது.

ஆரவாரித்துவந் தனர்கள்—என்ற மெட்டு.

இராகம்—காப்பி.] [தாளம்—ஏகம்.

கண்ணிகள்.

உருக்:—

என்னடி மட மயிலே நீ
என்னினைக் கின்றனை சொல்லுசிந் தையிலே
உன்னடி பணிவேன் நான்
உனக்கு வேண்டிய தனைத்துங் கொடுத்து
உன்னடி பணிவேன் நீ

உரிமை யாகினாற் போதும் கண்ணே
பெரிதல்ல எனக் கேதும் (எ

மோக:—

போ பயித்திய காரா இனிப்
பூசை கிடைக்கு நீ பேசு வசாரா
கோபம் பொல் லாதே சிறு
கோதில்லா வொரு மாதர்க் கேவருங்
கோபம் பொல்லாதே என்னைக்

கோரி நெஞ்சுளைக் காதே உன்
காரியம் பலிக் காதே சிச்சீ (போ

உருக்:—

கோப முள்ளவர் வசமே குணம்
கூடியிருக்கு மென் பாரிது நிசமே
பாவ மல்ல வோ ஒன்றைப்
பரிந்து கேட்போர் முன் விரைந்து சொல்வது
பாவ மல்ல வோ அடி

பாவையே கிட்ட வருவாய் செழுங்
கோவை வாய்முத்தந் தருவாய் அடி (எ

மோக:—

நீயறிந்திடும் நீதி வெகு
நேர்த்திதான் நேர்த்திதான் நாற்றிலோர் சேதி
காய மானிட ராய் மதி
கழுந் துலக்கையின் கொழுந்தை யொத்தனே
காய மானிட ராய் அடா
கால் நடையதை விட்டு தலை
யால் நடக்கிறாய் கெட்டு சிச்சீ (நீ

பூமி மெச்சிமேண் ணுமலைக்கோர்—என்ற மெட்டு.

கண்ணிகள்.

உருக்:—

பார மார்பில் வந்து வீரமார னம்பு
பாயுதே உடல் காயுதே தலை சாயுதே—நல்விற்
பன்னியே மனதில் உன்னினே னெனைக்கண்
பாரடி மையல் தீரடி

மோக:—

ஈரமேது மின்றி நாரி யாளை நெஞ்சி
லெண்ணியே கேலி பண்ணியே காட்டிற் கண்ணியே—கட்டும்
ஏழை வேடனைப் போல் பாழிலே பிதற்றும்
எத்தனே செல்வாய் பித்தனே

உருக்:—

எத்தனென்று மிகு பித்தனென்று மெனை
ஏசினும் பல பேசினும் வாக் கூசினும்—மன
தெண்ணத்தை முடிவு பண்ணித் தானகலு
வேனடி இன்னு நானடி

மோக:—

சுற்ற முடனேயுன் அத்தையாள் புதல்வி
அல்லடா அதை விள்ளடா எட்டிச் செல்லடா—வேத
சுருதி யாவுமுணர் பிரம தேவன் மகள்
நானடா இணங் கேனடா

(வ-ம்) ஏன்? இவ்வாறு வாது செய்கின்றீர்; நீர் யாரென்றும் தெரிய வில்லை? தன்னந் தனியாக இக்காவனத்தில் வரவேண்டிய காரணம் யாது?

உருக்:— அழகின் ஆலயமாயமைந்த அன்னமே! என்னை சாமானிய மானவனென்று நினைக்காதே! இந்திரன் முதல் யாவரையும் தந்திரத்தாற் ஜெயிக்கும் சுந்தரமுடைய நான் திரிபுவனஞ் சேர்ந் தெதிர்த்தாலும் அபஜெயமடைய மாட்டேன். இளமைப் பருவத்தில் மாரன்; வளமைச் செல்வத்திற் குபேரன்; கல்வியிற் சேடன்; கலவியில் விசேடன்; சந்திரகுலத்திற் பிறந்த உருக்கு மாங்கதன் என்னும் நாமமுடையவன். வேட்டையாடிய களை தெளிவதற்காக இச்சோலை வந்தேன். நீ யாரோ?

மோக:— அரசே! நான் சதுர்முகனுடைய புத்திரியாவேன். என் பெயர் மோகனங்கி. பரந்தாமனுடைய பாதார விந்தத்தைப் பல காலம் பத்தி செய்து, ஏகாதசி விரதத்தை அநுஷ்டித்து வரக் கூடிய புண்ணிய புருஷனைப் பூமானாகக் கொள்ளவேண்டுமென் பதாகவே இவ்விடத்திலிருந்து ஹரிபஜனை செய்துகொண்டிருக் கின்றேன். ஸ்ரீமந் நாராயணனுடைய பாதார விந்தத்தை ஆதார மாகக்கொண்டவர் யாரேனுமுண்டாயின், அன்னவர்க்கே நான் உரியவளாவேன்.

உருக்:—எனது ஆருயிர்த் தோழியே! பழம் நழுவிப் பாலில் விழுந் தாற் போல இருக்கிறது. நீயே பாக்கியவதி; நீ யாரைக்கோரி இங்கு வந்தாயோ அவனே யான். ஏகாதசி விரதத்தை அநுஷ்டிப்பவன் யான் ஒருவனே யாகும்.

மோக:— அரசே! என்னை மன்னிக்கவும்; தங்களை இன்னாரென்று முன்னதாகவே அறிந்திருந்தால் இவ்விதமான வார்த்தைகளுக்கு இடமிருக்காது. ஆனால், யான் கோரிவந்த வரம் ஒன்று; அதைக் கொடுப்பதாயிருந்தால் தங்களுக்கு உடன்படத் தடையேயில்லை.

### விருத்தம்.

வான்மாறி னாலும் வரைமாறி னாலும் மதியிரவி
தான்மாறி னாலுந் தராதலம் மாறினுஞ் சத்தியமாய்
நான்மாறி டேனெந்தன் நாயகி யேயுளம் நாட்டியதைத்
தேன்மாரி போற்கனி வாய்திறந் தோர்மொழி செப்புவையே.

உருக்:— கண்மணி! உனக்கு என்ன வரம் வேண்டுமாயினும் தருவதற்குத் தடையில்லை. கேட்டுக்கொள்.

மோக:— நாதா! சந்தோஷம்; நான் எப்பொழுது கேட்கிறேனோ அப்பொழுதே வரம் தருவதாக உறுதி சொல்லுங்கள்.

கல்யாணம் செய்து வையுமே—என்ற மெட்டு.

இராகம்—பியாகு] [தாளம்—ஆதி.

பல்லவி.

தந்தே னுனக் கோர் வரமே—தையலே யிதோ
சத்தியம் செய்து தருவேன் (த

அனுபல்லவி.

பிந்திமுந்திக் கொடென்று கேட்கினும் பெரிய
பிரமாத மில்லடியென் அன்பினுக் குரிய
சுந்தரி யேகரிய வண்டுறை நறிய
குழலணி யெமதரி திருவடி யறிய (த

(வ-ம்.) கண்மணி! பாற்கடலிற் பள்ளிகொண்ட பரந்தாமன் சாக்ஷியாக நீ எந்தச் சமயத்தில் என்ன வார்த்தைக் கேட்டபோதிலும் தவறாமல் கொடுக்கின்றேன். இது சத்தியம்.

[இருவரும் காந்தர்வ மண முடித்துக்கொண்டு சோலை வளங்களை பார்த்து வருகின்றனர்.

உருக்:— கண்மணி! அடுத்துள்ள வனத்தில் நம்முடைய சேனைசைன்யங்களிருக்கின்றன; அழைத்துக்கொண்டு நகர் செல்வோம். வா!

மோக:— நாதா! அவ்வண்ணமே வருகின்றேன்; வாருங்கள்.

(பொது வ-ம்.) உருக்குமாங்கதன் மோகனாங்கியை தனது ரதத்தின்மே லேற்றி, சேனைசைனியங்கள் புடைசூழ நகருக்கு வருங்கால், இரதத்திற் பூட்டிய குதிரையின் காலில் உடும்பொன்று நசுக்குறக் கண்ட அரசன் திடுக்கிட்டு வருந்துகின்றனன்.

உருக்:— அரிஹரி கேசவா! அச்சுதா! அனந்தசயனா! ஆதிநாராயணா! வைகுந்தா! வாசுதேவா! இவ்வித பாவத்திற் குள்ளாகிவிட்டேனே; என் செய்வேன்?

[நசுக்குண்ட உடும்பானது ஓர் பிராமண உருவெடுத்து அரசனைப் பார்த்துச் சொல்வதாவது:

நொண்டிச் சிந்து.

சந்திர குல திலகா—குடைநிழல்
தங்கியுல காளுமன்னர் சிங்க மனையாய்
சுந்தர மணிமார்பா—என் சரிதம்
சொல்லுகையிற் கேட்ட கருங் கல்லுமுருகும்

முந்திய ஜெனன மதில்—மறையுணர்
முதறிஞர் தன்குலத்து மாதரசி யாய்
வந்து பிறந்து வளரும்—என்னையொரு
மன்மத னிகர்த்தவர்க்கு நன்மணஞ் செய்தார்
அன்னவர் என்னை விடுத்து—பரத்தையர்
அகமதிற் சென்று காம சுகமடைய
கன்னி நான் சின்ன மதியால்—வேசியர்பால்
கைமருந்து வாங்கி வந்து பாகிற்கலந்து
நாதன் றனக்குக் கொடுத்து—அன்னவரை
நாள் தினமுங் கூடிமிக வாழ்ந்து வருநாள்
பேதைநா னிட்ட மருந்தால்—அன்னவர்
பின்புசய ரோகமதாற் றுன்பமடைந்து
விண்ணுலகத் தையடைந்தார்—பாதகி நான்
விதவையா யாரொருவ ருதவியின்றி
உண்ணுதற் கன்னமு மின்றி—அரைதனில்
உடுக்கத் துணியுமின்றி யிடுக்கப்பட்டு
தேகவி யோகமடைந் தேன்—என்னுயிரைச்
சீறி யமன்யாதன சரீரத் தடைத்து
மா கொடு நரகமதில்—தள்ளிமிக
வாட்டிவிட்ட பின்பு இந்தக் காட்டில் வசிக்கும்
உடும்பாய்ப் பிறந்துழன்றேன்—பசியினல்
ஓடிய வுடலுமுற்றும் வாடி மெலிந்தேன்
படும் பாடனைத்தும்பட்டு—இப்பொழுது
பாரரசே நின்னுடைய தேரினிற் கட்டும்
புரவியின் காற்குழம்பால்—நசுக்குண்டு
புண்ணியனே நின் கருணைக் கண்ணெதிர்ப்பட்டு
இரவிபோ லழகுடைய—புருஷராய்
ஈஸ்வர ரடிக்கமல மேகிடப் பெற்றேன். (ச

[அரசே! இதுதான் எனது சரித்திரம்.
இதோ வைகுந்தம் செல்கின்றேன்.

உருக்:— கண்மணி! பார்த்தனையா! பரந்தாமனுடைய மகிமையை என்னவென்று சொல்லுவது? சரி! இனி நமது நாட்டு வளத்தைக் காட்டுகின்றேன் பார்.

மோக:— நாதா! எல்லாம் அவன் செயலே!

புள்ளிக் கலாபமயிற் பாகன்—என்ற மெட்டு.

இராகம்—செஞ்சுருட்டி] [தாளம்—ஆதி

கண்ணிகள்.

மையணியும் செவ்வரிக்கண் மயிலே மதன்
வந்தடி வணங்கிடும் பொற் குயிலே என்றும்
வாசமுறு நல்விதற்ப தேசவழி யின்வளத்தை
மாதே பாரிப் போதே

தண்புனலில் மூழ்கியெழுந் தத்தை மொழித்
தையலவள் செய்ய பொன்மு கத்தைக் கண்டும்
தாமரையென் றுட்கருதி மாமடுவில் நிற்பவனைத்
தானே பார் என் மானே

நேசரொடு போர்முகத்தில் நின்று மடி
நீதியுணர் நல்லவர்போ லின்று விளை
நெற்களொடு தாமரையும் ஒக்க அறுப்புண் பதைப்பார்
நிதியே என்றன் சதியே

பாதிரிமேல் நின்றொருவன் பாவை மிசை
பார்வையைச் செலுத்தி யதன் பூவை விட்டு
பைந்தளிரைக் கொய்து தரும் விந்தையதை தையலேநீ
பாராய் இதோ நோாய்

வாவிகளில் மேவுசின வாளை துள்ளி
வானம் வரை நீள் கமுகின் பாளை களில்
வந்தடிக்க வாய்விரித்துச் சிந்து மது வுண்பதைப் பார்
மந்தி வந்து குந்தி

செங்கமலப் பூவிரண்டைக் காது களில்
சித்தரித்த வைத்த வொரு மாது நல்ல
சீதமுக மூன்றுடைய பேதைதனைப் போன்று வருஞ்
சீரு தனைப் பாரு

உருக்:— கண்மணி! இனி நகர் வளத்தைக் காட்டுகின்றேன் பார்.

### இந்த மங்கை யார்—என்ற மெட்டு.

இராகம்—தேசிகதோடி] [தாளம்—ஆதி

### பல்லவி.

காணடி கண்ணே
கடிநகர்ச்சிங் காரமதைக் (கா

### அனுபல்லவி.

நாணமது பூணுடையாய்
வேணுநிகர்த் தோளுடையாய் (கா

### சரணம்.

அண்டமளாவிய கோட்டைகொத் தளத்தை
அழகிய கோபுர வாசலின் வளத்தை
அன்னமும் பின்னிடும் நன்னடை தன்னினுல்
ஆசை தந்து காசுகொள்ளும் வேசியர்கள் வீதிகளைக் (கா

அன்புடனேம அக்கினி மூட்டி
அவிநகர்ப் பாகந்தனை யமரர்கட் கூட்டி
அந்தியுஞ் சந்தியுஞ் சிந்தை மகிழ்ந்துமே
ஆதிமறை யோதுகின்ற வேதியர்கள் வீதிகளைக் (கா

காளையர் மார்பினிற் கவசத்தை யிறுக்கி
கனத்திரு மீசைகளைச் சினத்துடன் திருக்கி
கையணி மெய்யணி வெய்யல்போல் மின்னிடும்
கத்தி யுத்தங் கற்று வருஞ் சத்திரியர் வீதிகளைக் (கா

வருந்துற வோர்க்கு விருந்திட வேண்டி
வகுத்திடுஞ் சூத்திரர் வாழ்தெருத் தாண்டி
வச்சிரம் பச்சைப ரிட்சையில் மிச்சமாய்
மட்டில்லாச் செல்வம்படைத்த செட்டியர்கள் வீதிகளைக் (கா

போர்புரி பூங்கணை மாரனு வணங்கும்
புருஷர்கள் விளைத்திடுஞ் சரசத்திற் பிணங்கும்
புத்தமு தச்சொல்லார் நித்தம் வெறுத்துயர்
பொற்பணிகள் சோதிதரும் நற்பெரிய வீதிகளைக் (கா

விண்மிசை யுலவுந் தண்மதி மேலே
விளங்கிடுங் களங்கத்தைத் துடைப்பதுபோலே
மெல்லிடை வல்லியர் நல்லிசை பாடிடும்
மேடைமிசை நீள்கொடியின் ஆடைபல ஆடுவதைக் (கா

(பொது வ-ம்.) இவ்வாறு நாட்டு-நகர் வளங்களை மோகனனுங்கிக் காட்டி ஆரவாரத்துடன் தனது சேனைசைனியங்கள் சூழ நகரம் வந்து அரண்மனையின்கண் வீற்றிருக்கின்றனன்.

## [11-வது சீன்.— அரண்மனை—தருமாங்கதன் வருகை.]

*தருமாங்கதன்:*— பிதா! நமஸ்கரிக்கின்றேன்.

*உருக்மாங்கதன்:*— தருமாங்கதா! நீயும், சந்தியாவளி முதலிய உன் தாய்மார்களும், நமது தேசத்தில் எட்டு வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் சர்வ ஜனங்களும் அரிதின விரதமென்னும் ஏகாதசி விரதத்தை அனுஷ்டித்து வருகின்றீர்களா?

*தருமா:*— பிதா! அவ்விதமே அனுஷ்டித்து வருகின்றோம்.

*உருக்:*— பாலகா! ஹரிபூஜார்த்தமாகப் புஷ்பங்க ளெடுக்கின்ற நந்த வனக் கைங்கரியமும், செங்கோல் முறையும் யாதொரு குறை யின்றி நடந்து வருகின்றதா?

*தருமா:*—பிதா! அவ்விதமே நடந்து வருகின்றது. தந்தையே! தாங்கள் வேட்டைக்குச் சென்றிருந்த காலத்தில், அடியேன் திக்கு விஜயம் செய்திருந்தேன். நாகலோகாதிபதிகளைப் புறங் காட்டி யோடும்படி செய்து, அவர்களால் கொடுக்கப்பெற்ற நாகரத்தி னங்களையும், கடலரசாகிய வருணதேவனைச் ஜெயித்து அவனால் தரப்பெற்ற முத்துக்களையும், மற்ற அரசர்கள் கொடுக்கப்பெற்ற திரவியங்களையும் கொண்டுவந்து பாத காணிக்கையாக இதோ வைத்திருக்கிறேன். க்ஷத்திரிய அரசர்களை யுத்தத்தில் வென்று அவர்களது புத்திரிகளையும் கொண்டுவந்திருக்கிறேன். திருவுளம் அறிந்து நடக்கச் சித்தமுடையவனாயிருப்பதால் உத்தரவு அருள வேண்டும் ஐயனே!

*உருக்:*—கண்மணி! மெச்சினேன். யாவையும் நீயே உரிமையாக்கிக் கொள்வாய்.

*தருமா:*— பிதா! அவ்விதமே.

உருக்:— பாலகா! நான் வேட்டைக்குச்சென்ற அடவியில் பிரமதேவன் புத்திரியென்றும், தன் பெயர் மோகனங்கி யென்றும், ஓர் பெண் அவ்விடத்திலிருந்து ஹரிபஜனை செய்துகொண்டிருந்தாள். அன்னவளை அரசர்க்குரிய காந்தர்வ மண முடித்து இங்கு அழைத்து வந்திருக்கிறேன். அன்னவளைத் திருமணஞ் செய்ய இச்சையுள்ளவனாக இருப்பதால், உனதபிப்பிராயத்தை நவில வேண்டும்.

தருமா:— பிதா! அது என்னுடைய அபிப்பிராயத்தால் சொல்லுகிறதற்கு முடியாதவனாயிருக்கிறேன். என் தாய்மார்களுடைய அபிப்பிராயத்தை அறிந்துவந்து சொல்லுகின்றேன்.

[தருமாங்கதன் தாய்மாருடைய அந்தப்புரம் செல்லுதல்.

தருமா:— அம்மணி! என் பிதா வேட்டைக்குச் சென்ற அடவியில் பிரமதேவன் புத்திரியென்றும், தன் பெயர் மோகனங்கி என்றும் ஓர் பெண் அவ்விடத்திலிருந்து அரிபஜனை செய்து கொண்டிருந்தனளாம். அழைத்து வந்திருக்கின்றார். அன்னவளைத் திருமணஞ் செய்துகொள்ள இச்சையுள்ளவரா யிருப்பதால், உங்கள் அபிப்பிராயத்தை அறிய விரும்பி வந்தேன்.

தாய்மார்கள்:— பாலகா! பிரமாவுடைய புத்திரியாயும், அரிபத்தியிற் சிறந்தவளாயும் இருப்பதினால் எங்களுக்கும் சந்தோஷந் தான். அவ்விதமே செய்து கொள்ளட்டும்.

[தருமாங்கதன் தன் பிதாவிடம் வருதல்

தருமா:— பிதா! தங்கள் அபிப்பிராயம்போல் நடத்திக்கொள்ளுங்கள்.

## [தருமாங்கதன் தர்பார்.]

தருமா:— பிரதான்! நமது தேச அதிசயங்களைக்கேட்க அவாவுற்றவனாயிருக்கின்றேன். உமது சித்தம் யாது?

மந்திரி:— பிரபு! அவ்விதமே; சித்தமாயிருக்கிறேன்.

மீனலோசனித் தாயே—என்ற மெட்டு.

கண்ணிகள்.

தேச வாசிகள் யாரும் அதி
சேமமா பதில் கூறும்
நேச மந்திரியே என் வாசத் தந்திரியே (தே

ஆலயந் தோறுங் காலம தாறும்
சாலவும் பூசைகள் தானடக்கின்றதா? (தே

மந்திரி:—அரசே! நமதாளுகைக் குட்பட்ட தேவாலயம், பிரமாலயம், விஷ்ணுவாலயம்-முதலான ஆலயங்களில் ஆறுகால பூஜைகள் தவருமல் நடந்து வருகின்றது.

பூதலஞ் செழிக்கப் புண்ணியர் களிக்க
மாதம் மும்முறையேநல் மழை பொழிகின்றதா? (தே

மந்திரி:— அரசே! 'மாரியல்லது காரியமில்லை' யென்றபடி மாத மும் மாரி பெய்து நீர்வளம் நிலவளம் செழித்தோங்கி யிருக்கின்றது.

செல்வர்கள் சித்தம் கல்வியில் நித்தம்
நல்வினையத்துடன் நடைபெறுகின்றதா? (தே

மந்திரி:— அரசே! நமது தேசங்களிலுள்ள சிறுவர்களனைவர்களும் கல்வியில் நாளுக்குநாள் தேர்ந்து வருகின்றார்கள்.

பெரியவர் மிக்க சிறியவர் தக்க
அரிதின விரதம் அனுஷ்டிக்கின்றாரா? (தே

மந்திரி:— அரசே! நமது ராஜ்ஜியத்தில் எட்டுவயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் சர்வ ஜனங்களும் ஏகாதசி விரதத்தைத் தவருது அனுஷ்டித்து வருகின்றார்கள்.

அந்தணர் நீதி யாய்மறை யோதி
செந்தழல் வேள்விகள் செய்துவாராரா? (தே

மந்திரி:— பிரபு! வேதியர் யாவரும் வேள்விகள் வளர்த்து செவ்வனே வேதமோதி வருகின்றார்கள்.

மன்னவர் நித்தம் வாள்சிலை யுத்தம்
நன்னயமாகவே நடத்தி வாராரா? (தே

மந்திரி:—பிரபு! க்ஷத்திரியர்கள் நித்தமும் யுத்தப் பயிற்சி செய்து வருகின்றார்கள்.

திரைகட லோடித் திரவியந் தேடி
வரிசையாய் வணிகர்கள் வாழ்ந்து வாராரா? (தே

மந்திரி:— அரசே! வைசியர்கள் மிக்க திரவிய சம்பன்னரா யிருந்து வருகின்றார்கள்.

தார்பிடித் துழைத்து தானியம் விளைத்து
பாரில் வேளாளர்கள் பழகி வாராரா? (தே

மந்திரி:— அரசே! 'மேழிச் செல்வம் கோழைபடா' தென்றபடி வேளாளர்கள் பயிர்த் தொழிலை விருத்திசெய்து வருகின்றார்கள்.

தருமாங்:—தேசாதிசயங்களைக் கேட்டு மிகுந்த சந்தோஷமடைந்தேன். முறையாய் அனுஷ்டித்துவரக்கூடிய ஏகாதசிவிரதம் எப்பொழுது வருகிறது? தெளிவாய்ப் பார்த்துச் சொல்லுவீர்.

மந்திரி:—பிரபு! இன்று தசமி; நாளை ஏகாதசி; அப்பால் துவாதசியாயிருக்கின்றது.

தருமா:— ஆஹா! அப்படியானால் வள்ளுவனைக் கொண்டு சீக்கிரம் பறைசாற்றச் செய்வீர்.

மந்திரி:— பிரபு! அவ்விதமே செய்கின்றேன்.
அடா சேவகா! இந்த லிகிதத்தை நமது காணிக்கார வள்ளுவனிடங் கொடுத்து இதன்படி பறைசாற்றச் செய்யவேண்டும்.

சேவகன்:— பிரபு! அவ்விதமே செய்கின்றேன்.

## [12-வது சீன்.— வள்ளுவன்.]

தில்லாலங்கிடி தில்லாலங்கிடி—என்ற மெட்டு.

கண்ணிகள்.

ஊருக்கப்புறங் கூரைக்கட்டுள்ள சேரியில் வசிப்பேன் நான்
ஊன்வடித்திடு மாமிசத்தொடு மீன்களைப் புசிப்பேன்

சுள்ளைக்கடித்துக் கள்ளைக்குடித்துச் சொகுசுட னடிப்பேன் நான்
வெள்ளைத் தனமாய்ப் பள்ளுப்படித்து விரைந்து தப்படிப்பேன்

குண்டுகுளங்களில் தொண்டுதுளைத்திடும் நண்டுகளைப்பிடிப்பேன் என்
பெண்டுகுழந்தைகள் உண்டுமகிழ்ந்திட கொண்டுகொண்டுகொடுப்பேன்

சாமத்திலுஞ்சென் றீமத் துறையிற் சவங்கொளுத் திடுவேன் என்
சேமத்தைக் கடந் தோடித்தடியால் சென்று வெளுத் திடுவேன்

## [வள்ளுவன் சபை வணக்கம்]

தேற்குமுக மாயிருக்கும் தந்தியைப் பாரு—என்ற மெட்டு.

கண்ணிகள்.

கும்பிடுகி றேனடிமை கும்பிடுகிறேன் சபை
கூடியுள்ள ஆண்டைமாரே கும்பிடுகிறேன்

அன்புடைய ஆண்டைமாரே கும்பிடுகிறேன் என்னை
ஆதரிக்கும் ஆண்டைமாரே கும்பிடுகிறேன்

அக்கம்பக்கத் தூக்குத் தூக்க ஓலை கொடுப்பேன் கண்டோர்
அப்பொழுதே கட்டியழ வேலை கொடுப்பேன்

உள்ளமுடை யானெடுத்துச் சோதிடஞ் சொல்வேன் அவர்
உள்ளமுடைந்தா லுடனே மாதிடஞ் சொல்வேன்

மன்னர் பவனிக்கு முன்பு கொம்பு பிடிப்பேன் அவர்
மாண்டுவிட்ட காலுஞ்சுடு கம்பு பிடிப்பேன்

பதுமைச் சித்திரப் புதுமைபோலவே—என்ற மெட்டு.

இராகம்—செஞ்சுருட்டி] [தாளம்—ஏகம்

கண்ணிகள்.

நிகரற் றுள்ள நம் நகர மாந்தர்காள்—நவமணிபல
நிதியிற் றனதன் நிகர் நரேந்திரர்காள் அதி
நேசமிருந்து ராஜன் மேல்விசு
வாசமிருந்து பூசுரர்களே (நி

செக ரக்ஷகனைப் பகர்சத் திரியர்காள்—வைசியர்காள் கிளை
தழுவுஞ் சூத்திர குலநற் பெரியர்காள் குடித்
தனத்தர்காள் பரி சனத்தர்காள் எம
தினத்தர்காள் உல கனைத்தையு மருள் (நி

திசைமுகத்தனை யுந்திபூத்தவன்—அரக்கரை வென்று
தேவர் குடியை அன்று காத்தவன் இளஞ்
செந்திருமகள் தங்கு மார்பனின்வை
குந்தனின் விர தந்தொடங்கிடும் (நி

தசமி யென்றிடும் உசித தினமின்று—நாளை ஏகா
தசிதுவா தசியடுத்த தினத்தன்று வந்து
தமுக்கடித்தே னெச் சரிக்கை யாவரும்
தமுக்கடித்தே னெச் சரிக்கை யாவரும் (நி

திருமால் மருமகனே—என்ற மெட்டு.

கண்ணிகள்.

அடித்தேன் பெரும் பறையே இள
அரசன் சொன்ன முறையே நல்ல
அந்தணர் வீதிநடுச் சந்திதோறும் போய்ப்புகுந்தே (அ

முடித்தாம மன் னவரே முதி
யவரே யினி யவரே நீங்கள்
முந்திவிர தந்தொடங்குஞ் சந்தியின்று வந்ததென்றே (அ

தசமி யின்றிவ் வேளை யேகா
தசியானது நாளை விர
தந்தனைத் தொடங்கு மென்று சிந்தையிற் களிமிகுந்து (அ

வள்ளுவன்:—ஆண்டைமார்களே! இன்று தசமி, நாளை ஏகாதசி; அப்பால் துவாதசியாக விருக்கின்றபடியால், எல்லாரும் முறையாய் அநுஷ்டித்துவரும் ஏகாதசி விரதத்தைத் தொடங்கும்படியாய் நமது இளைய மகாராஜா உத்தரவு செய்திருக்கின்றார். ஆதலால் எல்லோரும் அநுஷ்டித்து வரவேண்டியது.

[13-வது சீன்.— அந்தப்புரம்—சயனக்கிரகம்]

(பொது வ-ம்.) உருக்குமாங்கதன் மோகனுங்கியுடன் சல்லாபமாய் தாம்பூலந் தரித்துக் கொண்டிருக்கும்போது வள்ளுவனின் பறையோலங் கேட்டவுடன் திடுக்கிட்டு தாம்பூலத்தை உமிழ்ந்துவிட்டு வருந்துகிறான்.

உருக்:—அரிஹரி கேசவா! அச்சுதா! அனந்தசயனா! ஆதிநாராயணா! வைகுந்தா! வாசுதேவா! பச்சை மேனியா! பங்கயக் கண்ணா! பவளச் செவ்வாயா!

தோகையரு.

கேசவா வாசு தேவா கிளிமொழி மோகனுங்கி
ஆசையால் மோசம்போனேன் அடியனை யாளுவாயே

தாசர்களே யுமக் காசீர்வாதந் தந்தேன்—என்ற மெட்டு.

பாட்டு.

ஆதரிப்பா யொரு சூதறி யாதவன்
பேதைநா னுந்தனிரு
பாதமதைப் பணிந்தேன்
பிள்ளைநா னென்ன செய்வேன் தேவா (ஆ

தோகையரு.

ஆரணப் பொருளே போற்றி அகிலநா யகனே போற்றி
வாரண மழைத்தபோது வந்துகாத்தவனே போற்றி

பாட்டு.

வந்தருள்வாய் சுவாமி வந்தருள்வாய் என்முன்
மைந்தர் செயும் பிழையைத்
தந்தைபொ றுப்பது தான்
வைய கத்திற் சகசம் சுவாமி (ஆ

ருக்:- செகதீசா! நின்னுடைய திருவிரதத்தை இந்த மோகனாங்கியை மணஞ்செய்த நாள்முதலாய் எச்சரிக்கையோடிருந்து யாதொரு குறைவின்றி நடத்தி வந்தேனே; இன்று தவறிவிட்டேனே; நான் என்ன செய்வேன்? "அவனன்றி அணுவும் அசையா" தென்றபடி இன்று வந்த திருவிரதத்தைப் பங்கமின்றி நடத்துவதற்கு அனுக்கிரகஞ் செய்யவேண்டும்.

மோக:— நாதா! இந்த அம்ச தூளிகா மஞ்சத்தில் என்னோடு சரச சல்லாபம் செய்துகொண்டிருந்த தாங்கள் இடியோசை கேட்ட சர்ப்பம்போல் கலங்கவேண்டிய காரணம் யாது?

வருகிறான் கண்மணி—என்ற மெட்டு.

இராகம்—சாவேரி] [தாளம்—ரூபகம்

பல்லவி.

அடிக்கிறான் கண்மணி

மோக:— நாதா! தங்களை யடிப்பவர் யாரிருக் கின்றார்கள்? சொர்ப்பனமா? வேடிக்கையா? அல்லது பரிகாசஞ் செய்கின்றீர்களா?

உருக்:— பெண்ணே! என்னை அடிப்பவர்கள் இவ்வுலகத்தில் யாரிருக்கின்றார்கள்?

பாட்டு.

வள்ளுவன் பறை யடிக்கிறான் கண்மணி

மோக:— நாதா! வள்ளுவன் பறையடித்தால் நமக்காவதென்ன? வாருங்கள்; பஞ்சணைக்குச் செல்வோம்.

உருக்:— ஐயோ பாவமே!

துடிக்கு நிகரிடையாய்
துணைவாழை போற் றுடையாய்
வடிக்கணைக் கண் ணுடையாய்
மருவுதற்குத் தடையாய் (அ

வீதி வீதிகள் சென்று
மிக்கமுச் சந்தில் நின்று
ஓதுந் தசமி யின்று
ஓங்கு முரச மின்று (அ

சேந்திமா நகரந்தனில் மேவிய—என்ற மெட்டு.

கண்ணிகள்.

மோக:—

நாதனே மன வேதனை யாகநீர்
நாடிய காரியம் யாது அதை
நாயகி யாளிடம் ஒது எந்த
நாளு மிங்கிருந் தோள் மெலிந்திட
நீர் வருந்திட நானறிந் திலேன் (நா

உருக்:—

பேதையே யுந்தன் காதலி னலரி
பாதமதை மறந் தேனே விர
தாதிகளுந் துறந் தேனே என்போல்
பேசுமங்கைய ராசை மிஞ்சியே
பேரழிந்தவ ராருமிங்கில (பே

உருக்:— கண்மணி! ஜீவகோடிகளை ரட்சித்து சகல அண்டங்கள் தோறும் உள்ளும் புறமுமாய் விளங்கா நின்ற சாக்ஷாத் பரம கருணாநிதியாகிய ஸ்ரீமந் நாராயணன் திருவிரதந் தொடங்கும் புண்ய காலமானதால், இன்று ஸ்திரீ கிரீடை செய்பவர்கள் ஊர்ப் பன்றியாய்ப் பிறப்பார்களென்று ருக்வேதங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால், அவ்விரதத்தை அனுஷ்டிக்கும்படி எனக்கு விடைகொடுக்க வேண்டும்.

(பொது வ-ம்.) மோகனாங்கி தனக்குள் நாம் பிரமதேவரிடத்திலிருந்து வந்து நீண்ட நாளாய்விட்டது. விரதபங்கஞ்செய்ய இதுதான் நல்ல சமயம் எனக் கருதியவளாய்;

மோக:— நாதா! என்ன வார்த்தை சொன்னீர்கள். துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்து மிருக வேட்டையாடி மான்மரை முயல் இவைகளைக் கொண்டுவந்து பாகஞ்செய்து புசித்து, யவ்வன ஸ்திரீகளுடன் சரச சல்லாபமாக விருப்பதன்றோ ராஜ தர்மம். அப்படியிருக்க, தாங்கள் பட்டினியிருந்து பாவையர் போகத்தை வெறுக்க விரும்புவது ஞாயமல்லவே! வாருங்கள் சப்ரமஞ்சம் செல்லுவோம்.

உருக்:— அறிவிற் சிறந்த ஆரணங்கே! என்ன சொல்லுகின்றாய்? "எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தாலும் பெண்மதி பின்மதி" யென்றபடி அறியாமற் சொல்லுகின்றாய்.

விருத்தம்.

திருவுறையு மருமனது விரதபங் கஞ்செய்யுந்
தீயவர்கள் புவியின் மீது
செய்யமறை மொழியினைப் பொய்யென வுரைத்தவன்
சிசுவனைக் கொலை செய்தவன்
வருவிருந் தோட்டியே தனிமையா யுண்டவன்
மணமா தகத்திருக்க
மற்றொரு மடந்தையைத் தொட்டுப் புணர்ந்தவன்
மகான்கள்தமை நிந்தித்தவன்
குருவினடி பாவிடக் கூசியே நின்றவன்
கொற்றவனை யுத்தமுனையிற்
குறுகவிட் டோடினவன் செய்நன்றி கொன்றவன்
கோயிலிற் புணர்ச்சி செய்தோன்
அருமையுட னீன்றதாய் தந்தையைத் திட்டினோன்
அறிந்ததை யில்லையென்றோன்
அடைநாகி லுறைவரென அரியபெரி யோர்கள்முன்
அறைந்ததை யுணர்ந்திலாயோ.

உருக்:— கண்மணி! இப்படிப்பட்ட விரதத்தைத் தடுத்தால் மேலே சொல்லியவர்களுக்குக் கிடைத்த கதிதான் உனக்குங்கிடைக்கும்.

மோக:— நாதா! அந்த எமலோகம் முன்னமே பாழடைந்துவிட்ட தென்று கேள்விப்பட்டிருக்கின்றேன். ஒரு வேளை அதற்குப் போக வேண்டிய தேற்பட்ட போதிலும் பாவாயில்லை. இன்று கண்டிப்பாய் என்னுடன் சேரவேண்டும்.

தோட்டிமுக்காமல் நான் போவேனே—என்ற மெட்டு.

இராகம்—மோகனம்] [தாளம்—சாப்பு

கண்ணிகள்.

உருக்:—

நட்டணை செய்யலா காதே அதி
நற்குணமுள எந்தன் மாதே
விட்டுவிடு இதை விட்டுவிடு அரி
விரதந்தனை யிழந்து சுரதந்தனை விரும்பேன் (ந

நல்ல தசமிநா ளின்று இனி
நாளை யேகாதசி யென்று
சொல்லியடிக்கின்றான் வள்ளுவன் வீதியில்
தோகையே நீயென்னைப் போக விடைகொடு (ந

விருத்தம்.

மோக:—

ஆதிநா ளென்னை யுந்தன் ஆசையாம் வலைக்குள்ளாக்கி
கோதில்லா மணமுஞ் செய்தீர் கூடென்றால் கூடா தென்று
நீதிபோ திக்க லானீர் நிலையத்தில் நின்ற தேனை
வீதிவா யிழுத்து விட்டு வேடிக்கை பார்த்தல் நன்றோ.

காரணமாகுந் தெய்வ—என்ற மெட்டு.

கண்ணிகள்.

நாதா வுனதிரண்டு பாதார விந்தமின்றி
ஆதாரம் ஒன்று மில்லையே—அடியாளிடம்
வாதாடல் மிக்க தொல்லையே
நத்தினேன் கனத்தி னிலோர்
முத்தம் வைத் தணைத் தருள்வீர் நாதா
நாடியே முகம் வாடினே னெனைக்
கூடியே விளை யாடி யாதரி நாதா
நடுக்கரும் பொத்த மொழி மநிக் கிசைந் தூற்றமதன்
விடுக்கு மலர்க்கணையால் நடுக்க மெடுக்கு முடல் (நா

## விருத்தம்.

உருக்:—

தினப்படி நினது வாயால் செப்பிய பணிக ளெல்லாம்
மனப்படி நடந்த தல்லால் மாறுபா டுற்ற துண்டோ
அனப்பெடை யணையா தின்று அரிதின விரத மென்றால்
கனப்படுத் துவதை விட்டுக் கதையெல்லாம் வளர்க்க லாமோ.

## பாட்டு.

மாதே யிதனைவிடுத் தேதேனுங் கேட்கிலதற்
கோதேன் பதில் வசனமே—மயிலேயெந்தன்
மீதே கொள்ளேல் விசனமே கரு
வண்டு நிரை விண்டு குழல்
கண்டு மொழி கொண்ட இள மாதே
வம்பு நேர்முலை யம்பு நேர்விழி
கொம்பு நேரிடை செம்பொ னேர்நிற மாதே
வனக்குயி லனப் பெடை நிகர்த்த மடக் கொடியே
மனத்தில் நினைத் ததைக்கேள் அனைத்தும் உனக் களிப்பேன் மா

மோக:—

பொன்னுரு மார்புடைய மன்னவுன் வாழ்க்கை யின்றி
உன்னேன் மனத்தி லொன்றையே—ஆதலால் நீயே
என்னாசை தீர்த்தி டின்றையே என்
புந்தியில் நி னைந்து டல்வ
ருந்தினேன் மனந்திகழும் பொன்
பொங்குதே மயல் மங்குதே வுடல்
எங்கு போகுறீர் இங்கு வாருமென் பொன்
பொருப்பை நிகர்த்திலகு புயத்தி லெனைத் தனது
வருத்த மகற்ற வென வணக்க முனக் களித்தேன் (பொ

உருக்:—

உன்னாசை தீர்ப்பதற்கு இந்நாள் பொருத்த மில்லை
என்னாசைக் கண்மணியே கேள்—திருமடந்தை
கன்னயகர்க் குரிய நாள் இங்

குள்ள நங் கிணற்று நீரை
வெள்ளம் வந் திழுத்தி டாது உன்று
பூகியே வெகு வாகியே திகழ்
தேகியே யினி ஏகு வாயடி உன்று
உனைவிட் டொருத்தி யையென் மனதிற் குறிப்ப தில்லை
உலகத்து மாதருக்கோர் திலகத்தை யொத்த பெண்ணே (உ

விருத்தம்.

மதியில்லா இரவு போலு மகவில்லாச் செல்வம் போலும்
நதியில்லா நகரம் போலும் நறையில்லா மாலை போலும்
பதியில்லா இளம்பெண் போலும் பகவனின் விரதமென்னும்
நிதியில்லா மாந்தர்பெற்ற நீளுடம் பென்றார் மேலோர்.

சஞ்சலமாய் நெஞ்சமிக உடைந்தேனே—என்ற மெட்டு.

இராகம்—செஞ்சுருட்டி] [தாளம்—ஆதி

கண்ணிகள்.

இந்தவிர தந்தனை நான் விடமாட் டேன் எந்தன்
சிந்தையினு முந்தனை நான் தொடமாட்டேன் தெய்வ
இந்திரற் குரிய செல்வம் வந்திடக் கடல்கடைந்த
அந்தநற் றினமுதற் பி றந்தனுட் டிக்கும் (இ

மோக:—

வீரியமா யோதி யென்னை அடுத்தீரே இன்று
ஏறிடவிட் டேணிதன்னை யெடுத்தீரே இந்த
வேதனைப் படுவதற்கோ பாதகப்பெண் ணொருத்தி
காதலித்த வும்முடன் அப்போ துடன் பட்டேன் (வீ

உருக்:—

அந்தநா கந்தனைப்பா ழாக்கு விரதம் மலர்
வந்தபிர மன்தொழிலை நீக்கு விரதம் நல்ல
அற்புதந் தரு விரதம் நற்பதந் தரும் பெரிய
அச்சுதன் திரு விரதம் மெச்சு விரதம் (இ

மோக:—

கண்டுருகும் நாளினினற் கரும்பானேன் பற்றிக்
கொண்டுசுகித் தானபின்பு துரும்பானேன் இந்தக்

காசினியோர் செய்தபிழை ராஜரிடம் போயுரைப்போம்
ராஜர் செய்திடும்பிழையை யாரிடஞ் சொல்வோம் (வீ

(பொது வ-ம்) மோகனாங்கி தனக்குள் இன்னவர் என்னோடு சோமாட்டே னென்று ஒரே பிடிவாதமாய்ப் பேசுகின்றபடியால் எனக்குக் கொடுத்த வரத்தைக் கேட்க இதுதான் நல்ல தருணம்.

விருத்தம்.

மருவல ருடைய செம்பொன் மணிமுடி யிடருந் தாளோய்
இருவருங் கூடுங் காலம் ஈஸ்வரர் சாக்ஷி யாக
ஒருவரங் கேட்டே னனும் உறுதிவாக் களித்தீ ரந்த
திருவரந் தன்னை யிந்தத் தினத்திலே யெனக்கீ வீரே.

(வ-ம்.) சத்துருக்களுடைய பொற்கிரீடத்தை யெத்தும் வீரகண்டா மணி யணிந்த பாதா! நாம் இரண்டுபேரும் சந்திக்குங் காலத்தில் சர்வேஸ்வரன் பேரில் ஆணையிட்டு எனக்கோர் வரந்தந்தீர்கள் அல்லவா? அவ்வரத்தை யான் கேட்குங் காலத்தில் தருவதாய்ச் சொல்லியபடி இன்று தந்தருளவேண்டும்.

விருத்தம்.

நன்மதி கதிரோ னென்றும் நடக்கின்ற திசையை விட்டு
தென்வடல் சென்றிட்டாலுந் திங்களின் குலத்தின் வந்தோன்
சொன்மொழி யிரண்டா மென்று சொற்பனத் திலுமெண் ணாதே
உன்மன திஷ்டம் போல வுதவுவே னுரைசெய் வாயே.

(வ-ம்.) சந்திரசூரியர்கள் திசைமாறி தெற்கு வடக்காய்ச் சென்றபோதிலும் சந்திர வம்சத்திற் பிறந்த இந்த ருக்குமாங்கதனுடைய வார்த்தை இரண்டாகுமென்று நீ கனவிலும் நினைக்காதே; வேறு என்ன வரம் வேண்டுமோ அதைப் பெற்றுக்கொள்; நேரமாகின்றது.

கையில் பண மில்லாமல்—என்ற மெட்டு.

இராகம்—சகானா] [தாளம்—ரூபகம்

கண்ணிகள்.

மோக:—

திருவ ராவது நா மிருவரு மொருவர் போற்
சேர்ந்து சுகிக்கத் தானே—தானே—தானே
பருவ மதன் விடைந்து பாணத்தா லுள்ளுடைந்து
உருவ மிகக் குலைந்து வுருகு மெனக் கிசைந்த (தி

உருக்:—

இந்த வரந்தவிர எந்த வரங்கேட் டாலும்
தந்திடுவேன் எந்தன் கண்மணி—கண்மணி—கண்-
வந்ததெல்லாம் உரைத்தும் சிந்தைதனில் மிகுத்த
வருத்தமுண் டாக்குவது பொருத்த மானதல்ல நீ (இ

மோக:—

திருவாக்கி னுரைத்த ஒருவாக்குக் கிருவாக்குச்
செப்புதல் நீதி யல்லவே—யல்லவே—யல்லவே
குருவாக்குத் தவறாத குணசீலமுள்ளவரே
கொஞ்சி விளையாடிடப் பஞ்சணைக் கேவருவீர் (திரு

உருக்:—

களப மொடுவனத்துத் துளபமணிபுயத்துக்
கண்ணன் விரதநா ளென்றால்—என்றால்—என்றால்
இளமை யுடையமரி குழையறி யாததுபோல்
ஏறுக்கு மாறுசொல்லி தூறத் துணிகின்றனே (இ

## விருத்தம்.

மண்ணினைக்கேள் தந்திடுவேன் நின்னேவற்
பணிவிடைக்காய் மணந்த நூறு
பெண்ணினைக்கேள் தந்திடுவேன் புதல்வனைக்கேள்
தந்திடுவேன் பெரிதா யெண்ணும்
கண்ணினைக்கேள் தந்திடுவேன் உயிரினைக்கேள்
தந்திடுவேன் கபட மாக
உண்ணினைக்குங் காரியத்துக் குன்மனம்போற்
றாவுநா னுடன்பட டேனே.

முங்கி முழுகிற பெண்ணே—என்ற மெட்டு.

இராகம்—தன்யாசி] [தாளம்—ஆதி

## பல்லவி.

சொல்லிய பொருள்களில் மெல்லியே கேட்டிடில்
இல்லையென் னாது தருவேன் (சொ

## அநுபல்லவி.

வல்வின மாகவீண் வழக்குரை யாடினால்
வருத்தஞ் சகிக்கேன் நானே
திருத்தமுள்ள பொன் மானே (சொ

## சரணம்.

அடிக்கடி கண்ணீர் வடிப்பது ருது
அாற்றிடுங் குால்யம புரத்திற்குத் தூது
தொடிக்கரம் நெறிப்பது துன்பத்திற் கேது
துணைவன்சொல் கடப்பது துணைவிக்காகாது (சொ

மோக:—என் ஆருயிர்த் துணைவா! தாங்கள் செய்துகொடுத்த சத்தியத்தைக் காப்பாற்றுமல் ஏகாதசி விரதத்தைமட்டும் அனுஷ்டித்து என்ன பலனடையப் போகின்றீர்கள்? பூர்வத்தில் விஸ்வாமித்திரருக்குச் சொல்லிய வாக்குத் தத்தத்தை நிறைவேற்றும்படியாயல்லவா, அரிச்சந்திரன் தன் நாடு நகரங்களை யெல்லாம் இழந்து, மனைவி மைந்தனை விற்றுத் தானும் ஒரு புலையனுக்கு அடிமைப் பட்டானென்றும், தசரதச் சக்கிரவர்த்தியானவர் கைகேசிக்குக் கொடுத்த வாக்குத் தத்தத்தை நிறைவேற்றுவதற்காக தம்முடைய பிராணனை இழந்தாரென்றும் தாங்கள் கேள்விப்பட்டதில்லையா? உத்தமமாகிய சந்திர வம்சத்திற் பிறந்து அரிபத்தாயிருக்கும் தாங்களே இப்படிச் சத்தியந் தவறுகிறதானல், இனி நான் என்ன செய்வது?

### விருத்தம்.

வேலையமு தனையமன்ன னிருந்துமின்பம்
அனுபவிக்க விதியி லாட்கு
ஓலையொரு கேடோபொன் னுடைமையொரு
கேடோமிக் குயர்பன் னூர்ஸிச்
சேலையொரு கேடோபொற் றிலகமொரு
கேடோநற் செழுரோ சாப்பூ
மாலையொரு கேடோபொன் மஞ்சளொரு
கேடோயவ் வனப்பெண் பேய்க்கே.

### ஐயோ என் ஜானகியை—என்ற மெட்டு.

இராகம்—முகாரி] [தாளம்—ரூபகம்

### கண்ணிகள்.

அறையி லிருந்த பெண்ணாள் அம்பலத் தினில்வந்து
அழும்படி யேவிதித்தாயே தெய்வமே-தெய்வமே-தெய்வமே

உலையில் மெழுகுபோலே உள்ளம் உடைந் துடைந்து
உருகாள் வந்ததையையோ தெய்வமே-தெய்வமே-தெய்வமே

பெண்ணென்று சொன்னவுடன் பேயுமிரங்கு மென்று
பெரியோர்சொல் பொய்யாய்ப் போனதே தெய்வ-தெய்வ-தெய்

தானுய் விரும்பிவந்து தலை சாய்ந்து நின்றதுரை
தள்ளவுங் காலம் வந்ததே தெய்வமே-தெய்வமே-தெய்வமே

கலைபிரிந் திடுமான்போல் தலைவன் றனைப் பிரிந்து
கலங்கிடச் செய்தா யையையோ தெய்வமே-தெய்வமே-தெய்

உருக்:— (தனக்குள்) ஆஹா! தெய்வமே! இவளிடத்தில் அற்ப போகத்தை இச்சித்ததனுலல்லவோ அஷ்டமத்துச் சனியை வட்டிக்கு வாங்கினதுபோ லாயிற்று. இனி என்ன செய்வேன்?

தருமா:—பிதாவானவர் வசிக்கின்ற மாளிகையில் அழுகைக்குரல் கேட்கின்றதே! காரணம் என்னவோ? நம் பிதாவுக்குத்தான் என்ன விபரீதம் ஏற்பட்டதோ? அல்லது வேறு யாருக்குத்தான் என்ன விபத்து ஏற்பட்டதோ? அருகிற் சென்று விசாரிக்கின்றேன்.

இந்த வுடலை நம்பி இருக்கலாமா—என்ற சாயல்.

கண்ணிகள்.

அம்மம்மா வுனக்கிங்கு நேர்ந்ததென்ன உம
தங்கமும் நெஞ்சமுஞ் சோர்ந்த தென்ன

சும்மா யெனதிடஞ் சொல்லுமம்மா நீங்கள்
துக்கப்பட வேண்டாம் நில்லுமம்மா

வெஞ்சின வார்த்தைகள் விள்ளுகிறீர் கரை
மேல்விழு மீனைப்போற் றுள்ளுகிறீர்

கார்குழல் பூவைச் சிதறுகிறீர் மெத்தக்
கதறுகிறீ ருடல் பதருகிறீர் (அ

தருமா:— அம்மா! தங்களுக்கு யாரால் என்ன தீங்கு நேரிட்டது.

மோக:— தருமாங்கதா! எனக்கு யாரும் தீங்கு செய்யவில்லை. உன் தந்தையானவர் என்னை அழைத்துவரும்போது எனக்கு ஓர் வாங் கொடுத்திருந்தார். அவ்வரத்தை யான் கேட்குங் காலத்தில் தருவதாய்ச் சொல்லி யிருந்தபடி இன்று தந்தருளச் சொல்லிக் கேட்டால் தடை செய்கின்றார். சந்திரவம்சத்திற் பிறந்த

அரசர்களில் ஒருவருஞ் சத்தியந் தவறினவரில்லையே. இவர் இப்பொழுது அசத்தியத்துக்குட்பட்டவராகக் காணப்படுவதால், இவரிடத்தில் வாழ்கிறதைப் பார்க்கிலும் மாள்கிறதே நலமென்று நினைக்கின்றேன் பாலகா!

தருமா:— அம்மா! என் பிதாவானவர் சத்தியந் தவறுகின்றவரல்லர்; அது விஷயத்தில் தாங்கள் கவலைப்பட வேண்டாம். இதோ அறிந்து சொல்லுகின்றேன்.

பிதா! தாங்கள் செய்து கொடுத்த சத்தியந் தவறுகிறதாக எனது சிறிய தாய் மோகனுங்கி யம்மை சொல்லுகின்றார்களே.

### கலித்துறை.

நிலைபோய் வனத்திற் பொருள்போய் வஞ்சக நீசனுக்கு
விலைபோ யரிச்சந்திரன் மெய்போன தில்லையிம் மேதினியில்
மலைபோலுங் கீர்த்தி திசைபோய் வழங்கிய மானபரர்
தலைபோயினுங் கீர்த்தி பெறுவார்கள் ரத்ன சபாபதியே.

என்றபடி, பிரம கற்பம் வந்து அடுத்த போதிலும், அஷ்ட லக்ஷ்மிகள் விடுத்தபோதிலும், அயலார் நம்மைக் கெடுத்த போதிலும், ஆவியை ஒருக்கால் விடுத்த போதிலும் சத்திய வசனம் தப்பலாகாது. சத்தியத்திலிருந்து மாறாத புருஷ சிரேஷ்டர்களாகிய நமக்கு இந்த அபவாதம் இப்பொழுது வரக் காரணமென்ன?

உருக்:— எனதருந்தவச் செல்வா! முன்னம் அவளுக்கோர் வரங் கொடுத்திருந்தேன். அவ்வரத்திற்காக மஹா விரததினமாகிய இன்று தன்னோடு கலந்து இஷ்டபோகங்களை அனுபவிக்கும்படி என்னைத் தொந்தரவு செய்கின்றாள். இதைத்தவிர வேறு எதைக் கேட்ட போதிலும் தருகிறேனென்று பல இனிய வசனங்களால் கேட்டுக்கொண்ட போதிலும் கேட்கமாட்டே னென்று ஒரே பிடிவாதமாகப் பேசுகின்றாள். என்ன செய்வது?

தருமா:— ஆகா! நம் பிதாவானவர் அனுஷ்டித்துவரும் விரதத்திற்குப் பங்கம் வாராமலும் சத்தியத்தையும் காப்பாற்ற வேண்டுமே! இது எப்படி முடியப்போகிறதோ தெரியவில்லை. இதோ என் தாய்மார்களிடத்திற் சொல்லி வேண்டிய ஏற்பாடு செய்யப்போகின்றேன்.

(பொது வ—ம்) தருமாங்கதன் தன் தாய்மார்களிடம் போய்ச் சொன்னமாத்திரத்தில் பட்டமகிஷியாகிய சந்தியாவளி வருகின்றாள்.

சந்தியாவளி:—

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே—என்ற சாயல்.

மாநிலத்தை யோரடிக்கு ளாகவைத்த மாயனே
வாசமொய்த்த பூவிருக்கு மாமகட்கு நேயனே
தேனொழுக்கு மாமலர்த் துழாய் முடித்த மார்பனே
தீரமிக்க காரரக்கர் வேரறுத்த தீரனே
மீனிகர்த்த பாவைபெற்ற கோவிலர்க்கு நேரிலே
மேலினித்த பாலும் வெட்க வேயிசைத்த வாயனே
நானினைத்த காரியத்தை நீமுடிக்க வேண்டுமே
நான்மறைக்குளே யிருக்கும் ராமகிருஷ்ண சுவாமியே

(வ-ம்.) பிராணபூபதி! தாங்கள் சகலசாஸ்திர நிபுணராயிருந்தும் ஆலோசிக்காமல் அற்ப காரியத்தில் தலையிட்டுவிட்டீர்கள். 'காதலி, காதலன் கருத்துக்கிசைந்து நடப்பது கற்புடைமை' யென்பதற்கிணங்க தாங்கள் கருதிய கன்னியைக் கல்யாணஞ் செய்துகொள்ளச் சம்மதித்தோம். அதனாலல்லவா, இப்படிப்பட்ட பரம சங்கடம் வந்து நேரிட்டது இதவும் சர்வேஸ்வரனுடைய சோதனையேயல்லது வேறல்ல.

உருக்:—

பாலகனே லோகிதனே—என்ற மெட்டு.

கண்ணிகள்.

பாலினுக்கு மேலினிக்கும் பாட்டிசைக்கும் வாயுடையாள்
வேலினுக்கு மேனுழக்க வேம்பின்ரசம் போல் கசக்க
விள்ளுகின்றதால் உள்ளமுடைந்தேன் புள்ளிமயி லேயவட்குப்
புத்திமதி சொல்லி டுவாய்

சந்தி:—

பொற்பதுமை போன்றஇளம் பூங்கொடியே மாங்குயிலே
கற்பெனப் படுதல்மன்னன் சொற்படி நடப்ப தன்றோ
காதலர் சொல்லிற் பாதக மில்லை சாதகமாய்ப் பேசுகிறாய்
தங்கையே இணங்கி டம்மா

(வ-ம்.) தங்காய்! நாம் பூர்வீகத்திற் செய்த புண்ணியத்தினால் இப்-பூமானைத் திருமணம் புரியலானோம். மகாராஜாவானவர் உன்னை மணம்புரிந்த பின்பு எங்களெல்லாரையும் தள்ளிவிட்டு உன்னிடத்திலேயே மிக்க இஷ்டம் வைத்து உன்சொல்படி நடந்து வரு-வதை நாங்கள் கண்டு கொஞ்சமும் வருத்தமின்றி நீங்களிருவரும் ஒருமித்து வாழ்வதே எங்கள் வாழ்க்கை யென்பதாய்

எண்ணி இருந்தோமே! இது யார் செய்த வஞ்சனேயோ! நீ சஞ்சல மடைந்து தரையிற் புரளுவது தயாநிதிக்கும் தகுமோ! உன் மனதிலிருக்கும் வியாகுலத்தை வெளிவிடம்மா; எழுந்திரு.

மோக:—

என்னிடத்தில் மையல் கொண்டு இச்சைசொல்லிச் சேர்ந்தமன்னர்
தன்னிடத்தில் மையல்கொண்டால் சாதுரியம் பேசுகிருர்
சங்கதியெல்லாம் இங்கவர் சொல்வார் தங்கையிவள் சொல்லிலென்னும்
தாய்க் கொழித்த சூது முண்டோ.

(வ-ம்) அக்காள்! நமது பிராணநாதர் ஆதியில் எனக்கொரு வரங் கொடுத்திருந்தார். அதைத் தந்தருளச் சொல்லிக் கேட்டால் தடை செய்கின்ருர். இப்படிப்பட்டவரிடத்தில் இருப்பதைப் பார்க்கிலும் இறப்பது நலமென்றே நினைக்கின்றேன்.

சந்தி:— நாதா! தாங்கள் செய்து கொடுத்த சத்தியம் தவறினதாய் எனது தங்கை சொல்லுகின்ருளே; காரணம் யாது?

உருக்:—

தையலுக்கோர் வாக்குறுதி தந்ததுண் டதனை யின்று
மையலுக்கி டாகு மென்று வம்புமிகப் பேசுகிருள்
வஞ்சகம் நிறை நெஞ்சுடையவள் சஞ்சலப் படுத்துகிருள்
அஞ்சுகமே என்ன செய்வேன்

(வ-ம்.) பிராண சகி! முன்னம் அவளுக்கோர் வரங் கொடுத்திருந்தேன். அவ்வரத்திற்காக மஹா விரத தினமாகிய இன்று தன்னேடு கலந்து இஷ்டபோகங்களை அனுபவிக்கும்படி என்னைத் தொந்தரவு செய்கின்ருள். இதைத் தவிர வேறு எதைக் கேட்ட போதிலும் தருகிறேனென்று பல இனிய வசனங்களால் கேட்டுக்கொண்ட போதிலும் கேட்கமாட்டேனென்று ஒரேபிடிவாதமாகப் பேசுகின்ருள். என்ன செய்வேன்.

சந்தி:—

எண்ணியபடி முடிக்க எற்றதினம் வேறில்லையோ
புண்ணிய தினத்திலிந்தப் புன்ருெழில் புரிவார்களோ
புத்தியென்றறி வுத்தம நெறி அத்தனையுங் கற்றவள்நீ
அவசரப் படுதல் நன்ருே

(வ-ம்.) தங்காய்! இளமையில் தாய் தந்தையர்க்குள்ளும், யவ்வனத்தில் கணவரிடத்தும், முதுமையில் புத்திரரிடத்தும் பொருந்தி

வாழ்வதன்றோ மாதர் கடமை. தன் மணவாளன் குரூபியாய் அழகும் சம்பத்தும் நற்குணங்களும் இல்லாமல் தரித்திரனு யிருந்தபோதிலும் 'கல்லென்றாலுங் கணவன் புல்லென்றாலும் புருஷன்' என்றபடி அவனைத் தெய்வமாகப்பாவித்து நடப்பதன்றோ உத்தம ஸ்திரீகளினுடைய லக்ஷணம். புருஷனுடைய கருத்துக்கு மாறுபடுவாளாகில் அவள் மெய்த் தவத்தையும் செல்வத்தையும் ஆயுள் முதலியவற்றையும் அழித்து, மீளா நரகத்துக்கு ஆளாகி விடுவாளென்று ருக்வேதங்களில் சொல்லி யிருக்கிறது. அப்படியிருக்க கணவன் வார்த்தையைக் கடப்பது கற்பாசிகளுக்கு அழகல்ல அம்மா!

மோ:– (தனக்குள்) அக்காள் சொல்லிவந்ததனைத்தும் உண்மையே! ஆனால் அவள் சொல்லியபடி நடந்தால் பிரமதேவனுடைய கட்டளைக்கு விரோதமாகுமே. அரசரும் விரதத்தை மறுப்பதாகக் காணப்படவில்லை. தேவிமார்களும் புத்திரனும் இவரைப்போலவே உறுதியாகவே யிருக்கின்றனர். இனி சும்மாயிருக்க லாகாது. தர்மாங்கதன் தலையை வெட்டித் தரச்சொல்லி பெற்றுக்கொண்டு தந்தையிடஞ்செல்லுவோம். அக்கா!

வேகிறதோர் வீட்டினுக்கும் வெட்டிடுங் கிணற்றினுக்கும்
தோகையே நீதூரமென்று சொல்லுவதைக் கேட்டிலையோ
துட்டமதவேள் விட்ட கணையால் தட்டழியும் வேளையிலே
அட்டி சொல்ல ஞாயமில்லை

(வ–ம்) அக்காள்! நீ சொல்லியவைகளெல்லாம் உண்மைதான். எனக்குக் கொடுத்திருந்த வரத்தை யின்று கேட்டேனேயல்லாமல், அவர் மனம் நோகும்படி யாதொன்றும் பேசவுமில்லை; ஏசவுமில்லை. அப்படி அரிதின விரதத்தை உண்மையாகவே அனுஷ்டிப்பவரா யிருந்தாலும் நன்மைதான். அவர் என்னோடு கலவாமற் போனாலும் போகட்டும். புதல்வனைக்கேள் தந்திடுவேன் என்றுசொல்லியபடி, தர்மாங்கதன் சிரசை வெட்டிக்கொடுப்பாரா? இதை யறிந்து சொல்லுங்கள். இதுவும் இல்லையென்று போய்விடக்கூடாது.

[சந்தியாவளி திடுக்கிட்டு வருந்துகிறாள்.

சந்தி:— இனி நமது புத்திரன் நாசத்தைக் குறித்துக் கொஞ்சமும் வருத்தப் படக் கூடாது. நமது கணவர் ஏகாதசி விரத பங்கஞ் செய்யாதவ ரென்னும் புகழ் என்றுமிருந்தால் அதுவே போதும். இதோ தர்மாங்கதனை யழைத்து வருகின்றேன்.

[தருமாங்கதனை அழைத்து வருகிறாள்.

சந்தியா:— பிராணபூபதி! தாங்கள் செய்துகொடுத்த சத்தியத்திற்காக தர்மாங்கதனுடைய தலையை வெட்டித் தரச்சொல்லிக் கேட்கின்றாள். அவள் கேட்டபடி வெட்டிக் கொடுத்து விரதத்தைப் பூர்த்தி செய்யுங்கள்.

ஐயோ என் ஜானகியை—என்ற மெட்டு.

இராகம்—முகாரி] [தாளம்—ஆதி.

கண்ணிகள்.

இப்படி யாருமென்று சொற்பனந் தன்னிலும் நான்
எண்ணவு மில்லை ஐயையோ—தெய்வமே—தெய்வமே—தெய்வ

பாலனைக் கொல்வதற்கோர் காலனை வளர்த்தாற் போல்
பாவியை மணஞ் செய்தேனே—தெய்வமே—தெய்வமே—தெ·

வேலிக்கு வைத்த முள்ளு காலுக்குத் தைத்தது போல்
வேதனை செய்ய வந்தாளே—தெய்வமே—தெய்வமே—தெய்வ

பிள்ளை யாரென்று நம்பச் சள்ளைக் குரங்காய் வந்து
பெருமை குலைக்குதென் செய்வேன் தெய்வமே—தெய்வ—தெ

உருக்:— ஆஹா! தெய்வமே! இப்படியும் எனது தலையில் மின்னாமல் இடிவந்து விழலாமா! நான் நெடுநாளாய்த் தவம்புரிந்து, என் கையால் கொலை செய்வதற்காகவா பிள்ளையைப் பெற்றேன்? மாதா பிதாக்கள் செய்தது மக்களுக்கென்றும், நான் செய்த தீவினையே புத்திரனுக்கு வந்து நேரிட்டதென்று என்னை வெறுத்துக் கொள்ளலாமென்ற போதிலும், என் புத்தியறிந்து இப்பிறப்பில் யாதொரு தீங்குஞ் செய்த தில்லையே! இப்பிறப்பில் இல்லாவிடில் முற்பிறப்பில்:

அன்னமிட்டார் வீட்டில் கன்னமிட் டேனோ!
அன்புடையவர்களுக்குத் துன்பஞ்செய் தேனோ!
ஆலயக் கதவை அடைத்து வைத் தேனோ!
ஆசையைக் காட்டி மோசஞ் செய் தேனோ!
இரப் போர்க்குப் பிச்சை இல்லை யென்றேனோ!
உயிர்க்கொலை செய்பவருக் குளவு சொன்னேனோ!
ஊன் சுவையுண்டு உடல் வளர்த்தேனோ!
ஏழைகள் வயிறை எரியச் செய்தேனோ!
கலந்த சிநேகிதனைக் கலகஞ் செய்தேனோ!

கலங்கி ஒழிந்தவரைக் காட்டிக் கொடுத்தேனோ!
கல்லும் நெல்லுங் கலந்து விற்றேனோ!
கன்றுக்குப் பால்விடாது கரந்து வுண்டேனோ!
களவு செய்பவருக் குளவு சொன்னேனோ!
கோளைச் சொல்லிக் குடும்பங் குலைத்தேனோ!
குடிக்கு நீருள்ள குளந் தூர்த்தேனோ!
குடிவரி யுயர்த்திக் கொள்ளைகொண்டேனோ!
குருவின் காணிக்கை கொடுக்க மறந்தேனோ!
குருவை வணங்கக் கூசிநின்றேனோ!
சிவனடியாரைச் சீறிவைதேனோ!
தருமம் பாராது தண்டஞ் செய்தேனோ!
தவஞ் செய்வோர்க்குத் தாழ்வு சொன்னேனோ!
தந்தைதாய் மொழியைத் தள்ளிநடந்தேனோ!
தானங் கொடுப்பவரைத் தடுத்துநின்றேனோ!
தெய்வ மிகழ்ந்து செருக் கடைந்தேனோ!
நட்டாற்றில் கையை நழுவவிட்டேனோ!
நல்லோர் மனதை நடுங்கச் செய்தேனோ!
பசித்தோர் முகத்தைப் பாரா திருந்தேனோ!
பகைகொண் டயலார் பயிரை யழித்தேனோ!
பட்சியைக் கூட்டில் பதைக்க அடைத்தேனோ!
பெரியோர் பாட்டில் பிழை சொன்னேனோ!
பொது மண்டபத்தைப் போயிடித் தேனோ!
பொருளையிச்சித்துப் பொய்யைச் சொன்னேனோ!
வரவு போக்குள்ள வழியை அடைத்தேனோ!
வலியவழக்கிட்டு மானங் கெடுத்தேனோ!
வெயிலுக் கொதுங்கும் விருக்ஷ மழித்தேனோ!
மின்னுரைக் கண்டு விலகா திருந்தேனோ!
மன்றிலிருந்து வழக்கோரஞ் சொன்னேனோ!
இன்னும் என்னென்ன பாவங்கள் செய்தேனோ!
அறிகிலேன்; ஐயோ! தெய்வமே!
எனது காத்திலிருக்கின்ற செங்கோலைக் கொடுங்கோலென்றேனோ!
கூற்றுவன் கோலென்றேனோ!
அளவு கோலென்றேனோ!
அஞ்சனக் கோலென்றேனோ!
அடி கோலென்றேனோ!
பிடி கோலென்றேனோ!
வைக்கோ லென்றேனோ!
கத்தரிக் கோலென்றேனோ!

இன்று வாளால் வெட்டுண்டு இறந்துபோகும் மைந்தனுடைய சரீரத்தைக் காஷ்டத்திலிட்டுச் சுடுகோலென்பேனோ? இன்னும் என்ன கோலென்றுதான் சொல்லுவேன்? ஐயோ! இவன் என் கையால் வெட்டுண்டு இறந்த துக்கம் இன்றோடு போய் விட்டாலும், இவன் மணஞ்செய்த மடமாதர்கள் கைமையாயிருக்கும் துக்கம் எக்காலத்தும் நீங்காதே!

மற்றுப் பற்றெனக் கின்றினேன் றிரு—என்ற மெட்டு.

இராகம்—தோடி.] [தாளம்—ரூபகம்.

**கண்ணிகள்.**

மாதவா வுயர் யாதவகுல வாமனே பரந் தாமனே
சீதரா வந்து சேர்ந்தவர்க்கென்ன செய்குவேன் எவ்வா றுய்குவேன்

பாரையோரடி யாயளந்த பொற் பாதனே திரு நாதனே
யாரைநோகுவே னின்னையன்றியென் னஞ்சலையொழித் தாளுவாய்

இன்று பாலனைக் கொன்றுமாதுகை யீந்துபாவத்தை யேற்பனோ
நன்றென் றேயதைச் செய்துவந்ததோர் விரதத்தை மறப்பேனோ

சந்தியாவளி:—

சந்தனந் திமிர்ந்தணிந்து குங்குமம் – என்ற மெட்டு.

இராகம்—சாவேரி.] [தாளம்—ஏகம்.

நாதனே யுனது மனம் வேதனை யடைந்துபிடி
சாதனை புரிவதுநல் நீத மல்லவே
பூதலமளந்த விரி பாதகம லந்திகழும்
சீதரன் விளைக்க வந்த சோதனை யன்றோ

பண்டுதிருச் சங்குமைந்தன் கொண்டவிர தம்முடிக்க
பெண்டை வெட்ட நின்றகதை கண்ட தில்லையோ
எண்டிசை யிருந்துதிறை கொண்டுவந் தரசர் முற்றும்
தெண்டனிட் டடிபரவும் மண்டலாதிபா.

(வ-ம்.) நாதா! பூர்வீகத்தில் சிபிச் சக்கிரவர்த்தியானவர் ஒரு புறவுக்காக தன் சரீரத்தைத் தத்தஞ்செய்தா ரென்றும், ததீசுமகாமுனிவர் தேவர்கள் உய்யும்பொருட்டு தன் முதுகந்தண்டெலும்பைக் கொடுத்தாரென்றும், அரிச்சந்திரன் புலையனுக் கடிமைப்பட்டா ரென்றும், தசரதர் உயிர் துறந்தாரென்றும் கூறப்பட்டிருக்கும் சரித்திரங்களைத் தாங்கள் நன்கறிவீர்கள். சத்தியந் தவறாமல்

மோகனுங்கிக்குத் தந்த வாத்தைக் கொடுத்து விரதத்தைப் பூர்த்தி செய்யுங்கள். ஆலோசிக்க வேண்டாம்.

உருக்:— விருத்தம்

நண்ணிய நோன்பைக் காக்க நாடுவோ மென்னில் நல்ல
புண்ணிய வுருக்கொண்டன்ன புத்திரன் தலைபோம்போமென்
றெண்ணியே விடுவோ மாகி லியற்றிய தனைத்தும் போம்நாம்
பண்ணிய கரும நன்று பதுமமா மலர்ச்செந் தேனே.

தண்ணீர் கொண்டுவாவென தைரியம் சொல்லிச்சென்ற-என்ற மெட்டு

இராகம்—நாதநாமக்கிரி] [தாளம்—ஆதி

கண்ணிகள்.

என்னென்ன பழிசெய் தோமோ
இன்னும் என்ன கெதி யாமோ
எய்தியது இப்பிறப்பில்
மொய்குழலே முற்பிறப்பில் (எ

பக்ஷி பறவையைக் கூட்டில்
பதைக்க அடைத் தோமோ வீட்டில்
பந்தியில் ஓரஞ்செய் தோமோ
நொந்தவர் தமைவை தோமோ (எ

கற்றவரைத் திட்டி னோமோ
பெற்றவர் சொல் தட்டி னோமோ
கல்லுநெல்லுமாக ஒன்றாய்க்
கலந்துவிற்றேனோமோ நன்றாய் (எ

கன்றினுக்குப் பால் விடாது
கறந்துண்டோமோ கொடாது
கர்மிகளைப் புகழ்ந்தோமோ
தர்மிகளை யிகழ்ந்தோமோ (எ

கோவில்களை அடைத் தோமோ
வாவிகளை உடைத் தோமோ
கூட்டுறவைப் பிரித்தோமோ
நாட்டில்யாரைச் சிரித்தோமோ (எ

வேலை மலிவாய் விடுத்துக்
கூலிகுறை வாய்க் கொடுத்து
மிக்க பணந் தேடினோமோ
துர்க்குணரைக் கூடினோமோ (எ

குருமொழிதனைக் கடந்து
மறுமொழி சொல்லத் துடர்ந்து
குடி வரிகள் கூட்டினேனோ
அடிமைகளை வாட்டினேனோ (ஏ

உருக்:-

மலடி வயிற்று மகன் போலே---என்ற மெட்டு.

கலைபல கற்றபெ ரும்பா வாணர்கள்
சபைமிக மெச்சும லங்கா ராவுயர்
கதிரொளி வச்சிர வடம்பூ ணூர்திறள் மணிமார்பா

கரிபரி மிக்க ரதங்கா லாளோடு
கடுகி யெதிர்த்த தடந்தோள் வீரர்கள்
ககனம துற்றிட நின்றே போர்புரி திறலோனே

நிலமக ளுக்கிரு கண்போல் வாய்மதி
குலமக னுக்குமு கம்போல் வாய்புவி
நிருபர்க ளுக்கொரு சிங்கேறே சுடர் வடிவேலா

நெடிய பகைக்கு யமன்போல் வாய்வளர்
நிதியம திற்றன தன்போல் வாய்குடை
நிழலுள வர்க்கனை தன்போல் வாயடா மகனேயுன்

தலைதனை வெட்டியி முந்தாயா மிவள்
காமதி விட்டிட வென்றே பாழ்விதி
தலையி லெனக்கு வரைந்தா னேபழ வினைதானோ

தரைமிசை மிக்க உயர்ந்தோரா கூறிய
நெறியது தப்பி நடந்தே னேவொரு
சமைய மதிற் பொய் மொழிந்தேனோ பிறர் மனையார்கள்

நலனை மனத்தில் நயந்தே னேபல
புறசம யத்தை யிகழ்ந்தே னேசமர்
நடுவினில் விட்டயல் நின்றே னேவரு துணைவோரை

நமது காத்துள செங்கோ லானது
குருடர் காத்தி னெடுங்கோ லோவது
நமபடர் தொட்ட கொடுங்கோ லோவெது மறியேனே

(வ-ம்.) சந்திர வமிசத் திலகமே! என்னுயிரே! என்னப்பனே! தருமாங்கதா! இவ்வுலகத்தில் புத்திரர் வேண்டுமென்று எத்தனையோ கோடி பேர்கள் அருந்தவஞ் செய்கின்றார்கள். அப்படிச் சிரமப்படாமல் நீ ஸ்ரீமந் நாராயணனது கிருபாகடாட்சத்தினால் எனக்குப் புத்திர ரத்தினமாக ஜெனித்தாய்; உன் தாய்மார்களிடத்தில் நடந்துகொள்கிற விஷயத்தைப் பார்க்கிலும் பதின்மடங்காய் இந்தப் பாதகியாகிய மோகனாங்கியிடத்தில் பக்தி சிரத்தையோடு நடந்துகொள்கிற உன் விஷயத்தில் தானா இந்தத் துன்மார்க்க நினைவு கொண்டாள்? ஐயோ! வரங்கொடுத்த என்னுடைய தலையையாவது கேட்கக் கூடாதா? என் சந்ததி தழைக்கவந்த தருமாங்கதன் சிரசைக்கேட்க எவ்வாறு மனந் துணிந்தாள்?

தருமா:—

வருவாய் சண்முகனே—என்ற மெட்டு.

பல்லவி.

விதி நம்மை விடுமோ வேதன் விதித்த தலை (வி

அனுபல்லவி.

மதியோ வுடல் குறைந்தால் வனசனோர் தலைகுறைந்தால்
அதிரூப இந்திரனு மங்கமெலாங் கண்ணானால் (வி

கதிரவன் மதலையோர் காலது முடமாகினால்
நிதியினுயர் குபேரன் நீண்டகண் ணொன்றிழந்தால் (வி

காலித் திரளினிலோர் கன்றைவிடுத்த போதிலும்
பாலித்து ஈன்றிடுந்தாய்ப் பசுவைத் தொடர்ந்துவரும் (வி

(வ-ம்.) பிதா! இத்தியாதி தேவர்களுக் கெல்லாம் இப்படிப்பட்ட துன்பத்தைக் கொடுத்தவிதி நம்மை விட்டுவிடுமா? "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினுந் தான்முந் துறும்" என்றபடி விதியின் பயனே பயன். அன்றெழுதினவன் அழித்தெழுதப் போவதில்லை. (இன்னும்)

பாண்டிய னீன்ற மீனாக்ஷி உன் பாதம்—என்ற மெட்டு.

கண்ணிகள்.

இந்த நம் சொந்தநற் றிரேகம் மண்மீதில்
இருத்தல் சந் தேகம்
வந்திடும் கண்டம நேகம் எந்நாளும்
மாழ்த லுத் யோகம் (இ

தோகையரு.

நாய்கள்நம தென்றிடும் பேய்கள்நம தென்றிடும்
நரிகழுகு நமதென் றிடும்
தீயும்நம தென்றிடும் நோயுநம தென்றிடும்
திண்ணியமண் ணமதென்றிடும்

பாட்டு.

செத்திடிற் காற்சண நேரம் அதற்குள்
சேர்ப்பார்கள் தூரம்
வைத்தவர்க் கென்ன தான் சாரம் புவியாம்
மங்கைக்கே பாரம் (இ

தோகையரு.

வீட்டில் விழுமோ நடுகல் ரோட்டில் விழுமோமலை
மேட்டில்விழு மோமிருகம் வாழ்
காட்டில்விழு மோபெருகும் ஆற்றில்விழு மோநெடிய
கடலில்விழு மோவறியேன்

பாட்டு.

காற்றடைத்திட்ட தோற் சட்டை பெண்ணுர்கள்
கசக்குங்கைக் குட்டை
கூற்றுவன் வெட்டிடுங் கட்டை சின்னுளில்
கூனலாங் குட்டை (இ

(வ-ம்.) பிதா! அனித்தியமாகிய தேசபந்த அபிமானத்தால் தாங்கள் என்னைக் குறித்துப் பரிதாபப்படுவது ஞாயமல்ல, என் சிறிய தாயாகிய மோகனுங்கியம்மை கேட்டபடி, என்சிரசை வெட்டிக் கொடுப்பீர்க ளானுல், விரதபங்கம் நேரிடாது; இன்று இறக்கும் என் சீவனும் வைகுந்தத்தை யடையும்; தங்களுக்கும் சந்தியா வளி முதலிய என் தாய்மார்களுக்கும் காலமுடிவில் அந்த நித்திய லோகம் கிடைக்காமற் போகாது. மேலும் சத்திய வாக்கிய னென்னும் பெயர் தங்களுக்கும், பதிவிரதை யென்னும் பெயர் என் தாய்க்கும், சற்புத்திரனென்னும் பெயர் எனக்கும் இவ்வுலகத்தில் நெடுநாளாய் நிலைநிற்குமல்லவா? பிதா! காலதாமதஞ் செய்யாமல் என் சிரசை வெட்டிக் கொடுத்து விரதத்தைப் பூர்த்தி செய்யுங்கள்.

உருக்:— விருத்தம்.

காதல்தரு மாதரொரு நாறிருந் தும்மெனது
கற்பிழந் ததற் கழுவனே
கன்மனக் கைகேசி நிகர்மோக ஞங்கியைக்
கைப்பிடித் ததற் கழுவனே
மாதாசி கேட்டபடி யாலோசி யாமலோர்
வரந்தந் ததற் கழுவனே
வந்ததிரு விரதமனை நந்தாமற் காத்திட
வழிதே டுதற் கழுவனே
சீதான் திருவருளி னுற்பெற்ற குமரனைச்
செல்வனென் றெண்ணி டாமல்
சீதேவி வடிவனைய மூதேவி வெட்டென்று
செப்புவதை நினைந் தழுவனே
ஆதரவு சொல்லியென் காதலன் தலைகுனிந்
தடிவணங் குதற் கழுவனே
ஐயனே திகிரிதிகழ் கையனே யெனையாளும்
அச்சுதா பச்சை மாலே.

ஏழுபிள்ளைக் காரியடி அண்ணியரே—என்ற மெட்டு.

இராகம்—முகாரி] [தாளம்—ஆதி

கண்ணிகள்.

மெய்த் தவத்தி னுலுதித்த கண்மணியே உனை
வெட்ட மனங் கூடுமோடா தண்மணியே
உத்தமகு ணமுடைய புத்திரனே தரை
யுள்ள மன்னர் யாவருக்கு மித்திரனே
புங்கவர்கள் போற்றுமதி தன்குலத்தில் ஒரு
புல்லுருவி யாய் முளைத்தே னின்னிலத்தில்
அன்றலர்ந்த கஞ்சம் நிகர் உன்முகத்தை இனி
என்று கண்டு நானடைவே னற்சுகத்தை

விருத்தம்.

மன்மதன் கண்டு நாணும் வடிவழ குடைய பாலா
துன்மதி யால்நான் வெட்டைத் தோகைக்குன் சிரசை யின்று
உன்மனம் போலே வெட்டி யுதவுவே ஞகிலென் போற்
கன்மன முடைய பாவி காசினி தனில்வே றுண்டோ.

(வ-ம்.) கண்மணி! இதோ வெட்டுகின்றேன்; நீ உன்னை வைகுந்தத்திற் சேர்த்துக்கொள்ளும்படி ஸ்ரீமந் நாராயணனைப் பிரார்த்தித்துக்கொள்.

தருமா:— **விருத்தம்.**

வேதநூற் பிராய நூறு மனிதர்தாம் புகுவ ரேனும்
பாதியு முறங்கப் போகும் நின்றதிற் பதினை யாண்டு
பேதைபா லகன தாகும் பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலாற் பிறவி வேண்டேன் அரங்கமா நகருளானே.

மோக:— **விருத்தம்.**

புத்திரர் நிமித்த மிந்தப் பூமியி லுள்ளோர் சோலில்
சத்தியம் வாவி கல்விச் சாலைக ளியற்று கின்றார்
குத்திரங் கொலைகள் செய்யுங் கொடியனுங் கொடியோ னென்கச்
சித்திரச் சிலைக்கை வேந்தே செல்வனை வதைக்க லாமோ.

(வ-ம்.) அரசே! என்ன காரியஞ்செய்யத் துணிந்தீர்கள்? தங்களுக்கும் சந்தியாவளி முதலிய தேவிமார்களுக்கும் எனக்கும் எவ்வளவோ பயபக்தியோடு தொண்டு புரிந்துவந்த புத்திர ரத்தினத்தை வெட்டுவதற்குத் தங்களுக்கும், பத்துமாதஞ் சுமந்து பெற்ற சந்தியாவளிக்கும் எப்படி மனந்துணிந்தது? பிள்ளையைக் கொல்லுகின்ற கொலைபாதகர்களுக்கு மீளா நரகமுண்டென்று சாஸ்திரங்கள் சொல்லுமேயானால், ஸ்ரீ அரிபக்தனுகவும், சற்குண விவேகியாகவு மிருக்கின்ற புத்திரனைக் கொலைசெய்கிறவர்களுக்கு நரகமுண்டோ! இல்லையோ! என்பதை யோசிக்கவும் வேண்டுமோ தன்னுயிர்போல் மன்னுயிரைக் காப்ப தன்றோ ராஜ தருமம்; அப்படியிருக்க சுயபுத்திரனிடத்தில் எள்ளளவுங்கருணையில்லாமல் கொல்லத்துணிந்தீர்களே, முரசுக்குத் தோல் வேண்டிய ஒருவன் காராம் பசுவைக் கழுத்தறுத்தது போலவும், காஷ்டம் வேண்டுமென்று கருதிய ஒருவன் கற்பகச் சோலையைக் கருவறுத்தது போலவும், அருந்தவம் புரிந்துபெற்ற அருமைச் சிறுவனைக் கொல்லத் துணிந்தீர்களே! "எத்தனையோ கோடிசெல்வம் இயல்போடிருந்தாலும் புத்திரனில்லா வாழ்வு போசனமும்நஞ்சாமோ" என்றபடி ஒருபுத்திரனைக் குறித்து எத்தனையோ பேர்கள் அருந்தவஞ் செய்கின்றார்கள். போதும், போதும், நிறுத்திக் கொண்டு என் கருத்தின்படி நடந்து தாங்களும் தர்மாங்கதனும் சுகசீவிகளாக வாழுங்கள். விரதம் விரதம் என்று ஏன் வீண் காலதாமதஞ் செய்கின்றீர்கள்? வாருங்கள் பஞ்சணைக்குச் செல்லலாம்.

உருக்:—

கழுகுமலைக்கு நாம் நேராய்—என்ற மெட்டு.

இராகம்—பைரவி] [தாளம்—ரூபகம்

பல்லவி.

விரதத்தை நான் விட மாட்டேன் உன்றன்
மீதினிற் கண்களை நாட்டேன் காட்டேன் (வி

கையை விடுவிடு விடு கடல்மிசை வரு
கொடு கடுவிட நிகர் பதகியே (வி

எட்டி விலகிச் செல் செல் செல் செல்
அடி துஷ்டி நில் நில் நில் (வி

மிக விரி பங்கய மலர்வந் தருள்
பிரமன் றனை யருள் தந்தையின் (வி

நலம் மிக்கு யர்ந்த அண்டர் முனிவர்கள்
முக்கிய மென்று கொண்ட அரிதின (வி

சரணம்.

அரசு புரியுமிந் நாட்டை யிழக்கினும்
ஆஸ்தி யொடுவரு தேட்டை யிழக்கினும்
தெரிவையர் நூறன்னப் பேட்டை யிழக்கினும்
சேர்ந்திடு மோக்ஷநல் வீட்டையும் யிழக்கினும்

திசை புகழ்கின்ற அனந்தன்
மிசை துயில் கின்ற முகுந்தன்
தசரத னருளிய மைந்தன்
சகலருந் துதிக்கும் வை குந்தன் (வி

(வ-ம்) அடி சண்டாளி! வஞ்சகமே குடிகொண்ட நெஞ்சகி நீ என்னைத் தடுக்காதே! எனக்குக் கோபத்தைக் கொடுக்காதே! எப்பொழுது வெட்டத் துணிந்தேனோ வெட்டியே தான் முடியும். வெட்டித் தருகின்றேன் வாங்கிச்செல். விடியற்காலம் வந்துவிட்டது: விரதபங்கம் நேரிடும்; சொன்னகாரியத்தை நிறைவேற்றவேண்டு மென்பதாகவே கூசி நிற்கின்றேன். என் கை நின்மேல் அற்ப மேனும் பரிஸிக்கும் விஷயத்தில் கற்பிளங்கன்னியைத் துற்குண முடைய ஒருவன் பலாத்கரித்த பாவம் வந்து சம்பவிக்கும். எட்டிப்போ! வாளால் வீசிவிடுவேன்; இதோ தர்மாங்கதன் சிரசை வெட்டித் தருகின்றேன்; வாங்கிச் செல்.

தர்மா:— அம்மா! தங்களுடைய சொல்லை மறுத்துச் சொல்லுகிறே னென்று வருத்தப்படாதீர்கள். குரோத புத்தியினால் புத்திரனைக் கொன்றா லல்லவா பாவம் சம்பவிக்கும். சகல பாவங்களையும் நிவர்த்தி செய்யும் அரிதினமாகிய ஏகாதசி விரதத்தைக் காத்துக் கொள்வதற்காக தன் புத்திரனைக் கொன்றால் பாவமுண்டோ? அந்தக் கொலைக்கு யானே சம்மதித்தபோது பாவமென்பதேது? சகல தர்ம நீதிகளையும் அறிந்திருக்குந் தாங்கள் சொல்வது தர்மமா? அதர்மமா? என்பதை ஆலோசித்துப் பாருங்கள்.

[தருமாங்கதன் கடவுளைப் பிரார்த்திக்கிறான்.

விருத்தம்.

பச்சைமா மலைபோல் மேனிப் பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே ஆயர்தங் கொழுந்தே யென்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகரு ளானே.

## [14-வது சீன்—ஸ்ரீ விஷ்ணு பிராப்தம்.]

பொது (வ-ம்.) உருக்குமாங்கதன் தலை குனிந்துநிற்கும் தர்மாங் கதன் சிரசைத் துணிக்க வாளை ஓங்குகிறான். ஸ்ரீமந் நாராயணன் லட்சுமி சமேதராய்ப் பிராப்தமாகிறார்.

அகவல்.

நிறுத்து நிறுத்து நிருபனே நிறுத்து
பொறுத்துல காளும் புரவலா நிறுத்து
பக்தியில் மிகுந்த பக்தனே நிறுத்து
சத்தியந் தனிலரிச் சந்திரா நிறுத்து
மெய்த்திரு வரினும் வெந்துயர் வரினும்
ஒத்திருக் கின்ற வுளத்தனே நிறுத்து
தான்பயந் திடுநற் றனையனை வெட்டும்
வான்புகழ் ருக்கு மாங்கதா நிறுத்து.

விருத்தம்.

நல்லுருக்கு மாங்கதனே பக்தியில்நின் போல்வரிலை நரபா லர்க்கு
கல்லுருக்குஞ் சொற்குயில்சந் தியாவளிக்கு நிகரிலைநற் கற்பு ளார்க்கு
மல்லுருக்கொண் டனையதிண்டோட்சேய்க்குநிகரிலைசுகுணமைந்தர்தம்முன்
வல்லுருக்கு மனத்தியரில் மோகனுங் கிக்கிணையார் வைய மீதே.

(வ-ம்.) என் அன்பனே! ருக்மாங்கதா! இப்பூலோகத்தில் தவத்தில் மார்க்கண்டனென்றும், ஜீவகாருண்யத்தில் சிபிச் சக்கிரவர்த்தியென்றும், சத்தியத்தில் அரிச்சந்திரனென்றும், நீதியில் நளனென்றும் பெயர் பெற்றிருக்கின்றார்கள். நீ மேலே சொல்லிய படி தவத்திலும், ஜீவகாருணியத்திலும், சத்தியத்திலும், நீதியிலும் குறைவுபடாதபடி எம்முடைய தினமாகிய ஏகாதசி விரதத்திலும் மிகச் சிறந்தவனென்று பேர் பெற்றாய். நீ அனுஷ்டித்துவரும் ஏகாதசி விரதத்தை நாங்கள்எல்லாரும் மெச்சினோம். பூலோகத்தில் என்மீதில் பக்தியுள்ள தாசர்களில் உன்னைப்பார்க்கிலும் முத்திசாதன முடையவர்களில்லை. நீயும் சந்தியாவளியும் தர்மாங்கதனும் காலமுடிவில் பரமபதம் வந்து சேருவீர்களாக.

## மங்களம்.

மாநிலத்தை யோரடி யளந்தவர்க்கு மங்களம்<br>
வாரணத்தை யாதரித்த நாரணர்க்கு மங்களம்<br>
ஞானிகள் உளத்திருக்கும் நாதனுக்கு மங்களம்<br>
நற்றுளப மாலைகமழ் பாதனுக்கு மங்களம்<br>
ஆரணத்தி னுள்ளிருக்கும் ஐயனுக்கு மங்களம்<br>
ஆழிசங்க மேந்தியபொற் கையனுக்கு மங்களம்<br>
வாரணி தனத்திருவை மார்பகத்தி லென்றுமே<br>
வைத்திருக்கு முத்தமர்க்கு நித்யசுப மங்களம்

சுபம்! சுபம்! சுபம்!

# எமது விண்ணப்பம்.

நல்வினை தீவினைகளால் அடையும் இறுதிப் பயன்கள் இன்னதென்பதை மக்கள் அறிந்தொழுகுவதற்காகவே ‘நடித்துக் காட்டல்’ என்னும் நாடக முறையை உலகிற்கு அறிஞர்கள் வழங்கினர். கலைஞான மறுபத்திநான்கினுள் ஒன்றாகிய நாடகக் கலையை நன்கு விருத்திக்குக் கொண்டு வருவதும், பார்ப்போர் கேட்போர் மனதைப் பரவசப் படுத்தச் செய்வதும், மனத்தின்கண் ணுறையும் மாசுகள் நீங்கி மெஞ்ஞான வுணர்வை ஒளிரச்செய்வதும் வித்துவ சிகாமணிகளையே பொறுத்து நிற்கின்றது.

எனவே, இந்நூலாசிரியரான எம் குருநாதரானவர் இயற்கையாகவே பாடும் சங்கீத சாதுர்யராகவும், மேதாவிகள் வியக்கத் தரும் வித்வக் களஞ்சியமாகவும், சத்கதாப் பிரசங்கியாகவும் விளங்கிவந்ததுடன், மனதை யுருக்கும் வருணனையுள்ள பதங்களமைத்துப் பாடும் போற்றல் மிகுதியும் வாய்க்கப் பெற்றவராவர். இவ்வாசிரியர் பெருமான் சுபதினங்களில் செய்துவரும் காலக்ஷேபங்களில் உருக்குமாங்கதன் சரிதமும் ஒன்றாகும். இதன் சுவையை அறிந்த இந்நகர், முத்துராமன்பட்டி ஜமீன்தாரும், பிரபல பஞ்சு வர்த்தகரும், ஸ்ரீ ரங்கநாயகர் ஆலய ஸ்தாபகருமான தி. சி. சு. அழகுமலை நாடார் அவர்கள் குமாரர் திரு. கோபாலகிருஷ்ண நாடார் அவர்களும், போஜனசாலை திரு உ. ச. சுப்பைய நாடார் அவர்களும் இதனை நாடக ரூபமாய் ஆக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, நாடகம் முறையாய் பகுதிகள், சீன்கள், சம்பாஷணைகள், தர்க்கங்கள், ஆகிய லட்சணங்களுடன் மிகத் தெளிவாய் அமைத்து நடிப்பவர் படிப்பவர் யாவர்க்கும் ஏற்றமுடையதாய் அமைத்திருக்கின்றனர்.

குண்டாறென்னும் அழகிய ஆற்றங்கரையில் நீர்வளம், நிலவளம் பொருந்தி செல்வ வளத்தால் திருந்தி, கல்விச்சாலையின் கண்ணியம் விளங்கப் பெற்ற இலுப்பையூர் நாடார்களது வேண்டுகோட்படியும், குருநாதர் கட்டளையிட்டிருந்தபடியும் பொதுஜன நன்மையார்த்தமாய் இந்நூலை அச்சிட்டு வெளியிட்டுள்ளேன்.

இந்நூலானது, படிப்பவர், நடிப்பவர், காலக்ஷேபஞ் செய்பவர் ஆகிய யாவருக்கும் நன்கு பயன்படத்தக்கதா யமைத்துள்ளதால், எல்லோரும் வாங்கி ஆனந்திக்க வேண்டுகிறேன்.

குறிப்பு:— நாடகமாய் நடிக்கவும், காலக்ஷேபம் செய்யவும் விரும்புகிற கிராமவாசிகளுக்கும் தக்கவாறு பயிற்சி யளிக்கப்படும். விபரங்கட்கு நேரில்.

☞ பெ. வரத்தால் பெரியவ நாடார்,
தேவாலய ஓதுவார், விருதுநகர்.

67837
O-2/MKK,R